அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM
Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

வைகறை

பொழுது-05 இதழ் 167 புரட்டாதி 05, 2008 September 05, 2008

பல் வைத்திய நிலையம்
உங்கள் பற்கள் முரசு என்பவற்றை உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் பேணுவதற்கு நாடுங்கள்
Dr. Iru Vijayanathan
3150 Eglinton Ave. E
Markham & Eglinton
416.264.3232
WALK IN DENTAL CLINIC

பாராளுமன்றத் தேர்தல்

எதிர்வரும் ஒக்டோபர் மாதம், கனேடிய மக்கள் மீண்டுமொரு பாராளுமன்றத் தேர்தலுக்கு முகம் கொடுக்க உள்ளனர். கனேடியப் பிரதமர் Stephen Harper உடன் இவ்வாரம் சந்தித்துப் பேசிய லிபரல் கட்டித் தலைவர் Stephén Dion, இத்தேர்தல் தவிர்க்க முடியாதது என்று தெரிவித்திருக்கின்றார். பிரதமருடனான சந்திப்பின் போது “நிச்சயிக்கப்பட்ட தேர்தல் தேதி” சட்ட மூலத்தை மதித்து, அடுத்த ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை தேர்தலைத் தாமதிக்கும் படி பிரதமரைத் தாம் கேட்டுக்கொண்ட போதிலும், பாராளுமன்றத்தைக் கலைத்து, உடனடித் தேர்தல் ஒன்றிலேயே பிரதமர் ஆர்வமாக இருப்பதாகவும் எதிர்கட்சித் தலைவர் தெரிவித்திருக்கின்றார். சிறுபான்மைப் பாராளுமன்றம் செயலிழந்து வருவதாகக் கூறும் பிரதமர் தரப்பில், குறிப்பிட்ட தேதிப்படி அடுத்த ஆண்டு ஒக்டோபர் மாதம்வரை சிறுபான்மை அரசுக்கு இடையூறு ஏதும் விளைவிக்காமல் இருப்பதை எதிர்கட்சித் தலைவர் உறுதி செய்ய முடியுமா என்று கேட்கப்பட்டதாகவும், அக்கோரிக்கையை Dion மறுத்து விட்டதனை அடுத்து, பாராளுமன்றத்தைக் கலைத்து உடனடியான தேர்தலுக்கான தேதியை அறிவிக்கும்படி ஆளுனரைப் பிரதமர் கேட்டுக்கொள்ள இருப்பதாகப் பலமாக நம்பப்படுகின்றது. இது குறித்து ஆலோசிக்க, இவ்வார இறுதியில் பிரதமர் ஆளுனரைச் சந்திக்க விருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மீண்டும் ஒரு தேர்தலுக்குத் தாம் தயாராக இருப்பதோடு இத்தேர்தலில் வெற்றியும் லிபரல் கட்சிக்கே என்று எதிர்க்கட்சித்தலைவர் தெரிவித்திருக்கின்றார். இருப்பினும், Globe & Mail பத்திரிகையினால் இவ்வாரம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில், இத்தேர்தலில் கன்சவேட்டிவ் கட்சி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவதற்கு வாய்ப்புக்கள் பலமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வார இறுதிக்குப்பின் பாராளுமன்றம் கலைக்கப்படுமானால், ஒக்டோபர் மாதம் 14ம் திகதி கனேடிய மக்கள் மீண்டும் வாக்குச் சாவடிகளுக்குச் செல்ல வேண்டியிருக்கும்.

டொராண்டோ சர்வதேச திரைப்பட விழாவில் நாளையும், அடுத்தவாரமும் ப்ரியதர்ஷனின் “கஞ்சீவரம்” - தமிழ் திரைப்படம் திரையிடப்படுகின்றது. விபரம் பக்கம் 23.
படம் - நன்றி: www.kollywoodtoday.com

சர்வ வல்லமையின் முடிவு
பக்கம் - 05

13 வது திருத்தம் தீர்வாகுமா?
பக்கம் - 09

தாங்குமா இனியும்?
பக்கம் - 12

நம்பிக்கைகளை உருவாக்குவோம்
பக்கம் - 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kumar Muthusamy

Sales Representative

Dir: 416.518.0118

Your peace of mind is my goal

Buy, Sell or Rent ......
Home, Business
Commercial Property

Bedrooms: 4 Washrooms: 4
Sandalwood/Chingcousy

Bedrooms:3+2 Washrooms: 2
Orton Pk. / Slan

Bedrooms:3+1 Washrooms: 4
Bovaird/Creditview

Bedrooms: 3 Washrooms: 2
Staines/Steeles

Bedrooms: 3 Washrooms: 2
Passmore/Markham Rd

Bedrooms: 4 Washrooms: 4
Finch/Staines

FREE

(Certain Conditions Apply)



We Arrange
1st, 2nd & 3rd Mortgages
For Residential and
Commercial Properties

GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6963

HomeLife GTA
GTA Realty Inc., Brokerage*

206 - 1711 McCowan Rd., Scarborough, ON. M1S 3Y3
Not Intended to solicit properties currently listed for sale or buyers under contract.
*Each office is independently owned and oprerated.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகறை

பொழுது-05 ’ இதழ் 167 ’ புரட்டாதி 05, 2008

சொற்கோட்டம் இல்லாது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மைபெறின்

அறிந்த பேயும் நன்கறிந்த பேயும்

கடந்தவாரம் ரொறொன்ரோவில் மனச்சாட்சியின் குரல் என்ற தலைப்பில் இலங்கை இனமுரண்பாட்டின் மூலகாரணங்கள் மற்றும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை கனடியர்கள் மத்தியில அதிகரிக்கும் நோக்குடன் ஓர் கண்காட்சி நடைபெற்றது. கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த புகைப்படங்கள் ஆவணப் படங்கள் தமிழ்மக்களின் விடுதலை என்ற பெயரில் விடுதலைப்பலிகள் அமைப்பினால் கடந்த கால் நூற்றாண்டிற்கு மேலாக நடாத்தப்பட்ட சகோதரப்படுகொலைகள், அரசியற்படுகொலைகள், இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் வதைமுகாம்கள் பற்றிய விபரங்களைக் கொண்டிருந்தன. இவை பார்வையாளர்களாக வந்திருந்த தமிழர்களின் மனச்சாட்சியில் ஒரு சிறு நெருடலையேனும் ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆயினும் தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் கடந்த அரை நூற்றாண்டிற்கு மேலாக தொடர்ச்சியாக நாட்டை சிங்கள மக்களின் பெரும்பான்மை அங்கீகாரத்துடன் ஆண்டுவந்த அரசாங்களினால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகள் போர்க்குற்றங்கள் இனச்சுத்திகரிப்பு மற்றும் இன்று வரை நாட்டின் தென்பகுதியல் இயங்கும் அரச அங்கீகாரம் பெற்ற வதை முகாம்கள் பற்றிய விபரங்கள் காட்சிக்கு வைக்கப்படாததால் பார்வையாளர்கள் மத்தியில் இருந்த சிங்களவர்களின் மனச்சாட்சியில் நெருடலையோ அல்லது இலங்கை அரசின் ஜனநாயக வேடத்தை இன்னமும் நம்புகின்ற கனடியர்கள் மத்தியில் உண்மையான விழிப்புணர்வையோ இக்கண்காட்சி ஏற்படுத்திருக்கும் என்பது ஐயமே.

இக்கண்காட்சி பற்றிய ஒரு சிறு அறிமுகத்தில் அறிந்த பேய்க்கும் நன்கறிந்த பேய்க்கும் இடையே அகப்பட்டிருக்கும் இலங்கை மக்கள் அனுபவிக்கும் துயரங்களை விபரிக்கும் கண்காட்சி இதுவென குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் அரை நூற்றாண்டிற்கு மேல் ஆட்சிசெய்வதால் நன்கறிந்த பேய் இலங்கை அரசாங்கம் எனவும் கால்நூற்றாண்டாக மேல் நாட்டாமை செய்வதால் அறிந்த பேய் விடுதலைப் புலிகள் அமைப்பு எனவும் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்..

அறியாத தேவதைகளை விட அறிந்த பேயே நன்று என்பது பழமொழி. ஆனால் இங்கு அறிந்த பேயை விட நன்கறிந்த பேயைத் தெரிவு செய்வது தான் புத்திசாலித்தனம் என்கின்ற செய்தியே இக்கண்காட்சி மூலம் கொடுக்கப்படுகின்றது. ஆனால் இதில் இலங்கையில் வாழும் சிங்களவர்களும் தமிழர்களும் முஸலீம்களும் கடந்த அரை நூற்றாண்டாக நன்றாகவே பேய்க்காட்டப்பட்டுள்ளார்கள் என்பதுதான் யாராலும் மறுக்க முடியாத உண்மை.

நன்கறிந்த பேய்களும் அறிந்த பேய்களும் வெறும் ஆகாயத்தில் இருந்து இலங்கையில் குதித்தவை அல்ல. சிங்கள அரசியல் சிவில் சமூகமும் தமிழ்ச் சமூகமும் பிரசவித்தவையே இவை.. பேய்களை மட்டுமே பிரசவிக்கும் ராட்சஷ சமூகமல்ல எமது தமிழ்ச்சமூகம்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து 1983ம் ஆண்டு வரையில் அகிம்சையிலும் சாத்வீகத்திலும் நம்பிக்கை கொண்ட தேவதைகளை மட்டுமே தமது அரசியல் தலைமையாக தமிழ்ச் சமூகம் தோற்றுவித்திருந்தது. நன்கறிந்த பேயினிடம் தேவதைகள் தோற்றுப் போன நிலையிலேயே தமிழ்ச் சமூகத்திடம் இருந்தும் பேய்கள் தோன்றின. இலங்கையின் முதலும் மூத்ததுமான சிங்களப் பேரினவாதப் பேய் அங்கு ஆட்சி செய்யும் வரையில் தமிழ்ச் சமூகத்திலிருந்து மட்டுமல்ல ஏனைய சமூகங்களில் இருந்து தொடர்ந்தும் பேய்கள் தோன்றுவது தவிர்க்க முடியாது. இன்று இலங்கையில் தமிழ் மக்கள் படும் துயரங்களுக்கு எல்லாம் மூல காரணமான மகாவம்ச மாயை சிங்கள அரசியல் கலாச்சாரத்தில் இருந்து முற்றாக அகற்றப்படும் வரையில் அரை நூற்றாண்டிற்கு மேலாக ஆட்சிலுள்ள நன்கறிந்த பேயை ஓட்டிவிடவும் முடியாது.

மனச்சாட்சி தமிழ் மக்களுக்கு மட்டுமே தேவையானதொன்றல்ல சிங்கள மக்களுக்கும் அது உள்ளது. அதனையும் நெருடி விடுகின்ற கடப்பாடு சிங்கள சிவில் சமூகத்திற்கும் உண்டு. அதற்கான கண்காட்சிக்கு தேவையான புகைப்படங்களும் ஆவணங்களும் சாட்சியங்களும் எராளமாகவே உண்டு. ஆனால் கொழும்பிலோ அல்லது உலகின் எந்தப் பகுதியிலோ இதுவரையில் அவ்வாறானதொரு நிகழ்வு இடம் பெறவில்லை என்பது தான் தமிழ்மக்கள் முன் துருத்திக் கொண்டு நிற்கும் கசப்பான யதார்த்தம்

— · — · —

ஒருமுனைப்பட்ட உலக ஒழுங்கின் முடிவின் ஆரம்பம்?

சர்வதேச அரசியலில் “விளையாட்டு விதிகள்” மாற்றமடைந்துகொண்டு வருகின்றன என்பதில் எவருக்காவது சந்தேகம் இருந்திருக்குமேயானால் கடந்த சில வாரத்தைய நிகழ்வுகள் அச் சந்தேகத்தை அகற்றியிருக்க வேண்டும். ஜோர்ஜியாவில் இருந்து பிரிந்து சென்றிருக்கும் தெற்கு ஒசெட்டியா மற்றும் அப்காசியா பிராந்தியங்களின் சுதந்திரப் பிரகடனத்தை அங்கீகரித்த ரஷ்ய பாராளுமன்றத்தின் செயலை நிராகரிக்குமாறு ரஷ்யத் தலைவர்களை கடந்த வாரம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் வலியுறுத்திக் கேட்டிருந்தார். அவ்வாறு அவர் கோரிக்கை விடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் தெற்கு ஒசெட்டியாவினதும் அப்காசியாவினதும் சுதந்திரத்தை ரஷ்யா அங்கீகரிப்பதாக அதன் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வெடேவ் பிரகடனம் செய்திருந்தார். ரஷ்யாவின் செய்தி சந்தேகத்திற்கிடமில்லாதது ஆகஸ்ட் 7 ஆம் திகதி தெற்கு ஒசெட்டியா மீது ஜோர்ஜியப் படைகள் தொடுத்த தாக்குதலையடுத்து மூண்ட போரின் விளைவுகள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தக் கூடியவவை அல்ல. அமெரிக்கா எதைச் சொன்னாலும்இ எதைச் செய்தாலும் அந்த விளைவுகள் மாற்றியமைக்கப்படப்போவதில்லை என்பதே அச் செய்தியாகும். தெற்கு ஒசெட்டியாவுக்கும் அப்காசியாவுக்கும் பொருளாதார, சமூக, மனிதாபிமான மற்றும் இராணுவ உதவிகளை வழங்குவதற்காக அப்பிராந்தியங்களுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளப் போவதாகவும் ரஷ்ய ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

> “ஒரு முனைப்பட்ட உலக ஒழுங்கு என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது மாத்திரமல்ல, அடைய முடியாததுமாகும். ஏனென்றால், இன்றைய உலகிலே அத்தகைய உலக ஒழுங்கு ஒன்றை வலிந்து நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான அரசியல் பலமோ அல்லது பொருளாதார வளமோ எவரிடமுமேயில்லை”

இந்த நிகழ்வுப் போக்குகள் அமெரிக்க மேலாதிக்கத்தின் கீழான ஒரு முனைப்பட்ட உலக ஒழுங்கு (Concept of unipolar world) எதிர்நோக்க ஆரம்பித்திருக்கின்ற பாரதூரமான சவால்களை தெளிவாக வெளிக்காட்டுகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிக்கும் கோட்பாடுகள் குறித்து விளக்கமளித்த ரஷ்ய ஜனாதிபதி மெட்வெடேவ் அமெரிக்கா தலைமையிலான ஒருமுனைப்பட்ட உலக ஒழுங்கை நிராகரித்ததுடன் ரஷ்யாவின் நலன்களுக்கு அவசியமான செல்வாக்கு எல்லைகளை மேற்குலகம் மதித்து நடக்க வேண்டும் என்றும் எச்சரிக்கை செய்திருக்கிறார். உலகம் பல முனைப்பட்ட ஒழுங்குடையதாக (Multi-polar) இருக்க வேண்டும். ஒரு முனைப்பட்ட உலக ஒழுங்கு ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதல்ல. மேலாதிக்கம் ஏற்புடையதல்ல என்று ரஷ்ய அரசாங்கத் தொலைக்காட்சி சேவைக்கு அளித்த பேட்டியொன்றில் மெட்வெடேவ் தெரிவித்திருக்கிறார். “சகல தீர்மானங்களுமே ஒரு தேசத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற உலக ஒழுங்கை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அத்தகைய உலக ஒழுங்கு உறுதிப்பாடு அற்றது என்பதுடன் மோதல்களுக்கு வழிவகுக்கக்கூடியதுமாகும். அயல் பிராந்தியங்களிலும் அதற்கு அப்பாலும் ரஷ்யாவுக்குப் பிரத்தியேக நலன்கள் இருக்கின்றன. ரஷ்யா அதன் பிரஜைகளையும் வர்த்தக நலன்களையும் பாதுகாக்கும் பணிக்கு அதி முன்னுரிமை கொடுத்துச் செயற்படுகிறது. எவராவது ஆக்கிரமிப்புத் தன்மையான அத்துமீறல்களைச் செய்தால் நாம் திருப்பி தாக்குவோம். இதைச் சகலரும் விளங்கிக்கொள்ள வேண்டும்” என்று மெட்வெ டேவ் கூறியிருக்கிறார்.

ஒருமுனைப்பட்ட உலக ஒழுங்கிற்கு எதிராக மெட்வெடேவ் தெரிவித்திருக்கும் இக் கருத்துக்களை நோக்கும்போது முன்னாள் ரஷ்ய ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான விளாடிமிர் புட்டின் கடந்த வருட இறுதியில் ஜேர்மனியின் முனிச் நகரில் பாதுகாப்பு விவகாரம் தொடர்பான மகாநாடொன்றில் கலந்துகொண்டு ஆற்றிய உரை

(8ம் பக்கம் பார்க்கவும்)

Vaikarai
2680 Matheson Blvd. East, Suite 102
Mississauga, ON L4W 0A5
Tel: 416-640-5434 Fax: 416-646-5868
e- mail: editor@vaikarai.com
www.vaikarai.com

ஆசிரியர் குழு
வில்பிரெட் வில்சன்
நேசன் பொன்னுத்துரை
ரவி பொன்னுத்துரை

விளம்பரம்
ரவி பொன்னுத்துரை

வடிவமைப்பு
ரமேஸ்

தட்டச்சு
வாணி பாலா, ராதிகா சுதாகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவுக்கு தலிபான் எச்சரிக்கை

ஆப்கானிஸ்தானில் இருந்து கனேடியத் துருப்புக்கள் உடனடியாக வெளியேறாத பட்சத்தில் கனேடிய உதவியாளர்கள் (aid workers) தொடர்ந்தும் கொல்லப்படுவர் என்று தலிபான் இயக்கம் எச்சரித்திருக்கிறது.

சமீபத்தில் ஆப்கானிஸ்தானில் பணியில் ஈடுபட்டிருந்த International Rescue Committee யைச் சேர்ந்த கனேடியப் பெண் உதவியாளார்கள் இருவர் தலிபான் இயக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சில நாட்களுக்குப்பின் கனேடிய மக்களுக்கு எனக் குறிப்பிட்ட இக்கடிதத்தில், கனேடியர்களை கொலை செய்வது தமது விருப்பமாக இல்லாத போதும் அமெரிக்காவின் முன்னெடுப்புகளை கனடா தொடரும் போது இவ்வாறான நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதது என்று தலிபான் குறிப்பிட்டிருக்கிறது.

நடுநிலைமைப் போக்கினைக் கொண்டிருக்காத காரணத்தினால் கனடா தனது தேசிய மற்றும் சர்வதேச சுயமரியாதையை இழந்து விட்டதாக குறிப்பிட்டிருக்கும் இக்கடிதத்தில், ஆப்கானிஸ்தானில் கனேடிய ஆக்கிரமிப்பை நிறுத்தும்படி கனேடிய மக்கள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதனால், இரு தரப்பு மக்களும் கொல்லப்படுவது நிறுத்தப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

குழந்தைகள் உட்பட பல ஆப்கானிய மக்கள் கொல்லப்படுவதற்கும், காயமடைவதற்கும் கனடா காரணமாக இருப்பதாகக் குற்றம் சாட்டியிருக்கும் தலிபான் இயக்கம், கனேடியர்கள் ஆப்கானிஸ்தானில் கொல்லப்படுவதற்கும் கனேடிய அரசே காரணம் என்பதை கனேடிய மக்கள் உணரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறது. கனேடிய அரசு, தவறான காரணிகளின் அறிவுறுத்தலின் பேரில் சில தவறான கொள்கைகளைக் கொண்டிருப்பதாகவும் இக்கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இக்கடிதம் குறித்து இருநாட்டு தூதரகங்களும் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. இருப்பினும், இக்கடிதம் தலிபான் இயக்கத்தின் வெறும் பிரச்சார உத்திகளில் ஒன்று என்று, பிரதமர் ஹார்ப்பரின் பேச்சாளர் கூறியிருக்கின்றார்.

இக் கடிதம் குறித்து பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த தலிபான் இயக்கப் பேச்சாளர் Qari Mohammad Yussef, அமெரிக்காவின் கொள்கைகளுக்கு கீழே கனடா இயங்கி வருகிறது என்றும், இது பாரதூரமான தவறு என்றும் கூறியிருப்பதோடு, அமெரிக்காவிற்காக கனடா தனது அரசியலைத் தியாகம் செய்வது கூடாது என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் ஆப்கானிஸ்தானில் 90க்கும் மேற்பட்ட கனேடியத் துருப்புக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

முன்னாள் கனடிய பிரதமர் கண்டனம்

முன்னாள் கனேடியத் தலைவர்கள் பேணி வந்த சீன அரசுடனான நல்லுறவை பிரதமர் ஸ்ரீபன் ஹார்ப்பர் சிதைத்து விட்டிருப்பதாக முன்னாள் பிரதமர் Jean Chrétien குற்றம் சாட்டியிருக்கின்றார்.

முன்னாள் தலைவர் John Diefenbaker முதல் அனைத்து தலைவர்களும் சீன அரசுடனான உறவினைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வந்திருந்த போதிலும், தற்போது சீனாவில் இடம் பெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப விழாவில் சமூகமளிக்கத் தவறியதால் பிரதமர் ஹார்ப்பர் சீனாவுடனான உறவில் களங்கம் ஏற்படுத்தியிருப்பதாக கடந்தவாரதம் Jean Chrétien சாடியிருக்கின்றார். பிரதமரின் இந்நடவடிக்கை ஓர் வரலாற்றுத் தவறு என்று கூறியிருக்கும் இவர் இதனால் சீனாவுடனான கனேடிய வர்த்தகத்திற்கு பல பாதகமான விளைவுகள் ஏற்படலாம் என்றும் எச்சரித்திருக்கின்றார். உலக அளவில், பொருளாதாரத்தில் தற்போது இரண்டாவது இடத்தில் இருந்து வரும் சீனா, இன்னும் 50 வருடங்களில் முதலாவது இடத்தைப் பிடிக்கும் என்றும் Chrétien குறிப்பிட்டிருக்கின்றார்.

கடந்த காலங்களில் Diefenbaker, Trudeau உட்பட நாம் எல்லோரும் சீனாவுடனான நல்லுறவை பேணிவந்திருக்கிறோம். ஆனால், இவ்வாறு கட்டியமைக்கப்பட்ட பாலத்தை தற்போது உடைக்க முயற்சிப்பது தவறு என்றும் இவர் கண்டித்திருக்கிறார்.

சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற திபெத் கிளர்ச்சியின் போது சீன அரசின் எதிர் நடவடிக்கைகளை ஜனநாயக விரோதச் செயல் என்று கனடா உட்பட சர்வதேச நாடுகளும் கண்டித்திருந்தன. இருப்பினும், இம்மாதம் பீஜிங்கில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்பவிழாவில் 80 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் சமூகமளித்திருந்தனர். ஆனால், கால அட்டவணை இடம் தரவில்லை என்று கூறி கனேடியப் பிரதமர் கலந்து கொள்ளவில்லை. கனேடிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் எமர்சன் மட்டுமே சமூகமளித்திருந்தார்.

சீனாவுடனான பிரதமரின் போக்கினை கண்டித்திருக்கும் Chrétien, அமெரிக்காவுடன் பிரதமரின் நெருக்கம் குறித்தும் சாடியிருக்கின்றார். அமெரிக்காவின் புதிய செல்லப்பிராணி (Lap Dog) ஹாப்பர் என்றும் கூறியிருக்கின்றார். முன்னாள் கனேடியப் பிரதமர்கள் அனைவரும் சுதந்திரமாக முடிவுகளை எடுத்திருந்ததாகவும், ஆனால் பிரதமர் ஹாப்பர் அமெரிக்க அதிபர் ஜோர்ச் புஷ் இன் முடிவுகளை ஒட்டியே தனது முடிவுகளையும் எடுத்து வருவதாகவும் முன்னாள் பிரதமர் குற்றம் சாட்டியிருக்கின்றார்.

ஒபாமா அதிகாரபூர்வமாக தெரிவு

அதிபர் வேட்பாளர் வாய்ப்பை பெற அவரை எதிர்த்து போட்டியிட்ட ஹிலாரி கிளிண்டன், வாக்கெடுப்பு இல்லாமல் ஒபாமாவை வேட்பாளராக தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொண்டதை அடுத்து அவர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதிபர் பதவிக்கான வேட்பாளரை அதிகாரபூர்வமாக தேர்ந்தெடுப்பதற்காக ஜனநாயக கட்சியின் மாநாடு டென்வர் நகரில் இவ்வாரம் நடைபெற்றது. இதில் ஜனநாயக கட்சியை சேர்ந்த தொண்டர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் ஒபாமாவை அதிபர் வேட்பாளராக தேர்ந்தெடுக்குமாறு ஹிலாரி கேட்டுக் கொண்டார். வழக்கமாக ஒவ்வொரு மாநிலத்தின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டு வாக்குகள் எண்ணப்பட்டு வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கம்.

ஆனால் இந்த நடைமுறையை கைவிட்டு வாக்கெடுப்பு இன்றி அனைவரும் ஒன்றுபட்டு ஒபாமாவை அதிபர் வேட்பாளராக தேர்ந்தெடுக்குமாறு ஹிலாரி கிளிண்டன் கேட்டுக் கொண்டார். இதனை பெரும் ஆரவாரத்தோடு பிரதிநிதிகள் மற்றும் தொண்டர்கள் ஏற்றுக் கொண்டதை அடுத்து பாரக் ஒபாமா அதிபர் வேட்பாளராக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டார்.

ஹிலாரி கிளிண்டன் பேச எழுந்தபோது அவரது ஆதரவாளர்கள் ஆரவாரம் செய்தனர். பின்னர் அவர் ஒபாமாவுக்கு பக்கபலமாக அனைவரும் ஒன்று சேர்ந்து செயல்பட வேண்டும் என்று கூறியபோது தொண்டர்கள் நெகிழ்ச்சி அடைந்தனர். முன்னதாக அவர் ஒபாமாவை முழு மனதோடு ஆதரிப்பதாக

வும் அவர் அமெரிக்க அதிபராக பொருத்தமானவர் என்றும் ஹிலாரி கூறினார்.

இதனிடையே ஒபாமா அமெரிக்க அதிபராக அனைத்து தகுதியும் உடையவர் என்று முன்னாள் அதிபர் கிளிண்டன் கூறியுள்ளார். ஒபாமா அமெரிக்க அதிபராக தயாராகி விட்டதாகவும் கிளிண்டன் ஜனநாயக கட்சி மாநாட்டு பிரதிநிதிகள் மத்தியில் கூறியுள்ளார். ஒபாமா வேட்பாளர் ஆவதை தான் முழு மனதோடு முன்மொழிந்து, வழிமொழிவதாகவும் கிளிண்டன் கூறி, தொண்டர்களை மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தினார்.

மேற்குலக நாடுகள் கடும் கண்டனம்

ஜோர்ஜியாவிலிருந்து பிரிந்து சென்ற தென் ஒசெட்டியா மற்றும் அப்ஹாஸியா மாகாணங்களின் சுதந்திரப் பிரகடனத்தை ரஷ்யா அங்கீகரித்தமைக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் தென் ஒசெட்டியாவை மீண்டும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக ஜோர்ஜியா மேற்கொண்ட முயற்சிகளை இம்மாத முற்பகுதியில் ரஷ்ய படைகள் முறியடித்திருந்தன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே இரு பிராந்தியங்களையும் இறையாண்மை கொண்ட நாடுகளாக ரஷ்யா அங்கீகரித்துள்ளது. இதற்கான தீர்மானம் ரஷ்ய பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜோர்ஜிய ஜனாதிபதி மிக்கெய்ல் சாகஸ்விலி கிளர்ச்சியாளர்களுக்கெதிராக மேற்கொண்டுவரும் இனப்படுகொலையை தவிர்ப்பதற்கு தனக்கு இந்நடவடிக்கையைத் தவிர வேறு தெரிவு இருக்கவில்லையென பி.பி.ஸி.க்கு வழங்கிய நேர்காணலில் மித்விடேவ் தெரிவித்துள்ளார். அத்துடன், கொசோவாவின் சுதந்திரப் பிரகடனத்தை மேற்குலக நாடுகள் அங்கீகரித்துள்ளமையையும் மித்விடேவ் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ரஷ்யாவின் இந்நடவடிக்கையினை பொறுப்பற்ற செயலென தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இது பிரான்ஸின் மத்தியஸ்தத்துடன் அடையப்பட்ட அமைதி உடன்படிக்கைக்கும் ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானங்களுக்கும் எதிரானதெனத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை வகிக்கும் பிரான்ஸ், ரஷ்யாவின் இந்நடவடிக்கையை கண்டித்திருப்பதுடன்

இது ஜோர்ஜியாவின் இறையாண்மைக்கு எதிரானதும் ஏற்றுக்கொள்ள முடியாததுமான நடவடிக்கையென தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் இந்நடவடிக்கை ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானங்கள் பலவற்றை மீறியிருப்பதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலீசா ரைஸ் தெரிவித்துள்ள அதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களான பராக் ஒபாமா மற்றும் ஜோன் மக்கெய்னும் ரஷ்யாவுக்கு தமது கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஷாரப்பின் முடிவும் சர்வதேச அரசியலும்

தெற்காசியாவில் மிகவும் அரசில் செல்வாக்கும் பலமும் கொண்டிருந்த பாகிஸ்தானிய அதிபர் பெர்விஷ் முஷாரப், அவருக்கு ஏற்பட்டிருந்த பல்வேறு அரசியல் நெருக்கடிகளைத் தொடர்ந்து, கடந்த வாரம் அதிபர் பதவியை இராஜினாமாச் செய்திருக்கின்றார். இவரது இராஜினாமா, பாகிஸ்தானில் மட்டுமல்லாமல் சர்வதேச அரசியல் சூழ்நிலையிலும் சில பல மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

சூட்டி
chootty@vaikarai.com

இந்நிலையில், கடந்த ஓர் தசாப்தமாக பாகிஸ்தானின் சர்வ வல்லமை படைத்தவராக விளங்கிய முஷாரப், தனது ஆட்சிக் காலத்தில் பதித்திருந்த சுவடுகள், அவரது இராஜினாமாவுக்குப் பின்னர் பாகிஸ்தான் எதிர்நோக்கியிருக்கும் சலால்கள், பாகிஸ்தானில் ஏற்பட்டிருக்கும் தலைமை மாற்றத்தை தொடர்ந்து இந்தியபாகிஸ்தான் நாடுகளுக்கிடையேயான உறவு மற்றும் தீவிர வாதத்துக் கெதிரான தனது (ஆக்கிரமிப்புப்) போரில் அதிபர் முஷாரப்பினை தனது நண்பனாக ஏற்படுத்தியிருந்த அமெரிக்காவின் புதிய அணுகுமுறை போன்ற விடயங்கள் முக்கியம் பெறுகின்றன.

ஏறக்குறைய, கடந்த ஓர் தசாப்தமாக பாகிஸ்தானின் பலம் பெருந்திய மனிதர் முஷாரப். பாரிய பொருளாதார மற்றும் பாதுகாப்புச் சவால்களை எதிர் நோக்கியிருக்கும் இந்நாட்டில், ஓர் சகாப்தத்தின் முடிவை இவரது இராஜினாமா குறிப்பிடுகின்றது. பல்வேறு விடயங்களுக்காக முஷாரப் நினைவு கூரப்படலாம். மக்களால் தெரிவு செய்யப்பட்டிருந்த அரசாங்கம் ஒன்றினை இராணுவச் சூழ்ச்சி ஒன்றினால் கைப்பற்றியிருந்த முஷாரப், இந்திய-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையேயான உறவில் ஏற்பட்டிருந்த விரிசல் அதிகமாவதற்கு முக்கிய காரணமாகவும் இருந்திருக்கின்றார். 2000ம் ஆண்டு செப்டெம்பர் 11இல் இடம் பெற்ற அமெரிக்கா மீதான தீவிரவாதத் தாக்குதலைத் தொடரந்து அமெரிக்காவுக்கு தனது முழு ஆதரவை வழங்குவதாக அறிவித்திருந்ததன் மூலம், தீவிரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் யுத்தத்தில் அதிபர் முஷாரப் முக்கிய பங்களிப்புச் செய்திருந்தார்.

பாகிஸ்தானின் பல்வேறு வாரியங்களும் நவீனமயப் படுத்தப்பட்டதற்கு முஷாரப் காரணமாக இருந்த போதிலும், அரச இயந்திரத்தை தனக்குச் சாதகமாக, தறான முறையிலும் பயன்படுத்தியிருந்த காரணத்தினால், அவர் அரசாங்கத்தைக் கைப்பற்றிய போது இருந்ததைவிட, ஓர் பலவீனமான, சிதறுண்டு போயிருக்கும் பாகிஸ்தானையே தற்போது விட்டுச் சென்றிருக்கின்றார்.

சில, பல சமூக மாற்றங்களைச் செய்ய முற்பட்டிருந்த போதிலும், பாகிஸ்தானின் ஜனநாயகத்தைப் பொறுத்தவரை வரலாறு இவரை மன்னிக்கப் போவதில்லை. தேர்தல்களில் மோசடி செய்திருக்கின்றார் என்பதோடு, தனது அரசியல் எதிரிகளை அழித்தும் வந்திருக்கின்றார். ஏறக்குறைய ஓர் சர்வாதிகாரியாகவே விளங்கியிருக்கின்றார்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷிற்கு தமது பலமான ஆதரவை பகிரங்கமாக அறிவித்தது, ஓர் இஸ்லாமிய நாட்டின் அதிபரான முஷாரப் சர்வதேச அரசியலில் எடுத்திருந்த முக்கியமான முடிவுகளில் முதன்மையானது. ஆப்கானிஸ்தானில் தலிபான்களைக் கைவிட்ட முஷாரப், அமெரிக்காவின் இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் மிகவும் நெருக்கமான துணைவராக இருந்திருக்கின்றார். இதற்கு பிரதியுபகாரமாக, அமெரிக்கா 2001ம் ஆண்டிலிருந்து சுமார் 10பில்லியன் டொலர்களை பாகிஸ்தானுக்கு இராணுவ உதவித்தொகையாக வழங்கியிருக்கின்றது.

ஆனாலும், அமெரிக்கா-பாகிஸ்தான் கூட்டணி ஒன்றும் பாரிய அளவில் இருதரப்பினருக்கும் பலனளித்திருக்கவில்லை. ஆப்கானிஸ்தானுக்கு நெருக்கமான பாகிஸ்தானின் எல்லைப் புறங்கள் இன்னமும் அல்கைதா இயக்கத்தின் சரணாலயமாகவே இருந்து வருகின்றன. அத்துடன், பாகிஸ்தானுக்கு உள்ளேகூட தலிபானின் புதிய கிளர்ச்சிகள் படிப்படியாக பலமடைந்து வருகின்றன. சமீபத்தில் இராணுவச் சாலை மீதான தாக்குதலில் சுமார் எழுபது பேர்வரை கொல்லப்பட்டிருக்கின்றனர். அதுமட்டுமல்லாமல், அமெரிக்காவுடனான இராணுவக் கூட்டு, பாகிஸ்தானில் செல்வாக்கினை இழந்து வருகின்றது. இன்னுமொருவருடைய யுத்தத்தை பாகிஸ்தான் போரிட்டு வருகின்றது என்று பெரும்பான்மையான பாகிஸ்தானிய மக்கள் தற்போது விசனம் கொண்டிருக்கின்றனர். இந்நிலைமையை அதிபர் முஷாரப்பினால் மாற்றிவிட முடியவில்லை. மக்களைப் பொறுத்தவரை, பாகிஸ்தான், அமெரிக்காவின் கைக்கூலியாகவே சமீபகாலமாக கருதப்பட்டு வருகின்றது. முஷாரப்பைப் பொறுத்தவரை இது அவருக்கு ஏற்பட்டிருந்த தோல்வி. இத்தோல்வியை சூழவிருந்த பாதிப்புக்களே அவரது இராஜினாமாவுக்கு வழிகோலியிருக்கின்றது.

பாகிஸ்தானின் கிழக்கு எல்லையில், இந்தியாவுடனான உறவும் கூட மிகவும் பலவீனமானதாகவே இருக்கின்றது. 1999ம் ஆண்டு, தனது இராணுவச் சூழ்ச்சிக்கு சற்று முன்னராக, இந்தியாவுடனான கார்கில் யுத்தத்தை இராணுவத் தலைவர் ஜெனரல் முஷாரப் முன்னெடுத்திருந்தார். அதனைத் தொடர்ந்து அவர் பாகிஸ்தானின் அதிபராகிய பின்னரும் இரு நாடுகளுக்கிடையேயான உறவு கசப்பானதாகவே இருந்து வருகின்றது. அண்டை நாடுகளின் பரஸ்பர நம்பிக்கை சிதைக்கப்பட்டிருக்கின்றது. 2001ம் ஆண்டு, டெல்லியில் இந்தியப் பாராளுமன்றத்தின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து ஆசியாவின் அணு ஆயு-த அயல் நாடுகள் போரின் விளிம்புக்கு தள்ளப்பட்டிருந்தன. ஆனால், 2004ம் ஆண்டில் இருந்து இருதரப்பினருக்கும் இடையே இடம் பெற்றுவந்த பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்நிலைமை ஓரளவு மாறிவிட்டிருந்தது. இருப்பினும், கடந்த மாதம், காபூலில், இந்தியத் தூதரகம் மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல், பாகிஸ்தானிய உளவு நிறுவனத்தின் பின்புலத்திலேயே இடம்பெற்றிருந்ததாக இந்தியா நம்புகின்றது. இந்நிலையில், இந்திய-பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான பரஸ்பர உறவும் நம்பிக்கையும் சிதறுண்டு போயிருக்கும் நிலையிலேயே அதிபர் முஷாரப் பாகிஸ்தான் அரசியலை விட்டுச் சென்றிருக்கின்றார்.

ஆட்சியைக் கைப்பற்றி தன்னைத்தானே அதிபராக வரித்துக் கொண்டிருந்த ஆரம்ப காலங்களில், அதிபர் முஷாரப் சில முற்போக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முயற்சி காணப்பட்டிருந்தது. பொருளாதாரத்தை மேம்படுத்தும் முயற்சிகள் காணப்பட்டதோடு பெண்களுக்கு கூடிய அதிகாரம் வழங்குவது மற்றும் கல்வியின் தரத்தை உயர்த்துவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். அத்துடன், பாரிய ஊழல் குற்றச்சாட்டுக்கள் எதுவும் இன்றுவரை முஷாரப் மீது கூறப்பட்டிருக்கவில்லை என்றே கூறலாம். பாகிஸ்தானின் அரசியலைப் பொறுத்தவரை இது மிகவும் அரிதான நிலை

(6ம் பக்கம் பார்க்கவும்)

அறிவித்தல்

கனடிய தமிழ்த் திரைக்கலைஞர் கையேடு

கனடிய தமிழ்த் திரைப்பட மையம் (Canadian Tamil Cinema Enhancement Organization) பலரும் பயன்பெறத்தக்க கனெடிய தமிழ் திரைப்பட கலைஞர்கள் கையேடொன்றை அச்சிடவுள்ளது. இதில் கனடிய தமிழ்த் திரைப்பட வரலாற்றில் பங்கெடுத்த சகல கலைஞர்களினதும் பெயர் விபரங்களை அச்சிட கனடிய தமிழ்த்திரைப்பட மையம் (CTCEO) ஆவல்கொண்டுள்ளது.

கனடிய தமிழ் திரைப்பட முயற்சிகளில் எவ்வகையிலேனும் பங்கெடுத்தவர்கள் தங்கள் பெயர் விபரங்களை, கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொண்டோ அல்லது முகவரிக்கு தபாலிவோ சேர்ப்பித்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஒத்துழைப்பே உயர்வின் பலம்
CTCEO
96 KRUGER ROAD, MARKHAM, ONTARIO. L3S 3Y7
PHONE: 416-731-4953 416-457-8424 416-450.6833
E-Mail: ctceo1@gmail.com

Smile Business Solutions

416-450-6833 (24 hrs)
905-887-7457 (9 a.m-8p.m)

We will pick up deliver to your door

“Your Simle is our price”

. Corporation Tax
. Business Plans
. Personal Tax
. Corporation Registrations
. Unsolved Revenue Canada . Issues
. GST, PST ....
. Payroll and Accounting

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஷாரப்பின்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மையே. ஆனால், கடந்த 18 மாத காலமாக, முஷாரப் தனது சர்வாதிகாரத்தினை வெளிப்படுத்தியிருந்தார். பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் நீதித்துறை போன்றவற்றில் தனது ஒரு தலைப்பட்சமான அதிகாரத்தை செலுத்தியிருந்ததோடு ஜனநாயகத் தேர்தல் ஒன்றிற்கான வாய்ப்புக்களை தொடர்ந்தும் மறுத்து வந்ததால் தனது அதிபர் பதவிக்கு உறுதியான அத்திவாரத்தையும் தானே அமைத்துக் கொண்டிருந்தார். நாட்டின் தலைமை நீதிபதியைப் பதவி நீக்கம் செய்திருந்தார். நாட்டில் அவசர கால சட்டத்தை அமுல் படுத்தி தனது அரசியல் எதிரிகளின் நடவடிக்கைகளை பெருமளவில் முடக்கி வைத்திருந்தார். மற்றைய நாடுகளின் விடயத்தில் எல்லாம் தனது 'சர்வதேச காவலன்' குணாதிசயங்களை அமுல்படுத்தி வரும் அமெரிக்கா, இவரது விடயத்தில் தனது சொந்த நலன்களுக்காக மெத்தனமாக இருந்து வந்திருக்கின்றது.

மக்கள் ஆட்சியின் மீது இவர் காட்டிய அலட்சியம் பாகிஸ்தானைப் பலவீனப் படுத்தியிருக்கின்றது. இது, இவரது ஆட்சிக் காலத்தின் மிக முக்கிய 'அழிவாக' பல்வேறு அரசியல் நிபுணர்களாலும் கருதப்படுகின்றது. சீருடைகள் அணிந்திருப்போரின் அருகாமையிலேயே மிகவும் பாதுகாப்பாகவும், சௌகரியமாகவும் காணப்பட்டு வந்த முஷாரப், இராணுவ ஆதிக்கத்தை பாகிஸ்தான் மக்களின் அன்றாட வாழ்வின் அனைத்து அங்கங்களிலும் மிகவும் ஆழமாக செலுத்தியிருந்தார் என்பதே கசப்பான உண்மை. 160மில்லியன் மக்களைக் கொண்டிருக்கும் ஒரு தேசத்தை ஓர் தனி மனிதன் நீண்ட காலம் ஆண்டுவிடலாம் என்ற அவரது கனவு ஓரளவு உண்மையாகிவிட்டிருந்த போதிலும், இறுதியில் அவரது வெற்றிக்கு அவரே பலியாகிப் போயிருக்கின்றார். பாகிஸ்தானிய அரசியலில் இருந்து அதிபர் முஷாரப்பின் வெளியேற்றம், அந்நாட்டில் நம்பிக்கை மட்டுமல்லாமல் சிக்கல்களுக்குமான ஓர் புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்திருக்கின்றது என்றே கூறலாம்.

கடந்த பெப்ரவரி மாதத் தேர்தல்களைத் தொடர்ந்து ஆட்சியமைத்திருக்கும் கூட்டணி பாரிய சவால்களை எதிர்நோக்கியிருக்கின்றது. நாடு எதிர்நோக்கி இருக்கும் பொருளாதாரப் பிரச்சனைகள் மற்றும் ஆப்கானிய எல்லைப் புறமான வடமேற்குப் பிரதேசங்களில் அதிகரித்து வரும் தீவிரவாத அச்சுறுத்தல்கள் இவற்றுள் முக்கியமானவை. இச்சவால்களை வெற்றி கொள்ள கூட்டணி அரசு தவறும் பட்சத்தில், அதுவே, அதிபர் முஷாரப்புக்குப்பின் ஓர் ஜனநாயக நடாக பாகிஸ்தான் உருவெடுக்கும் நம்பிக்கைக்கு முற்றுப் புள்ளியாக அமைந்துவிடும். புதிய அரசின் வெற்றியும் தோல்வியும் கூட்டணியின் இரு பிரதான கட்சிகளான பாகிஸ்தானிய மக்கள் கட்சி (PPP) மற்றும் பாகிஸ்தானிய முஸ்லீம் லீக்-நவாஸ் (PML-N) ஆகியவற்றின உடனடி மற்றும் எதிர்கால நடவடிக்கைகளே நிர்ணயிக்க இருக்கின்றன.

தேர்தல் முடிவடைந்து ஆறு மாதகாலங்கள் ஆகிவிட்ட நிலையில், இவ்விரு கட்சிகளும் அதிபர் முஷாரப் குறித்து விவாதிப்பதிலேயே தமது சக்திகளையும் நேரத்தையும் செலவிட்டு வருகின்றன. அதிபர் முஷாரப்பை அதிகாரத்தில் இருந்து அகற்றுவது மற்றும் 2007ம் ஆண்டு முஷாரப்பினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்துவது குறித்து தத்தமது நலன்களை அடிப்படையாக வைத்து இக்கட்சிகளின் தலைவர்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகளால் கடந்த மேமாதம் இக்கூட்டணி பிளவுபடும் நிலைமை உருவாகியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆக, முஷாரப் இல்லாத பாகிஸ்தானில் மாற்றம் ஏற்படுமா? கட்சிகளின் தனிப்பட்ட குறுகிய நலன்களை தள்ளி வைத்து பாகிஸ்தானின் வளமான எதிர்காலத்துக்காக தலைவர்களிடையே உடன்பாடு ஏற்படுமா? இவ்வாறான பல்வேறு கேள்விகளுடனும் ஆதங்கத்துடனுமே பாகிஸ்தானிய மக்கள் தற்போது உள்ளனர்.

பாகிஸ்தானின் இறையாண்மை சிதைந்து விடாதபடி அதேநேரம், இராணுவத்தின் தனிப்பட்ட ஆளுமைக்கு அடிபணிந்து போகாமலும் இந்தியாவுடனான உறுவுகளைப் புதுப்பிக்க வேண்டியதும் புதிய அரசின் முன் இருக்கும் முக்கிய பணியாக இருக்கின்றது.

கடந்த பெப்ரவரி மாதத் தேர்தல்களில் பிரதான கட்சியாக PPP உருவெடுத்திருந்த போதிலும் பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள இக்கட்சி தவறிவிட்டிருந்தது.

சிதறுண்டு போயிருக்கும் பாகிஸ்தானை ஒன்றிணைத்து வளப்படுத்த PPP தலைவர் ஆஷிப் சர்தாரியும், PML-N இன் தலைவர் நவாஸ் ஷரீப்பும் தமது வேற்றுமைகளைக் களைந்து ஒன்றுபட்டே ஆகவேண்டும் என்பது கட்டாயம். பாகிஸ்தானுக்கு ஏற்பட்டிருக்கும் தற்போதைய சவால்களை இவர்களால் தனித்தனியாக வெற்றி கொள்ள முடியாது என்பதே யதார்த்தம். உணவு மற்றும் எரிபொருள் விலைவாசி உயர்வு, குன்றிவரும் பொருளாதார வளர்ச்சி, பாகிஸ்தானிய உளவு நிறுவனங்களால் கைது செய்யப்பட்டு காணமல் போயிருக்கும் பலநூறு அரசியல் கைதிகளின் நிலமையை கையாள்வது போன்ற பல முக்கிய விடயங்களில் மிக அவசரமான முடிவுகளை இவர்கள் பெற்றுத்தர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. பாகிஸ்தானை ஓர் ஜனநாயக நாடாக உருவாக்குவதற்கு இவர்களுக்கு கிடைத்திருக்கும் ஒரே சந்தர்ப்பமாகவும் தற்போதைய சூழ்நிலை அமைந்து விடக்கூடும். இவ்விரு தலைவர்களும் தமது முயற்சியில் வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்பதற்கு மற்றுமொரு முக்கய காரணமும் உண்டு. கடந்த காலத்தில் இருவருமே இராணுவச் சூழ்ச்சிக்கு பலியானவர்களே. பாகிஸ்தானின் பலம் பொருந்திய இராணுவத்தின் சூழ்ச்சியினால் இக் கூட்டணி அரசு மீண்டுமொருமுறை கவிழ்ந்து போகாமல் தவிர்ப்பதென்பதும் இவ்விரு தலைவர்களின் உடன்பட்ட அரசியல் நடவடிக்கைகளிலேயே தங்கியிருக்கின்றது.

பாகிஸ்தானின் இறையாண்மை சிதைந்து விடாதபடி அதேநேரம், இராணுவத்தின் தனிப்பட்ட ஆளுமைக்கு அடிபணிந்து போகாமலும் இந்தியாவுடனான உறுவுகளைப் புதுப்பிக்க வேண்டியதும் புதிய அரசின் முன் இருக்கும் முக்கிய பணியாக இருக்கின்றது.

கடந்த காலங்களில், PPP மற்றும் PML-N கட்சிகள் இந்தியாவுடன் சமாதான முன்னெடுப்புக்களை மேற் கொண்டிருந்தன என்பது வரலாறு. 1980களில், இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் ஏற்பட்ட சீக்கியரின் கிளர்ச்சியை ஒடுக்குவதில் PPP அரசு இந்தியாவுக்கு உதவியிருந்தது. 1998ம் ஆண்டு அப்போதைய பாகிஸ்தானியப் பிரதமராக இருந்த நவாஸ் ஷரிப், இந்தியாவுடனான உறவினை மேம்படுத்தும் முயற்சில் ஈடுபட்டிருந்த போதே அப்போது இராணுவத் தளபதியாக இருந்த முஷாரப், காஷ்மீரின் 'கார்கில்' பகுதியில் பாகிஸ்தானிய இராணுவத்தின் ஊடுருவலுக்கு உத்தரவிட்டிருந்தார். புதிய அரசு எதிர்கொண்டிருக்கும் சவால்கள் அளப்பரியவை என்பதோடு புறக்கணித்துவிடக் கூடியவையும் அல்ல.

அதிபர் முஷாரப்பின் இராஜினாமா குறித்து பெரும்பான்மையான பாகிஸ்தானிய மக்கள் ஆறுதலடைந்திருக்கலாம். ஆனால், அண்டை நாடான இந்தியாவில் மாறுபட்ட வெவ்வேறு அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. பாகிஸ்தானிய அதிபரின் இராஜினாமா குறித்து கருத்து எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை என்று கூறியிருக்கும் இந்திய வெளிவிவகாரத்துறைப் பேச்சாளர் நவஜீத் சர்ணா, இது பாகிஸ்தானின் உள்விவகாரம் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். அதிபர் முஷாரப்பின் வெளியேற்றம் பாகிஸ்தானில் ஓர் அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தியிருப்பதாக தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான MK நாராயணன் எச்சரித்திருக்கின்றார். இவ்வெற்றிடம் குறித்து தாம் கவலையடைந்திருப்பதாக தெரிவித்திருக்கும் இவர், இந்நிலை பாகிஸ்தானில் இயங்கிவரும் தீவிரவாத சக்திகளுக்கு மேலும் பலத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும், இதனால், இந்திய எல்லைப்புறப் பாதுகாப்புக்கு கூடிய அச்சுறுத்தல் ஏற்படலாம் என்பதனையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். பாகிஸ்தானிய அரசியலில் இருந்து முஷாரப் நீக்கப்பட்டிருப்பதால் அந்நாட்டு இராணுவம் இந்திய விவகாரத்தில் தன்னிச்சையாக இயங்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக முன்னாள் இந்தியா இராஜதந்திரி G.பார்த்தசாரதியும் எச்சரித்திருக்கின்றார்.

இந்திய அரசியல் தலைமை அதிபர் முஷாரப்பை சந்தேகத்துடனேயே பார்த்து வந்திருக்கின்றது. சர்சைக்குரிய காஷ்மீரில், தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தானின் உளவுத்துறை பக்கபலமாக இருந்து வந்திருப்பதாக இந்தியா குற்றஞ்சாட்டி வருகின்றது. அதிபர் முஷாரப் உறவு வைத்திருந்த நாடுகளால் இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்து வந்ததாகவே இந்தியா கருதி வந்திருக்கிறது. இருப்பினும், காலப்போக்கில் முஷாரப்பை கையாளுவதற்கு இந்திய அரசு கற்றுக் கொண்டு விட்டிருந்தது. இராணுவ மற்றும் உளவு நிறுவனங்களை கட்டுப்பாட்டில் வைத்திருந்த இராணுவத் தலைவர் முஷாரப்பின் ஆட்சிக் காலத்தை விட, பலவீனமான, தற்போதைய கூட்டணி ஆட்சியிலேயே இந்தியாவுக்கு அச்சுறுத்தல் அதிகமாக இருக்கின்றதென்பதை GPயின் கூற்று சுட்டிக் காட்டியிருக்கின்றது.

தற்போது இரு அரசுகளும் ஒன்று மற்றொன்றை எச்சரிக்கையுடனேயே அணுகி வரும் நிலையில், பாகிஸ்தானில் ஏற்பட்டிருக்கும் புதிய அரசியல் சூழ்நிலையில், இரு

(7ம் பக்கம் பார்க்கவும்)

சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா

INDEPENDENT ART FILM SOCIETY

ஒக்ரோபர் 18, 2008

சிறந்த திரைப்படப்புக்களுக்கான பரிசுகள்
முதற் பரிசு 500 கனடிய டொலர்கள்.
இரண்டாம் பரிசு 300 கனடிய டொலர்கள்
மூன்றாம் பரிசு 200 கனடிய டொலர்கள்

படைப்புக்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள் புரட்டாதி 25 ம் நாள் (SEPTEMBER 25,2008)
படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படவேண்டும்.
படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி

Tam Sivathasan
Exceutive Director IAFS
Unit # 8.1345 Morningside Ave.
Toronto, ON M1B 5K3

மேலதிக தொடர்புகளுக்கு
416-450-6833, 416-804-3443
rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயத்தாகம்



சக்கரவர்த்தி
Sakkarawarthy@vaikarai.com

கடந்து போன நேற்றைய நாளுக்கும், இன்று முடிந்திட்ட இன்றைய நாளுக்கும் என்னதான் வேறுபாடு என்றோ, அல்லது கடந்த இருநாட்களிலும் வாழ்க்கையில் என்னதான் மாறுபாடு கண்டோம் என கண்களை மூடி எம்மிடமே கேள்வி கேட்டால் கிடைக்கின்ற பதில் 'இன்றும் மற்றொரு நேற்றே..'

நேற்றைக்கும் இன்றைக்கும்மென்று மட்டுமல்ல, பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கை சலிப்புக்கொள்ளத்தக்க மாதிரி பல்லாண்டுகளாக ஒரே மாதிரித்தான் இருக்கிறது. இந்த மூன்றாம் சிந்தனை உளத்தை சோர்வாக்காத வண்ணம் வாழ்வை விதம் விதமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்னும் வண்ணக்கனவில் காலத்தை விரட்டிக்கொண்டிருக்கின்றோம். அதுவே உயர்வான வாழ்வென்றும் ஆகிப்போனது.

காலை வேளையிலும், முன்மாலைப் பொழுதிலும் இரை செமிக்காத மலைப் பாம்பு போல நெடுஞ்சாலைகள் எல்லாம் மூச்சு முட்ட முட்ட நெளிந்து கிடக்கும் போதெல்லாம் மனசை ஏன் என்ற ஆயாசம் ஆட்கொண்டு விடுகிறது.. மதியப்பொழுதில் நெடுஞ்சாலைப் பாலத்தின் மேல் நின்று, வேகமெடுத்து ஓடும் மனிதர்களின் வாகனங்களை காண்கையிலும் அதே ஆயாசம்தான் வருகிறது. ஏன் இந்த ஓட்டம்? எதனை விரட்டிப் பிடிப்பதற்காக இத்தனை வேகம். தன் வாலை கடிக்க முனையும் முட்டாள் நாய்க்குட்டிபோல் காலத்தை விரட்டிக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கின்றோம் என்பது தானே உண்மை.

சற்றே வயது முதிர்ந்த தமிழர்களிடம் நல்ல குடும்பத்தின் ஆண்களுக்கு எது அழகெனக் கேட்டால், வீடும் வேலையும் என்று இருப்பவன்தான் நல்லவன் என சொல்வார்கள். குடும்ப கட்டமைப்பு வெளிச் சகவாசங்களால் சிதறக்கூடும் என சற்றே அதிக பயத்துடன் உருவாக்கப்பட்ட கருத்து அது வெனக்கொண்டாலும், வீடும் வேலையும் மட்டும்தான் வாழ்க்கையா? புற அகச் சந்தோசங்கள், கொண்டாட்டங்கள் எல்லாம் மட்டுப்படுத்தப்பட்ட அல்லது கட்டமைக்கப்பட்ட வட்டத்துக்குள்ளையே சொல்லப்பட்டும் கடைப்பிடிக்கப்பட்டும் கொண்டிருப்பதால் உலகத்தில் பரந்து கிடக்கும் பல்லாயிரக்கணக்கான சந்தோசங்களை நாம் இன்னும் இனங்காணமலே, பிடிக்க முடியாத காலத்தை மட்டும் துரத்திக்கொண்டிருக்கின்றோம்.

உணவு, உடை, உறைவிடம் என்பவை தான் மனிதர்களின் அத்தியாவசியத் தேவைகளின் பட்டியல். தொழில் வளர்ச்சியடைந்த முன்னேறிய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம் சமூகத்து மக்களில் பல்லாயிரம் பேருக்கு அத்தியாவசியத் தேவைக்காக மட்டுமே வாழ வேண்டியதாக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் கொச்சையாக சொல்வதானால் அவர்கள் அடிப்படைத்தேவைகள் நிறைவடையாத ஏழைகளாகவே இருக்கிறார்கள்.

உணவும் உடையும் இலகுவாக கிடைத்தாலும் வீடு என்பது தமிழர்களின் இறுதி எல்லையாக இருக்கிறது. அது பற்றியே பேசுகிறார்கள், அது பற்றியே புளகாங்கிதம் அடைகின்றார்கள், அதற்காகவே வாழ்கின்றார்கள். அதுவே அவர்களின் அதி உன்னத இன்பமாகவும் கருதுகின்றார்கள். அதுவே அவர்களின் கௌரவத்தை சொல்லும் அடையாளமாகவும் நம்புகின்றார்கள். வீட்டுக்காகவே உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்து விடுவதால் புற, அக இன்பங்களை நாடிச்செல்வது என்பதுவும் இனங்காணுவதும் தவிர்க்கப்பட்டு விடுகிறது. அப்படி ஒன்று இல்லை என்றே முடிவுக்கே வந்துவிடுகின்றார்கள்.

ஜன்னல்களை இறுக்க மூடிவிட்டு தொலைக்காட்சி ஊடாக உலகத்தை பார்க்க பழக்கப்படுத்தப்பட்ட சவலைக் குழந்தையாக தமிழ் சமூகம் மாறிக்கொண்டிருக்கிறதோ என அச்சம் எழுகிறது. ஜன்னல்களுக்கு அப்பால்தான் பிரபஞ்சம் பரந்து விரிகிறதென்றால் நம்ப மறுப்போர் பட்டியலில் எமது சமூகத்துக்குத்தான் முதலிடம்.

திரைகள் இட்ட ஜன்னல்களுக்கு வெளியே இருக்கின்ற இன்பங்களை நுகர்கின்ற தன்மைக்கு சாஸ்திரங்களும், சம்பிரதாயங்களும் கூட பல்வேறு வழிகளில் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் வைத்திருப்பதும் கூட நாம் அதனை தவிர்ப்பதற்கு காரணியும் ஆகிறது. காலாவதியான கட்டுப்பாடுகளை இன்னமும் புனிதம் என்று நம்பிக் கொண்டிருப்பதன் பயனை எங்கள் புதிய சந்ததியாவது அனுபவிக்காமல் இருப்பதற்கான வழிகள் என்ன?

உச்ச வேகத்தில் ஓடிக்ககொண்டிருக்கும் காலத்தை எல்லா இன மக்களும் தங்கள் வேகத்துக்கு தங்கள் விதத்தில் மாயத்தாகத்தை உருவகப்படுத்திக் கொண்டு விரட்டிக்கொண்டிருந்தாலும் காலம் யாருக்காகவும் காத்திருப்பதும் இல்லை. காலத்தை யாரும் கட்டிவைக்கவும் முடியாது என சொல்லிக் கொண்டிருந்தாலும் சில அதிசயங்களும் நிகழாமல் இல்லை. சிருஸ்டிகளை தன் தோழில் சுமந்து கொண்டும், கவிஞர்களுடன் கை கோர்த்துக் கொண்டும் காலம் தன் பாட்டுக்கு போய் கொண்டுதான் இருக்கிறது, புதியதோர் உலகம் செய்வதற்காக.

> **ஜன்னல்களை இறுக்க மூடிவிட்டு தொலைக்காட்சி ஊடாக உலகத்தை பார்க்க பழக்கப்படுத்தப்பட்ட சவலைக் குழந்தையாக தமிழ் சமூகம் மாறிக்கொண்டிருக்கிறதோ என அச்சம் எழுகிறது. ஜன்னல்களுக்கு அப்பால்தான் பிரபஞ்சம் பரந்து விரிகிறதென்றால் நம்ப மறுப்போர் பட்டியலில் எமது சமூகத்துக்குத்தான் முதலிடம்.**

முஷாரப்பின்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளுக்குமிடையிலான பரஸ்பர உறவு இதுவரை காலமும் இருந்ததைவிட மிக முக்கிய கட்டத்தில் இருக்கின்றது.

புதிய அரசியல் தலைமையில், பாகிஸ்தானில் ஸ்திரத் தன்மை ஏற்பட வேண்டும் என்பதில் மற்றைய நாடுகளைவிட இந்தியாவே அதிகம் கவலை கொண்டிருக்கின்றது.

முஷாரப்பின் அரசியல் அதிகாரம் முடிவுக்கு வந்ததையடுத்து இந்திய துணைக் கண்டத்தில் தனது இருப்பினை உறுதிப்படுத்துவதற்கு அமெரிக்கா புதிய நண்பர்களை பாகிஸ்தானில் தேடும் நடவடிக்கைகளை இனி வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

இதுவரையும், அல்கைதா மற்றும் தலிபான் இயக்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற் கொள்ளுவது குறித்து எதையும் பெரிதாக கூறாதிருக்கும் கூட்டணி அரசினை அமெரிக்கா தன்வசம் திருப்பிக் கொள்வதற்கு எல்லாவகையான திட்டங்களையும் கையாளும் என்பதே உண்மை.

ஆப்கானிஸ்தானில் இடம் பெற்றுவரும் யுத்தம் கனடாவுக்கும், அமெரிக்காவுக்கும் தற்போது தலையாய பிரச்சினையாக இருந்து வருகின்றது. கனேடிய மற்றும் அமெரிக்கத் துருப்புகள் பெருமளவில் கொல்லப்பட்டு வருகின்றன. அல்கைதா மற்றும் தலிபான் இயக்க உறுப்பினர்கள் பாகிஸ்தானில் பெருமளவில் தமது பாதாள நடவடிக்கைகளை மேற்கொண்டு தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானில், தலிபான் இயக்கத்தின் தாக்குதல்களால் அமெரிக்க கனேடிய துருப்புகள் கொல்லப்படுவது மட்டுமல்லாமல், பாகிஸ்தானின் இறைமைக்கும், ஸ்திரத் தன்மைக்கும் தலிபான் அச்சுறுத்தலாக இருக்கின்றது என்பதனை கனேடிய அமெரிக்க அரசுகள் புதிய கூட்டணி அரசின் முக்கிய தலைவர்களான ஆஸிப் சர்தாரிக்கும், நவாஸ் ஷரீப்புக்கும் பலமாக எடுத்துக் கூறவேண்டியிருக்கும். ஆனால், ஆப்கானிஸ்தானில் இடம் பெற்று வரும் யுத்தம் அமெரிக்காவின் யுத்தமே தவிர பாகிஸ்தானினது அல்ல என்ற சாதாரண பாகிஸ்தானியர்கள் தற்போது நம்புகின்றனர். ஆக, உள்நாட்டுப் பிரச்சினைகளான, பொருளாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பு போன்றவற்றில் அதீத கவனம் செலுத்த வேண்டியிருக்கும் அதே நேரம், இந்திய மற்றும் அமெரிக்க வெளியுறவுக் கொள்கைகளிலும் ஓர் சமநிலையைப் பேண வேண்டிய சவாலுக்கும் பாகிஸ்தானின் புதிய அரசு முகம் கொடுக்க வேண்டியிருக்கின்றது.



சிவகுரு நாதன்
Nathan Sivaguru
(Attorney of Law & N.P, Sri Lanka)
Licensed Paralegal & Mediator. Ontario.

Paralegal Services

27 வருட ஆழமான சட்ட அறிவு, அனுபவம் பல நூறு குடிவரவு வழக்குகளில் வெற்றியீட்டிய அநுபவம் ஆகியவற்றுடன்....

வாகன விபத்துக்கள்:
சகல மருத்துவ வசதிகள், வருவாய் இழப்பீடுகள், பராமரிப்பு பணம், வாகனச் சேதம், உடல் - உள பாதிப்புக்கான மொத்த நஷ்டஈடு.
தொழில் வழக்குள் - தொழில் விபத்துக்கள்:
வேலை நீக்கத்திற்கெதிரான பலவகை இழப்பீடுகள், வேலையிழப்பிற்கான U.I. கொடுப்பனவு
தொழில் விபத்துக்குட்பட்டவர்களுக்கு மருத்துவ, வாழ்க்கைச் செலவு இன்சூரன்ஸ் கொடுப்பனவுகள், நிரந்தர நஷ்டஈடு.
ஏனைய சட்டப்பிணக்குகளைத் தீர்க்க சட்ட உதவி.

Phone: 647-428-6522 Fax: 647-428-6521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுனை...

3ம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுக்கு வருகிறது. அந்த உரையில் புட்டின் ஒருமுனைப்பட்ட உலக ஒழுங்கை கடுமையாகச் சாடியிருந்தார். “ஒரு முனைப்பட்ட உலக ஒழுங்கு என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது மாத்திரமல்ல, அடைய முடியாததுமாகும். ஏனென்றால், இன்றைய உலகிலே அத்தகைய உலக ஒழுங்கு ஒன்றை வலிந்து நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான அரசியல் பலமோ அல்லது பொருளாதார வளமோ எவரிடமுமேயில்லை. சர்வதேச உறவுகளிலே அநேகமாக கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு படைபலம் பயன்படுத்தப்படுவதை நாம் காண்கின்றோம். இதன் விளைவாக தொடர்ச்சியான நெருக்கடிகளுக்குள் உலகம் அமிழ்த்தப்படுகின்றது. ஒரு நாடு அமெரிக்கா அதன் தேசிய எல்லைகளை மீறிப் பாய்ந்திருக்கிறது. அதன் சட்டமுறைமையை அமெரிக்கா ஏனைய நாடுகள் மீது திணித்துக்கொண்டிருக்கிறது. பாதுகாப்பாக இருப்பதாக எவராலும் உணரக்கூடியதாக இல்லை. ஏனென்றால், சர்வதேச சட்டங்களினால் தாங்கள் பாதுகாக்கப்படுவதாக எவருமே உணரவில்லை. இக் கொள்கைகள் தான் ஆயுதப் போட்டா போட்டியை உத்வேகப்படுத்துகிறது. பேரழிவு ஆயுதங்களைப் பெறுவதற்கு நாடுகளைத் தூண்டுகிறது. ஒரு முனைப்பட்ட உலக ஒழுங்கு அதில் வாழுகின்றவர்களுக்கு மாத்திரமல்ல, அதன் எசமானருக்கும் நாசகாரத்தனமானது. ஏனென்றால், அந்த ஒழுங்கு ஜனநாயகத்துடன் சம்பந்தப்பட்டதல்ல என்பதால் எசமானரை அது உள்ளிருந்தே நிர்மூலஞ் செய்கிறது” என்று புட்டின் அன்று விளக்கம் அளித்திருந்தார்.

இருமுனைப்பட்ட உலக ஒழுங்கு நடைமுறையிலிருந்த கெடுபடி யுத்த காலகட்டத்தின் முடிவுக்குப் பிறகு அதாவது, சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு அமெரிக்கா உலகம் முழுவதையும் தனது மேலாதிக்கத்தின் கீழ் ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்கான செயற்பாடுகளையே தீவிரப்படுத்தி வந்திருக்கிறது. இதற்கு வசதியாக சர்வதேச விவகாரங்களில் ஒரு தலைப்பட்சமாக அமெரிக்கா செயற் பட்டுக்கொண்டிருக்கிறது.

ஒருபுறத்தில், உலகமயமாக்கலின் கீழ் பொருளாதார ரீதியான மேலாதிக்கத்தை விஸ்தரித்துக்கொண்டுவந்திருக்கும் அமெரிக்கா மறுபுறத்தில், பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போர் என்ற பெயரில் அரசியல் மற்றும் இராணுவ தந்திரோபாயங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது. உலகின் பல பிராந்தியங்களிலும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்றபோர்வையிலும் பேரழிவு ஆயுதங்களைக் குவிக்கும் நாடுகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற சாக்குப்போக்கிலும் அமெரிக்கா உலக மேலாதிக்கத்துக்கான அதன் நிகழ்ச்சித்திட்டத்தைக் கிரமமாகச் செயற்படுத்தி வந்திருக்கிறது. உலகின் அதிகப் பெரும்பான்மையான மக்கள் அமெரிக்காவின் இந்த மேலாதிக்க வெறித்தனத்தை வெறுக்கிறார்கள் என்ற போதிலும், ஏகாதிபத்திய எதிர்ப்பைப் பரந்தளவில் அரசியல் ரீதியாக ஒருமுகப்படுத்தக் கூடியதாக உலக அரங்கில் செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடிய சூழ்நிலை இல்லை என்பது துரதிர்ஷ்டவசமானது.

பெரும்பாலான நாடுகளின் ஆட்சியாளர்கள் பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் உலகமயமாக்கல் கொள்கைகளைப் பின்பற்றுவதால் அமெரிக்காவின் வியூகங்களுக்குள்ளேயே விழுந்து கிடக்கவேண்டியிருக்கிறது. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு முன்னர் இத்தகையதொரு ஏகபோக நிலைமை இருக்கவில்லை.

சோவியத் யூனியன் வீழ்ச்சிகாணாமல் இருந்திருந்தால், இன்று ஒரேயொரு ஏகபோக வல்லரசாக நின்று உலகமேலாதிக்கத்துக்காக அமெரிக்கா செய்துவரும் அடாவடித்தனங்களுக்கு இடமிருந்திருக்காது என்பது விரும்பியோ, விரும்பாமலோ உலகில் பெரும்பான்மையானவர்களின் அபிப்பிராயமாக இருக்கிறது.

சுமார் இரு தசாப்த உறங்குநிலைக்குப் பிறகு ரஷ்யா அதன் செல்வாக்கை வெளிநாடுகளில் முனைப்புடன் வெளிக்காட்டுவதற்கு தயாராகியிருக்கின்ற நிலைவரம் அமெரிக்காவின் மேலாதிக்கத்தின் கீழான ஒருமுனைப்பட்ட உலக ஒழுங்கிற்கு பாரிய சவால்களை தோற்றுவிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

நன்றி: தினக்குரல்

செய்தித் துளி

மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் சின்னக்கருக்கல் பகுதியைச் சேர்ந்த ஜெகநாதன் புவனேந்திரன் (18) கடந்த 02-09-2008 இரவு 10.30 மணியளவில் ஆயுதம் தாங்கியவர் களினால் கடத்திச் செல்லப்பட்டதாக இவரது தாயார் மன்னார் சக வாழ்வு மன்றத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொழும்பு கிராண்ட்பாஸ் டி மெல் மாவத்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் புகுந்து அங்கிருந்த தெய்வ உருவச்சிலைகளை உடைத்து சேதமாக்கிய பிக்கு ஒருவர் உட்பட மூவரை கிராண்ட் பாஸ் பொலிஸார் 04-09-2008 அதிகாலை 2.00 மணியளவில் கைது செய்துள்ளனர்.

வன்னிப் பிராந்திய நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டிருக்கும் பொது மக்கள் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு சுதந்திரமாக நகர்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென புலிகள் அமைப்பினரிடமும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது அவசர மான கரிசனையை வெளியிட்டுள்ளதாக கொழும்பிற்கான ஐ.நா அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யக் கூடிய 15 மில்லியன் கிலோ பெறுமதியான தேயிலைக்கு வரி விலக்கினை வழங்க இந்தியா இணங்கியுள்ளதாகவும் இதற்கான புதிய ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

OBITUARY NOTICE

Jan 16, 1947

Aug 30, 2008

Margie Miguel

We are sad to announce the sudden & tragic passing of City of Toronto (Permit Parking Unit) employee, Margie (Margueritta) Miguel at the age of 61. She is survived by her beloved husband Geoffrey Miguel, daughter Melani Miguel & son Gordon (Terry) Miguel. She was the adoring grandmother of grandsons Jaye & Jazz Miguel-White.

She was the devoted daughter of late Paul Owen Francis & predeceased by her mother Josephine Rita Francis. Loving sister of late John Paul Francis, Bridgette Peiries, Violet Joseph, Justine Francis, Luke Francis & Hyacinth Fatima Roshan Ali. Sister-in-law of Theresa Francis, late Bravi Peiries, Gregory Joseph, Celine Francis, Bridget Francis, Roshan M. Ali, late Josephine & Casmire Philip, Grace & Paulinas Philip & Godfrey & Jacintha Miguel.

She is also missed by nephews Jonathan, Bradley, Brian, Gayan, Casius, Arshaq, Tyronne, Demonne & Manoj. Nieces Johanna, Caroline, Gayathri, Jacqueline, Ricquetta, Betsy, Gladys & Shabina.

Family, friends & loved ones will be welcomed at the HERITAGE FUNERAL CENTRE, 50 Overlea Boulevard, on Friday, September 5th from 6 pm - 9 pm for a time of sharing & memorial vigil service. Funeral service will be held at BLESSED JOHN XXIII CATHOLIC CHURCH, 150 Gateway Boulevard, on Saturday, September 6th at 10 am.

For more information contact Heritage: (416) 423-1000 & Blessed John XXIII: (416) 429-4000 or the family @ (416) 424-1027 or (416) 230-4596.

Margie you are greatly loved & will be sadly missed by all who have been touched by your vibrant light of love, kindness, generosity & contagious laughter. May Your Soul Rest In Peace with The LORD.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13வது திருத்தம்

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வாகுமா?



சுரேஷ் க.
பிரேமச்சந்திரன்

13வது திருத்தம் இலங்கையின் அரசியல் சாசனத்துக்கு 13வது திருத்தத்தை அறிமுகப்படுத்திய 1987ஆம் ஆண்டின் இறுதிக் காலத்திலும் விட இப்போது இருபத்தியொரு வருடம் கழித்து, 13வது திருத்தத்தைப் பற்றிப் பரவலாகப் பேசப்படுகின்றது. "தீர்வின் முதற்படியாக 13வது திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று ஈ.பி.டி.பியினர் கூறுகின்றனர் (2வது கட்டமாக மேம்பட்ட தீர்வொன்று பின்னர் வேறு அரசாங்கம் வைக்கும் என்பதை தமிழர் நம்பவேண்டும்). "13வது திருத்தம்", அதாவது 13வது திருத்தத்தையும் விட மேலதிகமாகச் செல்ல வேண்டும் என்று இந்திய பிரதமர் பேசுகின்றார். சட்டம் ஒழுங்கு, காணிப்பங்கீடு போன்ற அதிகாரங்களைத் தவிர்த்த 13வது திருத்தத்தை அமுல்படுத்துதல் குறித்து ஜனாதிபதியும் அரசின் முக்கிய அமைச்சர்களும் பேசி வருகின்றார்கள். "மாகாண சபையே வேண்டாம் கிராம ராஜ்ஜியம் போதும்" என்பது ஜாதிக ஹெல உறுமய (JHU)வின் நிலைப்பாடு. "யுத்தத்தில் வெற்றி கொண்டால் பயங்கரவாதம் அடக்கப்பட்டு விடும். அதன்பின்னர் அதிகாரப்பகிர்வே தேவை இல்லை" என்பது மக்கள் விடுதலை முன்னணியின் (JVP)யின் நிலைப்பாடு. இவைதவிர வெளிநாடு வாழ் தமிழ் புத்திஜீவிகள் அல்லது பத்திரிகையாளர்கள் என்று கருதப்படுவோரும் கணனி வலைப் பின்னலூடாக தமது கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

13வது திருத்தச் சட்டத்தைப் பற்றி ஆய்வு செய்யும் எவரும், அது எப்போது, எவ்வாறு, ஏன் கொண்டு வரப்பட்டது என்ற பின்னணியைக் கருத்தில் எடுப்பது அவசியமானது. இலங்கைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதும், இலங்கையினூடாக வேற்று சக்திகள் இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கக் கூடாது என்பதை உறுதிப்படுத்துவதும் இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாக இருந்தது. இவற்றின் அடிப்படையில் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி அப்போதைய இந்தியப் பிரதமர் ஸ்ரீ. ராஜீவ்காந்தி அவர்களும், இலங்கை ஜனாதிபதி கௌரவ ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்களும் ஓர் ஒப்பந்தத்தை செய்து கொண்டனர். அவ்வொப்பந்தம்தான் மகாண சபைகள் உருவாக அடிப்படையாக இருந்த இந்திய - இலங்கை ஒப்பந்தமாகும். இது தவிர இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக கடிதப் பரிமாற்றம் ஒன்றும் நடைபெற்றது. இதன் பிரகாரம்,

1. வெளிநாட்டு இராணுவ மற்றும் உளவுத்துறையைச் சேர்ந்த ஆளணியினரை ஈடுபடுத்தல் தொடர்பில் அத்தகைய நடவடிக்கை இந்திய - இலங்கை உறவுகளுக்கு பங்கமில்லாதிருத்தல்,

2. திருகோணமலையோ அல்லது இலங்கையிலுள்ள வேறேதேனும் துறைமுகமோ இந்திய நலன்களுக்கு குந்தகம் ஏற்படுகின்ற வகையில் வேறெந்த நாட்டினதும் இராணுவப் பயன்பாட்டிற்கு வழங்குவதைத் தவிர்த்தல்,

3. வெளிநாட்டு ஒலிபரப்புத் தாபனங்கள் இராணுவ மற்றும் உளவுப் பிரிவுகளுக்காகப் பயன்படுத்தாமையை உறுதிப்படுத்தல்

ஆகிய விடயங்களை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டு அங்கீகரித்தது. இதற்குப் பிராயச்சித்தமாக,

i. இலங்கை அரசுக்கு எதிராக பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களாக அல்லது தனியாட்சியையோ, பிரிவினை வாதத்தையோ பரிந்துரைப்பவர்களாக காணப்படும் இலங்கையரை இந்தியா நாடு கடத்தும்,

ii. இலங்கை பாதுகாப்பு படைகளுக்கு பயிற்சிகளையும் இராணுவ தளவாடங்களையும் வழங்கும்

என்பதை இந்தியாவும் ஏற்றுக் கொண்டு அங்கீகரித்தது.

1986ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து 1986 டிசம்பர் வரை இந்திய அரசாங்கம், இலங்கை அரசாங்கம், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகியவற்றுக்கிடையில் பேசித் தீர்க்கப்பட்ட முழுமை பெறாத முன்மொழிவுகளின் திரட்டொன்று இனப்பிரச்சினையின் தீர்வுக்கான அடிப்படையாக இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தில் பரிந்துரை செய்யப்பட்டது. பேச்சுவார்த்தைகளின் போது முடிவு செய்யப்படாத எஞ்சிய விடயங்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தீர்க்கப்பட வேண்டும் என்ற ஒப்புதலுடன் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் இடம்பெற்றது. ஆனால் எஞ்சிய விடயங்கள் என்று கூறப்பட்டவை எதுவும் இந்தியாவாலோ அல்லது இலங்கையாலோ பின்னர் பேச்சுவார்த்தைக்கு எடுக்கப்படவில்லை என்பது தான் வேதனையானது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்ட உறுதி மொழிகளை மீறுகின்ற வகையில் ஜெயவர்த்தனாவின் ஆட்சி எஞ்சிய விடயங்களை பரிசீலனை செய்ய மறுத்ததுடன், அரைகுறையான தீர்வுத் திட்ட திரட்டை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபைகள் சட்ட மூலத்தையும் அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தையும் அவசர அவசரமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இப்பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் முக்கியமான அதிகாரங்களை உள்ளடக்கவில்லை, இதனூடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்ய முடியாது என தமிழர் விடுதலைக் கூட்டணி ராஜீவ் காந்திக்கு அவசரமாக ஓர் கடிதத்தை அனுப்பியதுடன், எஞ்சிய விடயங்கள் யாவும் பேசி முடிக்கப்பட்ட பின்னரே 13வது திருத்த சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவிடம் கோரியது.

ஆனால் அக்கோரிக்கை யாவும் மறுதலிக்கப்பட்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது விருப்பிற்கிணங்க 13வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றினார். எந்த ஓர் தமிழ் இயக்கமும் 13வது திருத்தத்தை பூரணமான தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. வட-கிழக்கு மாகாண சபையை உருவாக்கி அதனை ஒரு வருடம் ஆட்சி செய்த EPRLF-ம் கூட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஓர் இடைக்காலத் தீர்வாகத்தான் ஏற்றுக் கொண்டது.

இந்தியாவை பொறுத்தவரையில் இந்தியா தனது நலன்களை முதன்மைப்படுத்தி இருக்கலாம். தனது நாட்டின் பாதுகாப்பில் இந்திய அக்கறை செலுத்துவதில் யாரும் குறை காணவும் முடியாது. ஆனால் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் நலன்கள் ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் நியாயமான அரசியல் நலன்களைவிட முக்கியத்தில் குறைந்தவை அல்ல. இரண்டும் முரண்பாடானவையும் அல்ல. மேலும் ஒன்றின்றி மற்றையதைச் சாதிக்க முடியாமலும் இருக்கலாம். ஆனால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் இதனைக் காட்டுகின்றனவா? என்பதுதான் கேள்வி.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் இரு அரசுகளுக்கிடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் என்ற பொழுதிலும் தமிழ்ப் போராளி இயக்கங்களை அது சட்டபூர்வமாக அங்கீகரித்தது. அதன் உறுப்பினர்களைப் போராளிகள் என்றும் அழைத்தது. இதன் மூலம் சர்வதேச ரீதியாக தமிழ் இயக்கங்களின் சட்டபூர்வ அந்தஸ்தும் மேலும் திடப்பட்டது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் தொடர்பான எதிர்ப்பையும், தமிழர் தரப்பின் மனக்குறைகளையும் ஏற்றுக் கொண்ட இந்திய அரசு, என்ன காரணங்களுக்காக போராட்டம் ஆரம்பமானதோ அதற்கான தீர்வுகளைப் பேசித் தீர்ப்பதற்கு முன்பாகவே போராளி இயக்கங்கள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் எனவலியுறுத்தியது. ஒருபுறத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டு 5 நாட்களுக்குள் ஆயுதங்களை ஒப்படைக்க வலியுறுத்திய ஒப்பந்தம், மறுபுறத்தில் தமிழர் போராட்டம் தொடர்பான முக்கிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மேலும் ஆறுகால அவகாசத்திற்கு வழிவகுத்தது. இதனையே இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் A.P வெங்கடேஸ்வரன் அவர்கள், "இந்திய அரசாங்கம் தமிழர்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் விடயத்தை தீர்மானிப்பதற்குப் பதிலாக, முதலில் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதெனவும், பின்னர் அதிகாரப்பகிர்வுப் பிரச்சினையைத் தீர்ப்பதெனவும் தீர்மானித்திருந்த முறையானது குதிரைக்கு முன்னால் வண்டியை கட்டுவதற்கு ஒப்பானதாயுள்ளது" என்று கூறினார். A.P. வெங்கடேஸ்வரன் அவர்களின் கூற்றானது 13வது திருத்தத்தின் வடிவத்தை மிகவும் துலாம்பரமாக வெளிக் காட்டுகிறது.

இலங்கையின் அரசியல் சாசனத்தின் 2வது ஷரத்து "இலங்கை குடியரசு ஒற்றையாட்சி உடைய அரசாகும்" என்று கூறுகின்றது. அதே அரசியல் சாசனத்தின் 76(1)வது ஷரத்து, "பாராளுமன்றம் அதன் சட்டமாக்கற் தத்துவத்தைத் துறத்தலோ, எந்த விதத்திலும் பாரதீனப் படுத்தலோ ஆகாது என்பதுடன், ஏதேனும் சட்டமாக்கற் தத்துவம் கொண்ட ஏதேனும் அதிகாரத்தை நிறுவுதலுமாகாது" என்று கூறுகிறது. இலங்கை அரசியல் சாசனத்தின் மேற்கண்ட இரண்டு ஷரத்துக்களுக்கும் பெரிய விளக்கங்கள் தேவை இல்லை. இலங்கையில் சட்டமாக்கற் தத்துவம் கொண்ட ஒரே ஒரு ஆட்சி தான் இருக்கமுடியும். வேறு எதனையும் பாராளுமன்றம் நிறுவுதலுமாகாது என்பதும் மிகத் தெளிவாக கூறப்பட்டிருக்கின்றது. அரசியல் சாசனத்தில் இருந்து இவ்வாறான ஷரத்துக்கள் மாற்றப்படாமல் 13வதுதிருத்தத்தைப் பற்றி பேசுவதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்? 13வது திருத்தத்தில் மாகாண சபைக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் அரைகுறை அதிகாரங்கள் என்பது மட்டுமல்லாமல் மாகாண சபைகள் உருவாக்கும் சட்டங்களை பாராளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும். எனவேதான் ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரப் பகிர்வு சாத்தியமில்லை என்பதை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அவர்களும், அரசு சார்பில் பிரதம பேச்சாளராக இருந்த பேராசிரியர் பீரிசும் கூறினார்கள்.

இலங்கைத் தமிழ் மக்களின்
அரசியல் நலன்கள்
ஆசியப் பிராந்தியத்தில்
இந்தியாவின் நியாயமான
அரசியல் நலன்களைவிட
முக்கியத்தில் குறைந்தவை அல்ல.
இரண்டும் முரண்பாடானவையும் அல்ல.

இலங்கையில் சில புத்திஜீவிகளிடமும், தமிழ் அரசியல்வாதிகளிடமும் ஒற்றையாட்சி, சமஷ்டி என்பதெல்லாம் வெறும் வார்த்தை ஜாலங்கள் மாத்திரம் தான் எனவே அவற்றிற்கு பெரியளவு முக்கியத்துவம் கொடுக்கத் தேவை இல்லை என்ற கருத்து நிலவுகிறது. ஆனால், ஒற்றையாட்சி, சமஷ்டி தொடர்பாக அறிஞர்களின் விளக்கங்களைப் படித்தால் இது மிகவும் பிழையான ஓர் வாதம் என்பது தெரியவரும். "அரசாங்கத்தின் அதிகாரங்கள் தனியொரு மத்திய அதிகார சபையின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள அதே வேளையில் மத்திய அரசாங்கம் உச்ச உயர் நிலையான சட்டவாக்க அதிகாரத்தை பிரயோகிக்கக்கூடியதாக உள்ளூராட்சி, மாகாண அலகுகளின் அதிகாரங்கள் மத்திய அரசின் தாட்சண்யத்தில் வைத்திருக்கப்படுமாயின் அந்த அரசியலமைப்பு ஒற்றை ஆட்சி என விவரிக்கப்படுகின்றது. அரசாங்கத்தின் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கும், உள்ளூராட்சி, மாகாண அரசாங்கங்களுக்குமிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டனவாகவும், மத்திய அதிகாரம் ஆட்சி அலகுகளுக்கு உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரங்களால் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருக்குமாயின் அது சமஷ்டி அரசாகும். எனவே ஒற்றை ஆட்சி என்றால் என்ன? சமஷ்டி என்றால் என்ன? என்பதைப் புரிந்து கொண்டால், ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு சாத்தியமில்லை என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

(10ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13வது..

(9ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் அதிகாரப் பகிர்வுக்கும் (Devolution), அதிகாரப் பரவலாக்கத்துக்கும் (Decentralisation) இடையில் உள்ள வேறுபாடுகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அதிகாரப் பகிர்வு என்று கூறும்பொழுது மத்தியில் இருந்து மாநிலங்களுக்கோ, மாகாணங்களுக்கோ அதிகாரங்கள் வரையறை செய்யப்பட்டு பகிரப்படுவதைக் குறிக்கின்றது. அதிகாரம் பகிரப்பட்ட பின் மத்திய அரசுக்கு அவ்வதிகாரம் தொடர்பாக எந்தவித பாத்யதையும் கிடையாது. மாறாக மாநிலமோ, மாகாணமோ இவ்வதிகாரம் தொடர்பான சட்டங்களை இயற்றி அதனை நடைமுறைப்படுத்தலாம். உண்மையில் இங்கு அதிகாரப்பகிர்வு என்பதனூடாக அந்த அதிகாரம் தொடர்பான இறைமையும் பகிரப்படுகின்றது. இதன் மூலம் இரண்டோ இரண்டிற்கு மேற்பட்ட இனங்களோ இறைமையையும் பகிர்ந்து கொள்கின்றன என்றே அர்த்தமாகும். அதேசமயம் அதிகாரப் பரவலாக்கம் என்பது மத்தியில் குவிந்திருக்கும் அதிகாரங்களை ஏனைய அலகுகளுக்கு பரவலாக்கம் செய்தல் என்பதாகும். மத்திய அரசு பரவலாக்கம் செய்த எந்த அதிகாரத்தையும் எப்பொழுதும் மீளப் பெற்றுக் கொள்ளலாம். எனவே ஒற்றை ஆட்சிக்குள் அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு சமூகத்தை, இனத்தை ஏமாற்ற உதவுமே தவிர உண்மையான அதிகாரங்கள் நிரந்தரமாக மக்களை சென்றடைய வழிசெய்யாது என்பதுதான் உண்மை.

திம்பு பேச்சுவார்த்தையின் போது ஒட்டுமொத்தமான தமிழர் தரப்பும் (TULF, LTTE, EPRLF, EROS, PLOTE, TELO- அன்றிருந்த முக்கியமான அமைப்புகள் இவைதான்) நான்கு முக்கியமான கொள்கைத் தீர்மானங்களை (Cardinal Principles) இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தின. தமிழ் மக்கள் ஓர் தனித் தேசிய இனம், அவர்களுக்கான பாரம்பரியத் தாயகமுண்டு, அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு, இவை தவிர மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை தொடர்பான கொள்கை முடிவொன்றும் முன்வைக்கப்பட்டது. ஆனால், இன்றுவரை இலங்கை அரசாங்கம் இவை எதனையும் ஏற்கவில்லை. இவை தொடர்பாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ன குறிப்பிடுகின்றது என்பதையும் இங்கு கருத்தில் கொள்ளவேண்டும். இலங்கைத் தமிழரின் பாரம்பரிய வாழ்விடம் தொடர்பாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஷரத்து 1.4 இல், "இலங்கைத் தமிழரின் சரித்திரபூர்வமான வசிப்பிடமாக வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இருந்து வந்திருக்கின்றது. இங்கு மற்ற இனத்தவருடன் தமிழர்கள் சேர்ந்து வாழ்கின்றார்கள் என்பதையும் அங்கீகரித்து" என இவ்வாசகம் தொடர்கின்றது. இந்திய அரசு இங்கு, "தமிழர்கள் வடக்கு - கிழக்கில் ஏனைய இனங்களுடன் இணைந்து வாழ்ந்து வருகின்றார்கள் எனும் போது அவர்களுக்கான தாயக நிலப்பரப்பு இல்லை என்பதனைத்தான் அது கூற முற்படுகின்றது. யாழ்ப்பாணத்திலும் கூட வேறோர் இனத்துடன் சேர்ந்து தமிழினமும் வாழ்ந்ததாகத்தான் இது அர்த்தப்படுத்தப்படுகின்றது.

அதன்மூலம் இந்திய - இலங்கை ஒப்பந்தம் திம்பு பிரகடனத்தின் முதலாவது கோட்பாடான தமிழ் மக்கள் தனித்துவமான ஓர் தேசிய இனம் என்பதை நிராகரிப்பதுடன், இரண்டாவது கோட்பாடான தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டையும், மேலும் வலியதாக தமிழ் மக்களின்சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டையும் நிராகரிக்கின்றது. வடக்கும் - கிழக்கும் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று பூர்வமான வாழ்விடம் எனக் கூறும் இந்திய இலங்கை ஒப்பந்தம், அதனை தற்காலிகமாக இணைத்து பின்னர் கிழக்கில் நடைபெறும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் இது நிரந்தரமாக்கப்படலாம் என்று கூறுகின்றபொழுதே முன்னர் ஏற்றுக் கொண்ட வரலாற்று பூர்வமான வாழ்விடத்தை பின்னர் நிராகரிப்பதாகின்றது.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் பிரசை கள், அவர்களும் சிங்கள மக்களுக்கு ஈடாக இல்லையேல் அவர்களிலும் விட மேலாக இந்த மண்ணுக்கு சொந்தக்காரர்கள். தென்பகுதி மண்ணுக்கு சிங்கள மக்கள் மத்தியில் எவ்வளவு பாத்யதை உண்டோ அவ்வளவு பாத்யதை வடக்கு - கிழக்கு மண்மேல் தமிழருக்கும் உண்டு. தமிழர்கள் பல ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த மொழிக்கும், மிகவும் மேம்பட்ட கலை, பண்பாட்டிற்கும் உரித்துடையவர்கள். இதன் அடிப்படையில் சிங்கள மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து வாழ விரும்புகின்றார்கள். சிங்கள சமூகம் எமக்கு பிச்சை போடவும் தேவையில்லை, சலுகை செய்யவும் தேவையில்லை. அவர்கள் தர நாங்கள் வாங்குவதற்கு இது அவர்கள் வீட்டுச் சொத்துமல்ல. இரு இனங்களும் ஒரே நாட்டில் இருப்பதை சிங்கள மக்கள் விரும்புவார்களாயின், நீதியான முறையில் தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள முன்வரவேண்டும். ஆனால் அவர்கள் தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பங்கு போட்டுக் கொள்ளும் மனோநிலையில் இல்லை. மகாவம்சம் போன்ற ஐதீக கற்பனைக் கதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மிகவும் மோசமாக சிங்கள பௌத்த இனவாத மாயைக்குள் மூழ்கடிக்கப்பட்டுள்ளார்கள்.

"இந்த நாடு முழுமையாக எங்களுக்குரியது. நாங்கள்தான் மண்ணின் மைந்தர்கள். தமிழர், முஸ்லீம்கள் எல்லோரும் வந்தேறு குடிகள், வேற்று நாட்டினர். உலகத்தில் சிங்கள மக்களுக்காக இருக்கக் கூடிய ஒரேயொரு நாடு இதுதான். சிங்களத்தையும், பௌத்தத்தையும் பேணிப் பாதுகாக்கும் நாடு என்பதுடன் புத்தரால் ஆசீர்வதிக்கப்பட்டநாடும் இது" - இவைதான் சிங்கள மக்களின் மனோநிலை. இலங்கை தமக்கு மாத்திரம் உரித்தான நாடென்ற வெறித்தனமான மனோநிலைதான் ஏனைய இனங்களுக்கு எதிரான அவர்களது அடக்குமுறை, அழிவுநிலைகளை தோற்றுவிக்கின்றது. சிங்கள இனம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமாயின் தமிழ் இனம் அழிக்கப்படவேண்டும், அல்லது சிங்கள இனத்துடன் இரண்டறக் கலக்க வேண்டும். இதனடிப்படையில் தான், மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, சிங்களக் குடியேற்றம் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும். அதற்கு மேலாக இன்று நடைபெற்றுவரும் யுத்தமும் கூட தமிழ் இனத்தை அழிப்பதை நோக்கமாக கொண்டது தான். எனவே இனப்பிரச்சனையின் ஆணிவேர் என்பது சிங்கள வெறிபிடித்த மனோநிலை (Sinhala Chauvanistic Mindset). ஆனால் இதனைத்தான் சிங்களத் தேசியவாதமாக அவர்கள் நம்புகின்றார்கள். இந்த ஆணிவேரின் பக்கவேர்கள் தான், சிங்களம் மாத்திரம் அரச கரும மொழி, சிங்களக் குடியேற்றம் மற்றும் அடக்குமுறைவடிவங்கள். இந்த மனோநிலை இன்று நேற்று ஏற்பட்டதல்ல, மகாவம்சத்திலேயே அதற்கான விதைகள் தூவப்பட்டிருந்தாலும், இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பாக அநகாரிக தர்மபாலாவின் காலத்திலேயே, தமிழர் விரோத நடவடிக்கைகள் ஆரம்பித்து விட்டன. சிங்கள மக்கள் மாத்திரம்தான் மண்ணின் மைந்தர்கள், ஏனைய இனமெல்லாம் வந்தேறு குடிகள் என்பதை இதே வார்த்தைகளில் முதலில் ஆரம்பித்து வைத்தவர், சிங்கள மக்களின் Reformist என்று அவர்களால் அழைக்கப்படும் அநகாரிக தர்மபால என்ற புத்த பிக்குதான். அவர்களின் வழிவந்தவர்கள்தாம் S.W.R.D. பண்டாரநாயக்கா தொடங்கி இன்று மட்டும் இருக்கக் கூடிய சிங்கள அரசியல் வாதிகள் எல்லோரும். ஆகவே தமிழர்களையும் இந்த மண்ணின் மைந்தர்களாக நினைத்து அரசாட்சியை எம்முடன் பகிர்ந்து கொள்வார்கள் என யாராவது கருதினால், அவர்களின் சிந்தனையில் தவறு இருக்கின்றது என்பதே அர்த்தமாகும். மகிந்த ராஜபக்ஷ அவர்கள் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவிற்கு (APRC) கொடுத்த ஆலோசனைகளை பார்த்தாலே இது புரியும். டட்லிசேனநாயக்காவின் காலத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டு தோல்வியில் முடிந்த மாவட்ட சபை முறைமையைத்தான் இன்று தனது ஆலோசனைகளாக சமர்ப்பித்துள்ளார். இந்த நிலையில் சிங்களத் தரப்பு அதுவும் இன்றைய ஜனாதிபதி 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவார் என்று எதிர்பார்ப்பது தமிழ் மக்களின் முட்டாள்தனமாகும். அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் தனிநாடு கேட்ட போதும், ஊர்காவந்துறை நவரட்ணம் தனிநாடு கேட்ட போதும் அதனை எதிர்த்து அவர்களை தோற்கடித்த தந்தை செல்வநாயகம் அவர்கள் 1976ல் தனிநாடுதான் ஒரே வழி என வட்டுக் கோட்டையில் ஏன் பிரகடனப்படுத்தினார்? சிங்கள சமூகம் தமிழ் மக்களை சக பிரசைகளாக ஏற்றுக் கொள்ள மறுத்து வந்தமையும், சிங்கள மக்களின் அந்த மனோநிலையை முழுமையாக அவர் புரிந்து கொண்டமையும் தான் காரணங்கள். பஞ்ச பாண்டவர்கள் போல் நாடு கேட்டு ஊர் கேட்டு, வீடு கேட்டு எதுவும் இல்லை என்ற பொழுது தான் செல்வநாயகம் அவர்கள் தமிழர்கள் இழந்து போன இறைமையை அவர்களுக்குரிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பெற்று கொள்ள வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்.

கடந்த 30 வருட யுத்தத்தில் தென் இலங்கை உட்பட நாடு சின்னாபின்னப் பட்ட போதும் சிங்கள மனோநிலையில் ஏதாவது மாற்றமேற்பட்டதா என்றால், இல்லை என்பதுதான் பதிலாக உள்ளது. தமிழர்கள் பயங்கரவாதிகள் போலவும், அதற்கெதிராக தான்யுத்தம் நடத்துவதாகவும் கூறும் அதே சமயம் வெளிநாட்டை குறிப்பாக இந்தியாவை திருப்திப்படுத்த 13வது திருத்தம் தொடர்பாகவும் ஜனாதிபதி அவர்கள் அவ்வப்போது பேசி வருகின்றார். இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் பொழுது சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் (APRC) தவிசாளரான பேராசிரியர் திஸ்ஸவிதாரண அவர்கள், சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் ஊடாக வெளிவர இருக்கும் இறுதி அறிக்கையானது ஒற்றையாட்சி முறைக்குள்ளான அதிகாரப் பரவலாக்கமாக இருக்குமென்றும், ஒற்றையாட்சி என்ற பதத்தை நீக்கக் கூடாதென ஜனாதிபதி கட்டளை இட்டுள்ளதாகவும் கூறி இருக்கின்றார். ஒற்றையாட்சி, சமஷ்டி எல்லாம் வெற்று வார்த்தைகள் என்றால் அரசியல் சாசனத்திலிருந்து அவற்றை அகற்றுவதற்கு மகிந்த ராஜபக்ஷ ஏன் தயங்க வேண்டும்?

தமிழர் தரப்பிலிருக்கும் அரசு சார்பான அரசியல்வாதிகளும், வெளிநாடுகளில் குடியேறிய சில தமிழர்களும், விடுதலைப் புலிகளை எதிர்க்கின்றோம் என்ற பெயரில் 13 வது திருத்தச் சட்டத்திற்கு அதீத முக்கியத்துவம் கொடுத்து அதனை தூக்கிப் பிடிப்பதும், முழுக்க முழுக்க சிங்கள இனவாதியாகத் திகழும் ஜனாதிபதி அவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளை அள்ளி வழங்கி விடுவார் என அவரை நியாயப்படுத்துவதும் தமிழ் மக்களின் எதிர்கால அரசியலுக்கு உகந்த ஆரோக்கியமான கருத்துக்களல்ல. விடுதலைப் புலிகளின் பிழைகளை விமர்சிக்கலாம், அவற்றை சரிப்படுத்த முயற்சிக்கலாம். ஆனால் புலிகளை எதிர்க்கின்றோம் என்ற பெயரில் அரசிடம் மண்டி இடுவதும், அற்ப சொற்ப சலுகைகளை பூதாகரப்படுத்தி இதுதான் தீர்வு என்று கூற முற்படுவதும், மிகவும் மோசமான நிலைப்பாடுகள்.

அரசியல் சாசனம் மாற்றப்பட்டு சமஷ்டி அரசியல் முறை ஒன்றை உருவாக்க அரசாங்கம் முயற்சித்தால் மாத்திரமே அதிகாரப் பகிர்வு சாத்தியமென்பதுடன் அப்பொழுது தான் ஒன்று பட்ட இலங்கைக்குள் தீர்வும் சாத்தியமாகும். இலங்கை அரசு இதனை தொடர்ச்சியாக மறுதலிக்குமாயின், இன்றில்லா விட்டாலும், நாளை தனிநாடொன்று உருவாவதை யாராலும் தடுக்க முடியாமல் போகும்.

இக் கட்டுரையாளர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) செயலாளர் நாயகமும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் (TNA) யாழ்ப்பாண பாராளமன்ற உறுப்பினரும் ஆவார்)

விடுதலைப் புலிகளின் பிழைகளை விமர்சிக்கலாம், அவற்றை சரிப்படுத்த முயற்சிக்கலாம். ஆனால் புலிகளை எதிர்க்கின்றோம் என்ற பெயரில் அரசிடம் மண்டி இடுவதும், அற்ப சொற்ப சலுகைகளை பூதாகரப்படுத்தி இதுதான் தீர்வு என்று கூற முற்படுவதும், மிகவும் மோசமான நிலைப்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்குமா இந்தப் பூமி



பொ.ஐங்கரநேசன்
ayngaranesan@vaikarai.com

"மக்கள் தொகையின் நலன்களுக்கு சுற்றுச் சூழலைப் பலிகொடுத்து வருவதற்குப் பதிலாக, சுற்றுச்சூழல் உயிர் பிழைத்திருப்பதற்கு மக்கள் தொகையையே நாம் கட்டுப்படுத்தியாக வேண்டும்"

-சேர் டேவிட் அட்டன்பரோ (இயற்கையியலாளர் - இங்கிலாந்து)

மனித குலம் இன்று எதிர்நோக்குகின்ற தலையாய பிரச்சினை பயங்கரவாதம் அல்ல.

அதைவிடப் பயங்கரமான அச்சுறுத்தல் சத்தமில்லாத ஒரு சுனாமியாக உருவெடுத்துவரும் அதன் சனத்தொகைதான். பூமிப்பந்தின் மேற்பரப்பு எங்கும் சனசமுத்திரம் பெருக்கெடுத்தோடுகின்ற வேகத்தைப் பார்த்தால் விரைவிலேயே 'குடித்தொகை வெடிப்பு' (Population Explosion) ஏற்பட்டு உலகைப் பட்டினிக்குப் பலிகொடுத்துவிடும் என மேற்குலகின் மக்கட் தொகையியல் அறிஞர்களும் அரசியல்வாதிகளும் எச்சரித்து வருகின்றனர். 'குடித்தொகைக் குண்டு' குறித்துப் பல தசாப்தங்களுக்கு முன்பிருந்தே பேசப்பட்டு வந்தபோதும், இப்போது ஏற்பட்டிருக்கும் உலகளாவிய உணவுத்தட்டுப்பாடு குடித்தொகைக் குண்டு விரைவிலேயே வெடித்து விடுமோ என்ற அச்சத்தை உலகம் பூராவும் தோற்றுவித்துள்ளது.

பூமி மனிதர்களுக்கு மாத்திரமே உரித்தான கிரகம் போன்று, பூமியை இன்று 6.7 பில்லியன் (670 கோடி) மக்கள் தொகையினர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றனர். மிகத் துல்லியமாகக் குறிப்பிடுவதாயின், இக்கட்டுரையை வரைந்து கொண்டிருக்கும் இந்நேரத்தின் போதுள்ள (2008 ஆகஸ்ட் 29, 16:32) சனத்தொகை 6,719,984,579. வேறு எந்த முலையூட்டி இனங்களாலும் எட்டமுடியாத எண்ணிக்கை இது. ஐம்பத்திரெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் - 1950இல் - இந்தத் தொகை வெறுமனே 2.5 பில்லியன் மாத்திரம்தான். இடைப்பட்ட காலத்தில் மருத்துவ விஞ்ஞானத்தில் ஏற்பட்ட வளர்ச்சி 'மரண கண்டம்' என்ற நிலையில் இருந்த பிரசவத்தில் தாயினதும் சேயினதும் உயிருக்கு உத்தரவாதம் வழங்கியதோடு, இன்னொருபுறம் மரணத்தின் வயதெல்லையையும் தள்ளி போட்டது. மருத்துவப்புரட்சியுடன் உணவுற்பத்தியில் பசுமைப்புரட்சியும் சேர்ந்து கொள்ள சனத்தொகை மளமளவென்று பெருக ஆரம்பித்தது. இப்போது, தினமும் 3,60,470 குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றன. 1,50,688 மரணங்கள் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன. இந்தக் கூட்டல் கழித்தல்களால் உலக சனத்தொகை நாளாந்தம் 2,09,782 எண்ணிக்கையால் உயர்ந்தவாறு உள்ளது. சனத்தொகை அதிகரிப்பு இதே வேகத்திலேயே நிகழின், 2050ஆம் ஆண்டில் சனத்தொகை வெகுசுலபமாக 9.2 பில்லியன்களைத் தாண்டிச் சென்றுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்த சனத்தொகை அதிகரிப்பு வேகத்தை சனத்தொகை இரட்டிப்பாக அதிகரிக்க ஆகும் கால அளவைக் கொண்டே ஆய்வாளர்கள் சுட்டி வருகின்றனர். மனித வரலாற்றில் ஒரு மைல்கல் போல, சனத்தொகை 1804 ஆம் ஆண்டிலேயே ஒரு பில்லியனைத் தொட்டது. இந்த எண்ணிக்கையை அடைவதற்கு மனிதனுக்குப் பல ஆயிரக்கணக்கான வருடங்கள் தேவைப்பட்டன. ஆனால், 123 வருடங்களில் - 1927இல் - உலக சனத்தொகை 2 பில்லியன்களாக இரட்டித்துக் கொண்டது. 4 பில்லியன்களாக அடுத்த இரட்டிப்பு 1974இல் நிகழ்ந்தேறியது. இந்த இரட்டிப்புக்கு 47ஆண்டுகள் மாத்திரமே ஆனது. பின்னர் 1987இல் 5 பில்லியன்கள், 1996இல் 6 பில்லியன்கள் என்றாகிய சனத்தொகை, இதோ வெகுவிரைவிலேயே 2013 ஆம் ஆண்டளவில் 7 பில்லியன்களையும் 2028ஆம் ஆண்டளவில் 8 பில்லியன்களையும் எட்டிப்பிடிக்க உள்ளது. இப்படி சனத்தொகைப் பெருக்கம் 1:2:4:8 என்று கேத்திர கணித விரிவில் விரைந்து எகிற, நிலத்தின் உற்பத்தி சக்தியோ 1:2:3:4 என்று எண்கணித விரிவில் ஆமை வேகத்திலேயே அதிகரிக்கிறது. குறுகிய கால இடைவெளிகளில் மடை உடைத்தது போன்று பெருகி வரும் சனத்தொகைக்கு உணவிட நிலமடந்தையின் உற்பத்தி வேகம் காணாது என்பதாலேயே, 'குடித்தொகை வெடிப்பு' உலகைப் பட்டினியின் வாய்க்குள் தள்ளிவிடும் என்று அபாயச் சங்கு ஊதப்பட்டு வருகிறது.

இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிறகு இப்போது உலகத்தை ஆட்டிப் படைக்கத் தொடங்கியிருக்கும் உணவுப் பஞ்சத்துக்கு, 'இந்தியாவின் நடுத்தரவர்க்கம் அதிகம் உண்பதே காரணம்' என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கருத்துரைத்துள்ளார்.

அமெரிக்காவில் இயங்கி வருகின்ற 'சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம்' 1994ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள அறிக்கையில், '21ஆம் நூற்றாண்டின் முதல் கால்வாசிப்பகுதி பூர்த்தியாகும் முன்பே உலகம் இதுவரை சந்தித்திராத அளவுக்குத் தானியப் பற்றாக்குறைவால் அவதிப்படும், என்று காலக்கெடு விதித்து எச்சரித்திருந்தது. மேலும், இந்தப் பஞ்சத்துக்கு வளர்முக நாடுகளின் சனத்தொகை அதிகரிப்பையே காரணம் காட்டியிருந்தது. இதனை மெய்ப்பிப்பதுபோல, 2008ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே உலக அரங்கில் பட்டினியின் அவலக் காட்சிகள் அரங்கேறத் தொடங்கிவிட்டன. அரிசி, கோதுமையின் விலை இரட்டிப்பாகவும் சோளத்தின் விலை மும்மடங்குகளாகவும் எகிறியது. ஏற்கனவே உண்ண உணவு கிடைக்காததால் பட்டினிக்கு உடலைத் தின்னக் கொடுத்து நாளாந்தம் 40,000 பேர் வரையில் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். 850 மில்லியன் மக்கள் பசித்து அழுகின்ற வயிறுகளுடனேயே இரவில் தூங்கச் செல்கிறார்கள். இவர்களில் 820 மில்லியன் பஞ்சப் பராரிகள் வளர்முக நாடுகளிலேயே உள்ளனர். இந்நிலையில், விண்ணைத் தொட்ட விலைவாசி இவர்களுக்குக் கிடைத்து வந்த அரைகுறை உணவையும் தட்டிப் பறித்ததில் ஏழை நாடுகள் பலவற்றில் உணவுக் கலவரங்கள் வெடித்தன.

பசியில் பற்றியெரியும் வயிறுகள்தான் எதையும் செய்யத்துணியுமே! வங்காள தேசத்தில் விலைவாசியைச் சமாளிக்க ஊதிய உயர்வு கோரி பல்லாயிரக்கணக்கில் திரண்ட தொழிலாளிகள் கண்ணில்பட்ட வாகனங்கள், கடைகள் எல்லாவற்றையும் அடித்து நொருக்கிச் சூறையாடினார்கள். பாகிஸ்தானும் தாய்லாந்தும் தானியக் கொள்ளையைத் தடுப்பதற்காகத் தமது களஞ்சிய சாலைகளின் பாதுகாப்பை இராணுவத்திடம் ஒப்படைத்தன. எகிப்திலும் ஹெயிற்றியிலும் கலவரக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிலர் பலியாகியுமுள்ளனர். இதில் ஹெயிற்றியின் சோகம் பெரியது. ஹெயிற்றியின் சில பிரதேசங்களில் பசியின் கொடுமை தாங்காத அன்றாடங்காய்ச்சிகள் களிமண்ணில் உப்பைக் கலந்து உருட்டி விழுங்கி வயிற்றை நிரப்பி வருகின்றனர். அந்த அளவுக்கு உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இந்தியா நிலைமையைச் சமாளிப்பதற்காகத் தனது தானிய ஏற்றுமதியைப் பெருமளவுக்குக் குறைத்துக் கொண்டது. இலங்கையிலோ, போருடன் இப்போது விலைவாசியும் சேர்ந்து பாடாய்ப் படுத்துவதில் 30 விழுக்காடு மக்களுக்கு அன்றாட உணவு கிடைப்பதில்லையென ஐ.நா.வின் உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் தெரிவித்துள்ளது. இப்படி, ஏழை நாடுகள் எல்லாமே பட்டினியின் அவலத்தை முன்பை விட ஏதோ ஒரு பரிமாணத்திலேனும் அதிகமாக அனுபவிக்கத் தொடங்கியுள்ளன. அகோரமான இந்தப்பசி உதவி வழங்கும் அமைப்புகள் விட்டெறியும் உணவுப் பொதிகளினால் உடனடியாக அடங்கிவிடப் போவதில்லை. 2015ஆம் ஆண்டு வரை உலகை வாட்டிவதைக்கின்ற அபாயம் இருப்பதாக உலக வங்கியின் தலைவர் ரொபேர்ட் ஷோலிக் (Robert Zoellick) எச்சரித்துள்ளார்.

இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிறகு இப்போது உலகத்தை ஆட்டிப் படைக்கத் தொடங்கியிருக்கும் உணவுப் பஞ்சத்துக்கு, 'இந்தியாவின் நடுத்தரவர்க்கம் அதிகம் உண்பதே காரணம்' என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கருத்துரைத்துள்ளார். இவரது கூற்றும் வாஷிங்டன் சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையும் சாராம்சத்தில் ஒன்றுதான். இரண்டுமே, வளர்முகநாடுகளின் வாய்களையே உலகின் உணவையெல்லாம் தின்று தீர்ப்பதாகக் குற்றம் சுமத்துகின்றன. உலகின் மொத்த சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியடைந்த பணக்கார நாடுகளில் இருப்பவர்களின் தொகை சொற்பமே. உலகின் 670 கோடிப்பேரில் ஐரோப்பிய நாடுகளில் 12 விழுக்காட்டினரும், மத்திய அமெரிக்காவில் 5 விழுக்காட்டினரும் மட்டுமே உள்ளனர். மிகப்பெரும் பங்கு வளர்முக நாடுகளிலேயே உள்ளது. ஆசியாவில் 61 விழுக்காட்டினரும், ஆபிரிக்காவில் 13 விழுக்காட்டினரும், இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் நாடுகளில் 9 விழுக்காட்டினரும் வாழுகின்றனர். உலகில் அதிக சனத்தொகையைக் கொண்ட நாடு சீனா. இதன் மக்கள் தொகை 132 கோடி. இரண்டாவது இடத்தில் உள்ள இந்தியாவின் மக்கள் தொகை 113 கோடி. இந்த இரண்டு நாடுகளினதும் சனத்தொகையைச் சேர்த்தாலே, அது உலக சனத்தொகையின் மூன்றிலொரு பங்கை விஞ்சிவிடும். இந்தப் புள்ளி விபரங்களை முன்னிறுத்தியே உலகின் உணவு நெருக்கடிக்கு வளர்முக நாடுகளிலுள்ள அதிக சனத்தொகையை அமெரிக்கா குற்றம் சாட்டி வருகிறது.

அமெரிக்கா சொல்லி வருவது போல தற்போது ஏற்பட்டிருக்கும் உலகளாவிய உணவு நெருக்கடிக்கு வளர்முக நாடுகளின் சனத்தொகையை மாத்திரம் ஒரேயடியாகக் குற்றம் சாட்டிவிட முடியாது. கம்யூனிச முகாம்களின் சரிவுக்கு முன்னர் மூன்றாம் உலக

(13ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்குமா..

(12ம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகள் என்றும், பின்னர் வளர்முக நாடுகள் என்றும் பெயர் சூட்டப்பெற்ற இந்நாடுகளை என்ன பெயர் கொண்டு அழைத்தால்தான் என்ன? பெரும்பாலானவை இன்றும் ஏழைநாடுகள்தானே. 113 கோடி சனத்தொகையுள்ள இந்தியாவில் 83 கோடிப் பேர் நாளன்றுக்கு 60 ரூபாவுக்கும் குறைந்த வருமானத்திலேயே காலம் தள்ளுகின்றனர். இப்படி, இந்நாடுகளின் தனிநபர் வருமானம் மிகக்குறைவாக இருப்பதால் ஒருவர் தனது ஊதியத்தின் பெரும்பகுதியை உணவுக்காகவே செலவிட வேண்டியிருக்கிறது. இந்தோனேசியர் ஒருவர் தனது வருவாயின் பாதியளவை உணவுக்கு ஒதுக்குகிறார். வியட்நாமிலும் நைஜீரியாவிலும் சாப்பிடுவதற்காக ஒருவர் முக்கால்பங்கு வருமானத்தை அழவேண்டியுள்ளது. மீதி அற்பசொற்ப பணத்தில்தான் ஆடை, மருத்துவம், கல்வி போன்ற அத்தியாவசிய தேவைகள் எல்லாம். ஆனால், அமெரிக்கர் ஒருவர் தனது வருமானத்தில் 12 விழுக்காடு பணத்தை மாத்திரமே உணவுக்காக செலவிட்டு வருகிறார். அதுவும் இந்தத் தொகைக்குள்ளேயே வயிறார மட்டும் அல்ல அதற்கும் மேலாகவே, மூக்கு முட்ட அவரால் ஒரு பிடி பிடிக்க முடிகிறது.

அமெரிக்காவின் விவசாயத்துறை வெளியிட்டுள்ள 2007 ஆம் ஆண்டின் புள்ளி விபரங்களின்படி, அமெரிக்கர் ஒருவர் சாப்பிடும் தானிய உணவு ஆண்டுக்கு 1046 கிலோ ஆகும். இதில் ஐந்தில் ஒரு பங்கு தானியமே இந்தியர் ஒருவருக்கு உண்ணக் கிடைக்கிறது. உலகிலேயே அதிக அளவில் இறைச்சி சாப்பிடுபவர்களும் அமெரிக்கர்கள்தாம். அமெரிக்கர் ஒருவர் ஆண்டுக்கு 40 கிலோ மாட்டிறைச்சியை வயிறு புடைக்க உட்கொள்ள, இந்த அளவு இந்தியருக்கு 16 கிலோ ஆகவும் சீனருக்கு 6 கிலோ ஆகவும் இருக்கிறது. இதே போன்று, அமெரிக்கர் ஒருவர் ஆண்டுக்கு 78 கிலோ பால் குடித்துவர, இது இந்தியாவில் 38 கிலோ ஆகவும் சீனாவில் 13 கிலோ ஆகவும் உள்ளது. இப்படி, ஏழை மக்களது உணவையும் சேர்த்து ஏப்பமிட்டுவரும் அமெரிக்கா அதேசமயம் மறைமுகமாகவும் அவர்களது உணவைத் தட்டிப் பறிக்கிறது. ஒரு கிலோ இறைச்சியைப் பெறுவதற்குப் பண்ணை மாடொன்றுக்கு ஏழுகிலோ தானியங்களை உண்ணக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அமெரிக்கர்களின் இறைச்சித் தேவைக்கென வளர்த்து வரும் கால்நடை விலங்குகளுக்கு ஊட்டப்படும் தானியங்களில் ஆண்டு தோறும் 850 மில்லியன் மக்களுக்கு உணவூட்டலாம் என கோர்னெல் பல்கலைக்கழகத்தின் விவசாயத்துறைப் பேராசிரியர் டேவிட் பிமென்ரெல் (David Pimentel) தெரிவித்துள்ளார். அது மாத்திரம் அல்லாமல், உலகில் பெரும்பகுதி மக்களின் வயிறுகள் வெறுமையாகக் கிடந்து துடிக்க, அமெரிக்கர்கள் எந்த மனச்சங்கடமும் இல்லாமல் தங்கள் வாகனங்களின் எரிபொருள் தாங்கிகளைச் சோளத் தானியங்களால் நிரப்பி வருகிறார்கள். 2007ஆம் ஆண்டு அமெரிக்காவில் அறுவடையான சோளத்தில் 20 விழுக்காடு சோளம், எதனோல் எரிபொருள் தயாரிப்புக்கே செலவிடப்பட்டது. ஆனால் அமெரிக்கா தனது இடாம்பீகமான வாழ்க்கை முறையை அம்பலப்படுத்துகின்ற புள்ளிவிபரங்களையெல்லாம் நாசுக்காக மறைத்துக் கொண்டு, ஏழை மக்களின் பசித்த வாய்களையே உலகப் பட்டினிக்கான முழுமுதற் காரணியாகக் காட்டி வருகிறது.

கீழைத் தேசங்களுக்கும் அவற்றைச் சுரண்டித் தம்மை மேம்படுத்திக் கொண்ட மேற்கு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார இடைவெளி மிகப்பெரியது. இந்த ஏற்றத்தாழ்வான பொருளாதாரக் காரணிகளே இப்போதைய உணவு நெருக்கடிகளில் பெரும் பங்காற்றுகின்றன வெனினும் 'சனத்தொகைக் குண்டு' பற்றிய அச்சுறுத்தலையும் அதிகம் புறக்கணிப்பதற்கில்லை. சனப்பெருக்கத்தின் அபாயம் குறித்து முதலில் எதிர்வு கூறியவர்களுள் இங்கிலாந்தைச் சேர்ந்த பொருளியல் நிபுணரான தோமஸ் மல்தூஸ் (Thomas Malthus) குறிப்பிடத்தக்கவர். இவர் வாழ்ந்த காலப் பகுதியில் (1766-1834) உலக சனத்தொகை அதிகமில்லை ஏறத்தாழ ஒரு பில்லியன் தான். எனினும், 'சனப்பெருக்கம் கேத்திரகணித விரிவில் அதிகரிக்க உணவுப் பெருக்கம் எண்கணித விரிவிலேயே நகரும்' என மதிப்பிட்ட மல்தூஸ், 'இந்த ஒத்திசைவின்மையால் உலகம் பஞ்சம் பட்டினியால் அழிய நேரிடும்' என்று முன்னெச்சரித்திருந்தார். மேலும், 'சனத்தொகைப் பெருக்கம் உணவுப் பஞ்சம், நோய், யுத்தம் போன்றவற்றால் கட்டுப்படுத்தப்படும் வரை தொடரும்' எனவும் தெரிவித்தார் இது, 'மல்தூஸின் கொள்கை' எனப்படுகிறது. மல்தூஸின் கொள்கையை சரியென நிரூபிப்பது போல 1845இல் அயர்லாந்துப் பஞ்சம் உலகை உலுக்கியது. அயர்லாந்தில் 1700-1841 கால இடைவெளியில் சனத்தொகை 3 மில்லியனில் இருந்து 8 மில்லியனாக உயர்ந்தது. உருளைக் கிழங்குதான் இங்கு பிரதான உணவு. 1845இல் உருளைக் கிழங்கில் ஏற்பட்ட பங்கஸ் நோய்த்தொற்று உற்பத்தியில் பெரும் வீழ்ச்சியை உண்டு பண்ணியதால் கடும் பஞ்சம் ஏற்பட்டது. ஒரு மில்லியன் பேர் வரையில் பட்டினியால் செத்தொழிந்தார்கள். இதைவிட அதிகமானோர் ஏதிலிகளாக இடம் பெயர்ந்தார்கள். சடசடவென சரியத் தொடங்கிய சனத்தொகை 1916இல் தான் பஞ்சத்துக்கு முன்பிருந்த சனத்தொகையில் அரைவாசியுடன் - 4.2 மில்லியன் - நிலைக்கு வந்தது. அயர்லாந்தின் சனத்தொகை இப்போதும் திட்டமிட்டு ஏறக்குறைய இதே அளவில் பேணப்பட்டு வருகிறது.

மனிதனின் தொழில்நுட்ப அறிவாற்றல் உற்பத்தியைப் பெருக்கும் என்பதைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டாலும்கூட, இயற்கையின் மீது மனிதன் தொடுத்துள்ள போரில் அவனது சேனையைத் தக்கவைக்க இயலாது என்பதே யதார்த்தம்.

சனத்தொகை அதிகரிப்பின் அகாலமான அந்திமத்தை விளக்கும் எடுத்துக்காட்டாக அலாஸ்கா பல்கலைக்கழகத்தின் காட்டுயிர் ஆராய்ச்சிப் பிரிவினர் மேற்கொண்ட ஆய்வு ஒன்றும் உள்ளது. அலாஸ்காவின் பீரிங் கடலில் சென், மத்தியூ (St. Matthew) தீவு அமைந்திருக்கிறது. ஆளரவம் இல்லாத இந்தத் தீவு அமெரிக்காவுக்குச் சொந்தமானது. 1944ஆம் ஆண்டு இங்கு கொண்டு போய் 29 துருவ மான்களை (Reindeers) விட்டுள்ளனர். துருவ மான்களுக்குப் பிடித்த உணவான 'இலைக்கன்கள்' (Lichens) தீவில் செழித்துக் கிடந்ததால், துருவ மான்களுக்குத் தீவு சொர்க்கமாகிப் போனது. அளவு கணக்கில்லாமல் பெருக ஆரம்பித்தன. 1963இல் அவற்றின் எண்ணிக்கை 6,000 ஐத்தாண்டியது. ஆனால் அத்தனை மான்களின் உணவுத் தேவையை அந்தச் சிறிய தீவிலுள்ள இலைக்கன்களால் ஈடு கட்ட முடியவில்லை. உணவுக்குப் பெரும் தட்டுப்பாடாகிப் போக, 1964இல் 42 துருவ மான்களைத் தவிர மற்றையவை யாவும் அழிந்து போயின. அயர்லாந்துப் பஞ்சம், அலாஸ்காவில் மான்களின் அழிவு போன்ற சம்பவங்கள் மல்தூஸின் கொள்கையை வழிமொழிந்தபோதும், மல்தூஸ் அவர் காலத்தின் பின்னர் உணவுற்பத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி குறித்துக் கருத்தில் எடுக்கவில்லை என்று வாதிடும் ஆய்வாளர்களும் உண்டு. பயிர்ச்செய்கையில் புகுந்திருக்கும் மரபுமாற்றம் போன்ற நவீன உயிரித் தொழில்நுட்பங்களால் முழு உலகுக்கும் அமுது படைத்துவிட முடியும் என்று நம்பும் இவர்கள் மல்தூஸின் எதிர்வு கூறலை நிராகரிக்கின்றனர். ஆனால், மனிதனின் தொழில்நுட்ப அறிவாற்றல் உற்பத்தியைப் பெருக்கும் என்பதைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டாலும்கூட, இயற்கையின் மீது மனிதன் தொடுத்துள்ள போரில் அவனது சேனையைத் தக்கவைக்க இயலாது என்பதே யதார்த்தம்.

மனித இனம் மற்றைய உயிரினங்களுக்கு மாத்திரம் அல்லாது, தனது அடுத்த சந்ததிக்குக்கூட விட்டுவைக்க மனமில்லாதவாறு இயற்கையைச் சூறையாடி வருகிறது. சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க இயற்கை வளங்கள் வேகவேகமாகத் தீர்ந்து வருவதோடு, இன்னொருபுறம் வளங்களின் தேய்வால் சுற்றுச்சூழலும் கழிவுகளால் நிரம்பி வழிகிறது. இந்த சூழற்சீர்கேடுகளும் உணவுற்பத்தி மற்றும் மனித சனத்தொகையைப் பாதிக்கவல்லன. இதற்கு, பெற்றோலிய வளத்தையும் காபன் உறிஞ்சிகளான காட்டு வளத்தையும் ஏககாலத்தில் அழித்துத் தள்ளுவதால் போக்கிடமின்றி வளிமண்டலத்தில் குவியும் கரியமிலவாயு ஒரு வலிய எடுத்துக்காட்டு. கரியமில வாயு பூமியைச் சூடுபோட்டு வருவதால் (Global Warming) நிலவும் வறட்சி காரணமாக தானிய உற்பத்தி கடும் சரிவைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது. அமெரிக்கப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் நிகழ்த்திய ஒரு ஆய்வில், 1981-2002 வரையான காலப்பகுதியில் உயர் வெப்பம் காரணமாக உலகின் கோதுமை, சோளம், பார்லி ஆகிய தானியங்களின் மொத்த விளைச்சல் ஆண்டுக்கு 40 மில்லியன் தொன்கள் அளவால் வீழ்ச்சியடைந்தது தெரியவந்துள்ளது. ஒரு பாகை பரனைற்று (degree fahrenheit) வெப்பநிலை உயர்வே உலகளாவிய தானிய உற்பத்தியில் 5 விழுக்காடு வரையில் சரிவ செய்துவிடும். வாகனங்களும் தொழிற்சாலைகளும் வளியில் திணித்துக் கொண்டிருக்கிற மாசுக்களால் மனிதர்களின்

(14ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்குமா..

(13ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுளிலும் சரிவுதான். வளிமாசுக்களால் ஆண்டுதோறும் இரண்டு மில்லியன் பேர்வரையில் மரணத்தை உரிய வயதுக்கு முன்னரேயே சந்திக்கின்றனர் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இப்படி, மனிதர்கள் தங்களின் அசுர எண்ணிக்கைப் பலத்தால் இயற்கையின் மீது மேற்கொள்ளும் ஒவ்வொரு வல்லுறவுக்கும் இயற்கையிடம் இருந்து எதிர்விளைவுகள் உ-ண்டு. இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளும்போதே மனித இனம் சந்திக்கும் பேரவலத்தின் முழுப்பரிமாணமும் தெரியவரும்.

மல்தூஸின் கொள்கையை நம்பும் ஆய்வாளர்களில் வியன்னாவில் 'ரோம் கழகம்' (Club of Rome) என்ற பெயரில் இயங்கிவரும் பன்னாட்டுப் புலமையாளர்கள் குழுமமும் (Think Tank) ஒன்று. அரசியல், பொருளாதாரம், சுற்றுச்சூழல் போன்ற சர்வதேச விவகாரங்களில் கவனம் செலுத்தி வருகின்றனர். இவர்கள் சனத்தொகை வளர்ச்சி வீதம், உணவுற்பத்தி ஆகியவற்றின் தரவுகளோடு கைத்தொழில் வளர்ச்சி, இயற்கை வளங்களின் தேய்வு, சூழல்மாசுக்கள் ஆகியனவற்றின் தரவுகளையும் கணினியில் ஏற்றி ஆய்வு செய்து பார்த்துள்ளனர். 2100 ஆம் ஆண்டளவில் உலகப் பொருளாதாரம் அதிதாழ் மட்டத்தை அடைய, உலகின் மரணவீதம் அதி உயர்மட்டத்தை அடையும் என்பதே அந்த ஆய்வில் கணினியின் முடிவாக இருந்துள்ளது. அதிகரித்த தொழில் நுட்ப வளங்கள், அதிகரித்த உணவுற்பத்தி என கணினிக்கு மிகைப்படுத்திய தரவுகளை ஊட்டியபோதும் கணினி, 'அழிவு வரும்' என்ற சோகமான கணிப்பையே தந்துள்ளது. மேலும், அழிவினால் சனத்தொகை 8பில்லியனைத் தாண்டாது எனவும் கணினி கணித்துள்ளது. அதாவது, 8 பில்லியனுக்கு மேற்படாது உலக சனத்தொகையைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பின் 2100 ஆம் ஆண்டளவில் உலகம் அழிவினைச் சந்திக்க வேண்டி நேராது என்பதே இதன் பொருளாகும். ரோம் கழகம் 1972இல் தனது ஆய்வறிக்கையை 'வளர்ச்சியின் எல்லைகள்' (Limits to growth) என்ற பெயரில் நூலாக வெளியிட்டபோது முழு உலகமுமே அதிர்ச்சியடைந்தது என்றால் மிகையில்லை. இந்நூல் 30க்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புகளில் 3 மில்லியன் பிரதிகள் வரை விற்று கின்னஸ் சாதனை படைத்தது. மல்தூஸின் கொள்கையைப் போன்றே, மல்தூஸின் கொள்கையைப் பிரதிபலித்த ரோம் கழகத்தின் ஆய்வறிக்கை மீதும் விமர்சனங்கள் எழுந்தன. இருந்தபோதும், ரோம் கழகம் தனது ஆய்வு முடிவுகளின்மீது இற்றைவரையில் விடாப்பிடியான நம்பிக்கை கொண்டுள்ளது.

பெருகிவரும் சனத்தொகை காரணமாக மனித இனம் 2100 ஆம் ஆண்டளவில் பெ-ரும் அழிவைச் சந்திக்க நேரும் என்பதில், 2100 ஆம் ஆண்டு என்ற காலக்கெடு விவாதத்துக்கு உரியதாக இருக்கலாம். ஆனால், மனித குலத்துக்கும் அவனது தொகையே கேடு என்பதில் இன்னொரு கருத்துக்கு இடம் இருக்க முடியாது. மனிதன் உட்பட தனது அத்தனை படைப்புகளுக்கும் படியளக்கவேண்டிய இயற்கை இன்று மனிதச் சுமையைத் தாங்க முடியாமல் சமநிலை தளம்பித் தள்ளாடுவது கண்கூடு. இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வு இயற்கை வளங்களின் தாங்கும் எல்லைக்கு அப்பால் சனத்தொகையை அதிகரிக்க விடாது பிறப்பைக் கட்டுப்படுத்துவதுதான். சராசரியாக உலகக் குடும்பமொன்று இரண்டு குழந்தைகளைக் கொண்டதாகும் வகையில் பிறப்புக்குறைப்பை மேற்கொள்ளவேண்டும் என்பதைத் தனது ஆய்வின் முடிவாக ரோம் கழகம் முன்மொழிந்துள்ளது. இதன் அடிப்படையிலேயே அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் உலகளாவிய உணவு நெருக்கடிக்கு விடையாக வளர்முக நாடுகள் தமது சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தியாக வேண்டும் என்று வலியுறுத்திவருகின்றன. வளர்முக நாடுகளுக்கு நிதியுதவிகள் வழங்குவதற்கு அந்நாடுகள் இறுக்கமான பிறப்புக்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும் என உலக வங்கி நிர்ப்பந்தித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆ-னால், இந்தக் கட்டாயங்கள் எதனாலும் வளர்முக நாடுகளின் சனப்பெருக்கத்தை பெருமளவுக்குக் குறைத்துவிட இயலவில்லை. இதற்கு இந்தியா ஒரு சாட்சி. உலகிலேயே முதன் முதலாகக் குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்தி வெகுசன ஊடகங்களின் மூலம் விழிப்புணர்வுப் பரப்புரையை முன்னெடுத்த நாடு இந்தியா தான். 'நாம் இருவர் நமக்கு இருவர்' என்று அளவில் சிறுத்த குடும்பங்களுக்கு சலுகைகள் வழங்கியும், குக்கிராமங்கள் வரை கருத்தடை முகாம்களை முன்னெடுத்தும் வருகிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, அகிம்சா தேசம் என்று சொ-ல்லப்படுகிற இந்தியா பலாத்காரமாகவும் கருத்தடை அறுவைச் சிகிச்சைகளை செய்து பார்த்தது. இந்திராகாந்தி அம்மையார் பிரதமராக இருந்தபோது, 1975-77 காலப்பகுதியில் மானுடமே வெட்கித் தலைகுனியும் விதமாக ஏழை எளி-ய மக்கள் தெருநாய்கள் போல இழுத்துச் செல்லப்பட்டு மலடுகள் ஆக்கப்பட்டார்கள்.

ஏழை நாடுகள் பிறப்பைக் கொண்டாட வேண்டியுள்ளது. ஒவ்வொரு குழந்தையின் வருகையையும் அன்றாட வருமானத்துக்குக் கைகொடுக்க வந்த 'இரண்டு கைகள்' ஆகவே நினைக்கின்றன. இந்த வித்தியாசம் இருக்கும் வரையில் ஏழை நாடுகளில் குடும்பக் கட்டுப்பாடு என்பது யதார்த்தபூர்வமானதல்ல.

ஆனாலும் என்ன? பாரதமாதாவின் சனப்பாரம் குறைந்தபாடில்லை. சீனாவின் சனத்தொகையை விரைவில் முந்திவிடும் வேகத்தில் பெருகிக் கொண்டிருக்கிறது.

வளர்முக நாடுகளின் வள ஆதாரங்களைச் சுரண்டிக் கொழுத்து வாழும் மேற்கு நாடுகள் தங்களைப் போன்ற பணக்கார நாடுகளுக்கே உலகம் சொந்தம் என்று கருதுகின்றன. இதனால் ஏழைநாடுகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் தங்களது உணவைத் தட்டிப்பறிக்க மேலதிகமாக வந்து சேர்ந்த 'ஒரு வாய்' என்றே பார்க்கின்றன. ஆனால், ஏழை நாடுகள் பிறப்பைக் கொண்டாட வேண்டியுள்ளது. ஒவ்வொரு குழந்தையின் வருகையையும் அன்றாட வருமானத்துக்குக் கைகொடுக்க வந்த 'இரண்டு கைகள்' ஆகவே நினைக்கின்றன. இந்த வித்தியாசம் இருக்கும் வரையில் ஏழை நாடுகளில் குடும்பக் கட்டுப்பாடு என்பது யதார்த்தபூர்வமானதல்ல. மாறாக, வளர்ந்த நாடுகளுக்கு இணையாக ஏழை நாடுகளின் வாழ்க்கைத் தரத்திலும் கல்வியறிவிலும் ஏற்படும் வளர்ச்சியே அதன் மக்கள் தொகையைத் தானாகக் கட்டுக்குள் கொ-ண்டுவரும். ஏழை நாடுகள் இந்த உயரத்தை எட்டுவதற்கு வளர்ச்சியடைந்த நாடுகள் கொஞ்சம் கீழே இறங்கிவர வேண்டும். இதற்கு, வளர்ச்சியடைந்த நாடுகள் அதிகம் இழக்க வேண்டியதில்லை. தங்களின் ஆடம்பரமான மிகை நுகர்ச்சியைச் சற்றுக் குறைத்துக் கொண்டாலே போதுமானது. ஆனால் அப்படிச் செய்யுமா என்பதுதான் பிரச்சினையே. மனிதன் தன் பெருக்கத்தைத் தானே கட்டுப்படுத்துவதற்குத் தவறின் மனிதனுக்கு உவப்பல்லாத வழிகளில் இயற்கை தன் கணக்கைத் தானே சரி செய்துவிடும். அது பஞ்சமும் பட்டினியும் கொள்-ளை நோய்களுமாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. கடற்கோள்கள், கடும்புயல்கள் போன்ற இயற்கைச் சீற்றங்களாகவோகூட இருக்கலாம்.

✦ ✦ ✦

செய்தித் துளி

யாழ் வடமராட்சி கரவெட்டி துன்னாலைப் பகுதியில் கடந்த 29-08-2008 ம் திகதி காணாமல் போன பாஸ்கரன் கௌசல்யா(15) என்ற மாணவி பனங்காணி ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் விநாயகர் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் இவர் அணிந்திருந்த சட்டையை வைத்தே உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

யாழ் தென்மராட்சி சரசாலை கண்டல் காட்டுப் பகுதியில் 03-09-2008 காலை சாவக்கச்சேரி பொலிசாரினால் கண்டெடுக்கப்பட்ட இனந் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் யாழ் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சடலத்தில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.இதேவேளை யாழ்ப்பாணம் வேலணை மண்கும்பான் கடற்கரையில் கைகள், கால்கள் முட்கம்பியினால் கட்டப்பட்ட நிலையில் ஊர்காவற்துறை பொலிசாரினால் ஆண் ஒருவரின் சடலம் 02.09.2008 மீட்கப்பட்டுள்ளதாகவும் அடையாளம் காண்பதற்காக யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அம்பாறை கல்முனை பாண்டிருப்பு பிரதேசத்தில் கடந்த 02.09.2008 அன்றிரவு 10.00 மணியளவில் கே.வரதலெட்சுமி (60) என்ற வ-யோதிபப் பெண் இனந்தெரியாத ஆயுதம் தாங்கியவர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பருகுவோம் ஒரு கிண்ணம் மது"

-கவிஞர் மஹ்முத் தர்வீஷ்

பலஸ்தீனத்தின் கவிஞன் மக்மூட் டார்விஷ், தனது 67 வயதில் காலமானார். உலகப் புகழ் பெற்ற இக்கவிஞனின் கவிதைகள் பலஸ்தீனியப் போராட்டத்திற்கு பெரும் தூண்டுதலாக இருந்து வந்திருக்கின்றன. அவருடைய அண்மைக் கால நேர்காணல் ஒன்றினை வைகறை வாசகர்களுக்காக இங்கு பிரசுரிக்கின்றோம்.

நீண்ட நாட்களுக்குப் பின் மஹ்முத் தர்வீஷ் ஹை..பாவுக்கு வந்திருந்தார். ஹை..பா, பலஸ்தீனியர்களுடைய இடமாக ஒரு காலத்தில் இருந்தது. இப்போது இஸ்ரேலின் அங்கமாக இணைக்கப்பட்டு விட்டது. பலஸ்தீனத்தின் சிறப்பான கவிதைக் குரலான மஹ்முத் தர்வீஷ், தன்னுடைய இலக்கியப் பயணத்தை ஆரம்பித்து ஹை..பாவில் தான். மஹ்முத் தர்வீஷ் கவிதை வாசிப்பைக் கேட்க 1450 பேர் திரண்டார்கள். ஜோர்தானின் தலைநகரான அம்மானில் வசித்து வந்தாலும் தனது சொந்த இடமான ரமல்லாவுக்கு அடிக்கடி வந்து போனார் தர்வீஷ். இரண்டே இரண்டு நாட்கள் மட்டும் தான் ஹை..பாவில் தங்க மஹ்முத் தர்வீஷ்க்கு அனுமதி வழங்கியிருந்தது இஸ்ரேலிய அரசு. செய்தி இதழில் ஜூலை 13, 2007 அன்று வெளியானது. உரையாடலில் கலந்து கொண்டவர் டல்லா கர்பெல் (Dalla Karpel).

ஆங்கிலத்திலிருந்து தமிழில்: சேரன்.

• ஹை..பாவிற்குச் செல்வது பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

எனக்கு 50 வயது கடந்த போது என்னுடைய உணர்ச்சிகளை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதைக் கற்றுக் கொண்டேன். எத்தகைய எதிர்பார்ப்புக்களும் இல்லாமல் ஹை..பாவிற்குச் செல்கிறேன். என் இதயத்திலே ஒரு வேலி உள்ளது. பார்வையாளர்களைச் சந்திக்கிற போது சில கண்ணீர்த் துளிகளை நான் சிந்தக் கூடும். என்னை அவர்கள் மிகுந்த அன்புடன் கட்டித் தழுவிக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். எனினும், அவர்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கி விடுவேனோ என்ற ஆதங்கமும் என் மனதில் உள்ளது. ஏனெனில், என்னுடைய பழைய கவிதைகள் எவற்றையுமே நான் நிகழ்த்தப் போவதில்லை. ஒரு தேசப் பற்றாளனாக, ஒரு மாவீரனாக அல்லது ஒரு குறியீடாக நான் அவர்கள் முன் நிற்க விரும்பவில்லை. அடக்கம் வாய்ந்த ஒரு சாதாரண கவிஞனாகவே நான் அவர்கள் முன் தோன்ற விரும்புகிறேன்.

• பலஸ்தீனத்தின் தேசியக் குறியீடாக விளங்கிய ஒருவர் தன்னடக்கம் மிகுந்த ஒரு சாதாரணக் கவிஞராக உருமாற்றம் பெறுவது எப்படிச் சாத்தியமாகியது?

அத்தகைய தேசியக் குறியீடு எதுவும் எனது உணர்விலோ அல்லது என்னுடைய கற்பனையிலோ இல்லை. தேசியக் குறியீடுகள் கோரும் நிபந்தனைகளையும், தேவைகளையும் நான் உடைக்க விரும்புகின்றேன். பலஸ்தீன தேசியத்தின் திருவுருவமாக என்னைப் பார்ப்பதையும் தவிர்த்துவிட வேண்டும். என்னை சாதாரண மனிதனாகப் பாருங்கள். தன்னுடைய கவிதைகளையும் தன்னுடைய வாசகர்களையும் தொடர்ந்து புடமிட விரும்பும் ஒருவனாக என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்.

• ஏன் உங்கள் பழைய கவிதைகளை ஒதுக்கி விடுகிறீர்கள்?

ஒரு கவிஞன் தன்னுடைய முதலாவது கவிதைத் தொகுதியைத் தான் உன்னதம் என்று கொண்டாடினால், அது மோசமான நிலைமை தான். ஒவ்வொரு தொகுதியிலும் நான் பரிமாணம் அடைந்து வருகிறேன். ஹை..பாவில் எனது வாசகர்களுக்காக எந்தக் கவிதைகளை நிகழ்த்தப் போகின்றேன் என்று நான் இன்னமும் முடிவு செய்யவில்லை. ஆனால், பலர் என்னுடைய பழைய கவிதைகளைக் கேட்க விரும்புவார்கள் என்று எனக்குத் தெரியும்.

எந்த நம்பிக்கையும் இல்லாவிட்டாலும் கூட நம்பிக்கைகளை உருவாக்குவதும் படைப்பதும் நமது கடமையாக இருக்க வேண்டும். நம்பிக்கை இல்லையென்றால் நாங்கள் தொலைந்து விடுவோம்.

• எங்கள் தேசத்திற்கு எந்த நம்பிக்கை யாவது இப்போது எஞ்சியுள்ளதா?

எந்த நம்பிக்கையும் இல்லாவிட்டாலும் கூட நம்பிக்கைகளை உருவாக்குவதும் படைப்பதும் நமது கடமையாக இருக்க வேண்டும். நம்பிக்கை இல்லையென்றால் நாங்கள் தொலைந்து விடுவோம். சிறுசிறு விடயங்களிலிருந்து கூட நாங்கள் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும். இயற்கையின் அழகு, வாழ்க்கையின் உன்னதம், அதன் நொய்மை என்று பல உள்ளன. உள்ளத்தை நலத்துடன் பேணுவது மிகவும் தேவையானது அல்லவா? இப்போதைய சூழலில் நம்பிக்கையைப் பற்றிப் பேசுவது கடினம் என்று எனக்குத் தெரியும். நாம் வரலாற்றையும் புறமொதுக்கி விட முடியாது. நிகழ் காலத்தையும் மறக்க முடியாது. கட்டாயமாகவேனும் நாங்கள் நம்பிக்கையைக் கண்டு பிடித்தாக வேண்டும்.

• எப்படி நாங்கள் நம்பிக்கையைக் கண்டு பிடிப்பது?

குறியீடுகளோடும் உருவகங்களோடும் படிமங்களோடும் உறவாடுபவன் நான். கவிதையின் துணை கொண்டு முன்னே பார்க்கவும் நம்பிக்கையின் ஒளிக்கீற்றைக் காணவும் என்னால் முடியும் என்று நம்புகின்றேன். கவிதை சில சமயங்களில் கள்ளப் பிறப்பாளனாகவும் இருக்கும். கவிதை உருமாற்றத்தை ஏற்படுத்தி விடும். யதார்த்தமற்றதை யதார்த்தமானதாக மாற்றும் மாயவித்தை கவிதைக்குரியது. அது போலவே, யதார்த்தத்தை கற்பனையாகவும் படிமங்களாகவும் அது மாற்றி விடுகின்றது. நாங்கள் வாழுகின்ற உலகத்தோடு முரண்பாடும் இன்னொரு உலகைக் கவிதை கட்டியெழுப்ப வல்லது. கவிதையை ஆத்மீக மருந்தாகவே நான் உணர்கிறேன். வாழ்வில் நான் காண முடியாதவற்றை வார்த்தைகளால் நான் கட்டியெழுப்புகின்றேன். அது ஒரு மாயத் தோற்றம் எனினும் நன்மை தரக் கூடியது. இதைவிட வேறு எந்தக கருவிகளும் என்னிடம் இல்லை. எனதும் எனது தேசத்தினது வாழ்க்கைக்கும் நான் தரக் கூடியது இது மட்டும் தான்.

• எந்த நம்பிக்கையைப் பற்றிப் பேசுகிறீர்கள்?

காஸாவிலும் மேற்குக் கரையிலும் இருந்து இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேறத் தயாராயில்லை. பலஸ்தீனிய மக்கள் தமக்கான 22சதவீத நிலத்தில் சுயமாக வாழ விரும்புகிறார்கள். தாயகத்திற்கும் அரசுக்கும் உள்ள வேறுபாடுகளை அவர்கள் அறிவர். இப்போதுள்ள அவல நிலையைத் தோற்றுவித்த காரணிகளின் வரலாறு பற்றியும் அவர்களுக்குத் தெரியும். இரு இனங்கள் ஒரே நிலத்தில், ஒரே நாட்டில் வாழ்கின்றன. எனினும், அவர்களிடையே பேசுவதற்கு ஒன்றுமில்லை.

• காஸாவின் இப்போதைய நிலை யைப் பற்றிய உங்கள் கருத்தென்ன?

மிகத் துயரமான நிலை. உள்நாட்டு போர் நிலமை அங்கே நிலவுகிறது. ஹமாஸுக்கும் ..பற்றா(Fatah) வுக்கும் இடையே நடந்தவை மூடப்பட்ட தொடுவானத்தைத் தான் எனக்கு நினைவூட்டுகிறது. எமக்கு பலஸ்தீன அரசும் இல்லை, பலஸ்தீன அதிகார சபை (PA)யும் இல்லை. எனினும், வெறும் மாயத் தோற்றங்களுக்காக அவர்கள் அங்கே தமக்குள் போராடுகிறார்கள். இரண்டு பகுதியினருமே அரசு உருவானால் தாமே அதனைக் கைப்பற்றிவிட வேண்டுமென நினைக்கிறார்கள். காஸா என்பது மிகப்பெரிய சிறைச்சாலையாக இப்பொழுது காட்சி தருகிறது. அங்குள்ளவர்கள் ஏழைகள். அவர்களிடம் எதுவுமே இல்லை. எவருக்குமே வேலை இல்லை. அடிப்படை மருத்துவ வசதி கூடக் கிடையாது நம்பிக்கையற்ற மக்கள் கூட்டம் போல அவர்கள் இருக்கிறார்கள். இந்தச் சூழலில், உள்ளக வன்முறை உருவாவது தவிர்க்க முடியாதது. யாருடன் போரிடுவது என்று தெரியாமல் தமக்குள்ளே மோதிக் கொள்கிறார்கள். காஸாவில் நிலவும் பொருளியல், மனோவியல், அரசியல் அழுத்தங்களின் பெரு வெடிப்பே இந்தப் போர் என்று நான் கருதுகின்றேன்.

• ஹமாஸின் அடிப்டைவாதத்தையிட்டு உங்களுக்கு அச்சம் உள்ளதா?

மதச்சார்பற்றவர்களுக்கும் இல்லாமிய மரபைப் பேணுபவர்களுக்கும் இடையே பலஸ்தீனத்தில் ஒரு கலாசார, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதாத பலஸ்தீனியர்கள், பல்லினப் பண்பாடு, பல்கலாச்சார அமைப்பு என்பவற்றை வலியுறுத்துகிறார்கள். ஆனர்ல், மற்றையவர்களோ இஸ்லாமிய மரபுக்கூடாகவே பலஸ்தீனத்தை கட்டியமைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்த நிலமை, அரசியல் ரீதியாக என்னை அச்சுறுத்தவில்லை. ஆனால், கலாச்சார, பண்பாட்டு ரீதியாக என்னை அச்சுறுத்துகிறது. தங்களுடைய நம்பிக்கைகளை மற்றவர்கள் மீது திணிக்கின்ற ஹமாஸின் போக்கு என்னை மிகுந்த சங்கடத்துக்குள்ளாக்குகிறது. ஒரு தடவை மட்டுமே ஜனநாயகம் என்பதை அவர்கள் நம்புகிறார்கள் போலத் தெரிகிறது. இது ஒழுங்கான ஜனநாயமாக இருக்க முடியாது எனினும் ..பற்றா, ஹமாஸ் அமைப்பினர் தனித் தனியாக இயங்குவது சாத்தியமில்லை. குருதியின் வெம்மை இன்னுமே ஆறவில்லை என்பதால் உடனடியாகவே இருதரப்பும் பேச்சவார்த்தையில் ஈடுபடுவது சாத்தியமில்லை. எனினும், தமது நடவடிக்கைகளுக்காக ஹமாஸ் அமைப்பினர் மன்னிப்புக் கோரி, காஸாவைப் பழைய அதிகாரச் சமநிலைக்குக் கொண்டு வரத் தயாராக இருந்தால் கணிசமான ஆதரவைப் பெற்றிருக்கும் ஹமாஸைப் புறந்தள்ளி விட முடியாது.

• இப்போதுள்ள நிலமை இஸ்ரேலுக் குத் தானே வாய்ப்பாக உள்ளது?

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடப் பொருத்தமான எவரும் பலஸ்தீனத் தரப்பில் இல்லை என்று தான் இஸ்ரேல் நீண்டகாலமாகக் கூறி வந்துள்ளது. மஹ்முத் அப்பாஸ் உடன் பேசலாம் என்று இப்போது சொல்கிறார்கள். ஹமாஸ் தேர்தலில் வெல்வதற்கு முன்னரும் கூட அப்பாஸ் இருந்தவர் தானே! இஸ்ரேலியப் படைகளின் ஒரு சோதனைச் சாவடியையாவது நீக்க முடியவில்லை. இஸ்ரேலுக்கு அந்த நிலையில் அப்பாஸால் என்ன செய்ய முடியும்? இஸ்ரேலுடைய இத்தகைய கொள்கைகள் தான் பலஸ்தீனத்தில் வன்முறையையும் அதிதீவிரவாதத்தையும் ஊக்குவிக்கின்றன. சமாதானத்துக்காக எதனையும் வழங்க இஸ்ரேல் தயாரில்லை. 1967ம் ஆண்டின் எல்லைகளுக்கு அவர்கள் திரும்பிச் செல்லத் தயாராக இல்லை. பலஸ்தீன அகதிகளைப் பற்றிப்

(16ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருகுவோம்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

பேச அவர்கள் தயாராக இல்லை. ஜெருச லேம் பற்றிப் பேசவும் அவர்கள் தாயாராக இல்லை. அப்படியானால் பேச்சுவார்த்தை கள் எதற்கு? வரலாற்றையும், ஐதீகங்களை யும் பிரித்துப் பார்ப்பதற்கு இஸ்ரேல் கற்றுக் கொள்ளாதவரை இந்த இருட்குகையின் முடிவில் எந்த ஒரு வெளிச்சத்தையும் என் னால் காண முடியாது.

- **இஸ்ரேல் - பலஸ்தீனம் என்ற இரு தேசங்களுக்கிடையே எப்போதாவது உடன்பாடு ஏற்படும் என்று நம்புகி றீர்களா?**

நான் நம்பிக்கை இழக்கவில்லை. இஸ் ரேலியர்களுடைய உணர்வு நிலையில் ஒரு பாரிய மாற்றம் ஏற்பட வேண்டும். அந்த மாற்றத்திற்காக நான் பொறுமையுடன் காத்திருக்கிறேன். உறுதியான, அணுஆயுதம் தரித்த மிகப் பலமான இஸ்ரேலை ஏற்றுக் கொள்வதற்கு அராபியர்கள் தயாராகவே உள்ளனர். ஆனால், இஸ்ரேல் தான் சமா தானக் கதவுகளைத் திறக்கத் தயாராக இல்லை.

- **நிலத்துக்காக மரணம் என்று நில மும் மரணமும் ஒன்றாகப் பிணைந் திருக்கும் பயங்கர நிலையிலிருந்து விடுபட இருதரப்புமே தயாராக இல்லை அல்லவா?**

இஸ்ரேலிய அரசியல் வாதிகளிடம் ஒரு கலாசாரப் புரட்சி ஏற்பட வேண்டும். அந்த நாட்டின் இளைஞர்களை எப்போதுமே அடுத்த போருக்காக காத்திருக்கச் செய்வது மிகக் கடினமானது. உலக மயமாதல் அந்த இளைஞர்களின் மீது பெருந் தாக்கம் செலுத்துகிறது. அவர்கள் வாழ விரும்பகிறார்கள். வெளிநாடுகளுக்குப் பயணம் செய்ய விரும்பகிறார்கள். இஸ்ரேலிய இராணுவ வாழ்க்கைக்கும் வெளியே இன்னொரு வகையான வாழ்க்கையை அவர்கள் வாழ விரும்பகிறார்கள். இஸ்ரேலிய மக்களிட மும், பலஸ்தீனிய மக்களிடமும் காணப்படு கின்ற அவநம்பிக்கையையும், ஆற்றாமை யையும் நாம் ஒப்பிட முடியாது. ஏனெனில், இஸ்ரேலிய மக்களிடமும், இஸ்ரேலிய சமூகத்திலும் இந்த ஆற்றாமை இருக்குமா னால் அது நல்ல அறிகுறி. மக்களிடம் இருக்கிற ஆற்றாமை இஸ்ரேலியத் தலைவர் களை ஒரு நல்ல தீர்வு நோக்கி நகர வழி சமைக்குமானால் அது நல்லது.

ஒரு படைத்தலைவனுக்கும் கவிஞனுக்கு உள்ள வேறுபாடு என்ன என்று தெரியுமா? புடைத்தலைவன் போரக்களத்தில் கொல்லப்பட்ட எதிரிகளின் உடல்களை எண்ணிக் கொண்டிருக்கிறான். ஆனால், கவிஞனோ எத்தனை மனிதர்கள் கொல்லப்பட்டுள் ளனர் என்பதை எண்ணிக் கொண்டிருக்கி றான். இறந்தவர்களுக்கிடையே பகைமை இருக்க முடியாது. எங்களுக்கு எதிரியாக இருப்பது ஒன்றே ஒன்றுதான். மரணம். இந்த உருவகம் மிகத் தெளிவானது. இரு தரப்பிலும் இறந்து போனவர்கள் எதிரிகளாக இருக்க மாட்டார்கள்.

- **செக் நாட்டு எழுத்தாளர் வஸ்லாவ் ஹவெல் அரசியலில் இறங்கியது போல நீங்களும் அரசியலில் இறங் குவீர்களா?**

ஹவெல் ஒரு நல்ல ஜனாதிபதியாக இருந்திருக்கலாம். ஆனால், அற்புதமான எழுத்தாளராக அவர் அறியப்படவில்லை. அரசியலை நன்றாகச் செய்வதை விட கவி தைகளை நன்றாக எழுதுவதே எனக்குக் கை கூடுகிறது.

- **1970இல் கொம்யூனிஸ்ட் இளைஞர் அமைப்பில் நீங்கள் இருந்தபோது அமைப்பின் பிரதிநிதியாக எகிப்து சென்றீர்கள். ஆனால் திரும்பி வராமல் அங்கேயே இருந்து விட்டீர்கள். இது குறித்து இப்போது கவலைப்படுகிறீர்களா?**

சில வேளைகளில் காலம் எங்களுக்கு ஞானத்தைத் தருகிறது. முரண் நகையின் அர்த்தங்களை வரலாறு எனக்குக் கற்றுத் தந்திருக்கிறது. 1970ல் நாட்டை விட்டுப் பிரி ந்தமை பற்றி நான் கவலைப்படுகிறேனா என்ற கேள்வியை நான் எப்போதுமே கேட பதுண்டு. இந்தக் கேள்விக்கான மறுமொழி

வீடு என்பது பொருளும் தளபாடங்களும் சார்ந்தது அல்ல. இடமும், வெளியும், சிக்கலான உணர்வுகளும் சேர்ந்து பிணைந்த ஒரு தளம். இப்போது எனக்கு வீடில்லை...

என்னவென்பது முக்கியமல்ல என்ற முடிவுக்கே நான் இப்போது வந்துள்ளேன். கார்மல் மலை (Mount Carmel) யிலிருந்து நான் ஏன் இறங்கி வந்தேன் என்பதே என க்கு முக்கியமாக்கப்படுகிறது.

- **ஏன் இறங்கினீர்கள்?**

முப்பத்தேழு ஆண்டுகளக்குப் பின் திரு ம்பி வருவதற்காகத்தான். 1970ல் நான் மலையிலிருந்து இறங்கி வந்ததும் இல்லை. இப்போது 2007ல் திரும்பி வந்ததும் இல்லை. உண்மையில் இது ஒரு உருவகம். இன்றைக்கு நான் ரமல்லாவில் இருக்கி றேன். அடுத்த கிழமை கார்மல் மலைக்குப் போகிறேன். 40 ஆண்டுகளாக நான் அங்கே இல்லை என்பதை நான் நினைவில் கொள்வேன். எங்கிருந்து துவங்கினேனோ அங்கேயே திரும்புகிறேன். எனினும், எனது நீண்ட பயணம் ஒரு உருவகம் தான்.

- **ஏதாவது ஒரு நல்வாய்ப்பு அமைந்து நீங்கள் ஹை.்.பாவுக்கும், கலிலீக் கம் உங்களுடைய குடும்பத்துக்கும் திரும்ப முடியும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படியானால்.....?**

1996இல் 26 ஆண்டுகளுக்குப் பின்பு முதன் முறையாக ஹை.்.பாவுக்குத் திரும்பி யது உங்களுக்குத் தெரியும். உணர்ச்சி மேலீட்டால் நான் அழுததும் உங்களுக்குத் தெரியும். அப்போது நான் ஹை.்.பாவி லேயே தங்கிவிட விரும்பினேன். அது இஸ் ரேலிய நிலமாக மாறிவிட்ட பின்பும். ஆனால் இப்போது என்னைக் கேட்பீர்களா னால் எனது பலஸ்தீன அடையாளத்தை விட்டு இஸ்ரேலிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள மாட்டேன். அது எனக்கு வெட்கத்தைத் தரும். நான் இங்கேயில்லாத அந்த நீண்ட ஆண்டுகளில் நான் என்ன செய்தேனென்பது தான் முக்கியம். நான் நன்றாக எழுதப் பழகினேன். என்னுடைய கவிதைகள் மேலும் மேலும் மெருகேறின. கலை இலக்கியக் கண்ணோட்டத்தில் இரு ந்து பார்க்கிற போது என்னுடைய இலக்கிய வளர்ச்சி என்னுடைய தேசத்திற்கு மிகுந்த பயன்பாடுடையதாக அமைந்தது.

- **அரசில் சூழ்நிலை மோசமடைந்திரு க்கும் நிலையில் நீங்கள் இங்கே கவிதை நிகழ்த்த வந்தமை பற்றி சிலர் கண்டனம் தெரிவிக்கிறார் களே?**

நாங்கள் உயிரோடிருக்கிறோம். எதுசரி, எது பிழை என்பது இப்போது எனக்கு சரியாகத் தெரியவில்லை. எங்களுடைய காலமும் நேரமும் நேரப் பொருத்தங்களும் ஒழுங்கற்றுச் சிதறிக் கிடக்கின்றன. இது தான் என்னுடைய முதல் வருகையும் அல்ல. 1996ல் நண்பரும் சிறந்த எழுத்தாளரு மான எமில் ஹபீபியின் இறுதிச் சடங்குக ளில் பங்களிக்க வந்திருந்தேன். பின்னர், நாஸரேத் நகரில் என்னுடைய கவிதைகளை நிகழ்த்த வந்திருந்தேன். அரசியல் கடசிகளின் சண்டை சச்சரவுகளுக்குள் நான் சிக்குப்பட விரும்பவில்லை. இஸ்ரேலில் வாழ்கிற அத்தனை பலஸ்தீன, அரபு மக்க ளினதும் விருந்தாளியாக வந்திருக்கிறேன். அவர்கள் எல்லோருக்குமான கவிஞன் நான். இங்குள்ள பல கவிஞர்கள் என்னை வெறுக்கிறார்கள் என்பது எனக்குத் தெரி யும். கவிஞர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் பலரும் இவர்களில் இருக்கிறார் கள் என்பதும் எனக்குத் தெரியும். பொறாமை என்பது மனித உணர்வு. ஆனால் அது தீவிர வெறுப்பாக மாறுகிறபோது வேறொரு பயங்கர உணர்வாக மாறிவிடுகிறது. என்னை இலக்கியத் தடைக்கல்லாகப் பார்ப்ப வர்களும் இருக்கிறார்கள். ஆனால், நான் அவர்களைச் சிறுவர்களாகத்தான் பார்க்கி றேன். தங்களது ஆத்ம தந்தைக் கெதிராக அவர்கள் கலகம் செய்ய வேண்டும். என் னைக் கொலை செய்வதற்கான உரிமை அவர்களுக்கிருக்கிறது. ஆனால் அந்தக் கொலை, இலக்கியத்தின் பிரதியில் ஒரு உயர்ந்த தளத்தில் நிகழ வேண்டும்.

- **யூத-இஸ்ரேலிய அறிவுஜீவிகளுடன் உங்களுக்கு உறவுகள் உள்ள னவா?**

யூதக் கவிஞர் யிச்சாக் லாவோர் (Yitzak Lavor) மற்றும் வரலாறியலாளர் அம்னொன் - றாஸ் - கிறாக்கேட்ஸின் (Amnon-Raz-Krakatzkin) ஆகியோருடன் தொடர்புகள் உள்ளன. கடந்த இருபது ஆண்டுகளில் ஹிப்ரு மொழியில் நான் அதிகம் வாசித்தது கிடையாது. ஆனால் பல இஸ்ரேலிய எழுத் தாளர்களில் எனக்கு ஈடுபாடு உள்ளது.

- **பலஆண்டுகளுக்கு முன்பு அப்போ தைய இஸ்ரேலிய கல்வி அமைச்சர் யொஸ்ஸி சாரிட் (Yossi Sarid) உங் களுடைய கவிதை களை இலக்கி யப் பாடத்திட்டங்களில் அறிமுகப் படுத்த முயன்றார். அதனால் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இஸ் ரேலின் கூட்டாட்சி அரசையே கவி ழ்த்து விடப் போவதாக பயமுறுத்தி னார்கள். இது உங்களுக்குப் பெரு- மை தரும் விடயமல்லவா?**

என்னுடைய கவிதைகள் பாடப் புத்தக த்தில் இடம் பெறுவது பற்றி எனக்கு எந்த ஆர்வமும் இல்லை. என்னுடை கவிதைக ளைப் பாடப் புத்தகங்களில் இடம்பெற, அர சுக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த விவாதத்தின் போது நான் மற்ற வர்களைக் கேட்டது இதுதான். ஒரு பலஸ் தீனக் கவிஞனுக்காக ஆட்சியைக் கவிழ்க் கத் தயாராக இருக்கிறீர்களே? அதனை விட வேறு பலமான காரணங்கள் உங்க ளுக்குக் கிடைக்கவில்லையா? அரபுப் பாட சாலைகளிலும் எனது கவிதைகள் கற்பிக்க ப்படுவதில் எனக்கு ஆர்வமில்லை. பாடத்தி ட்டங்களில் இடம் பெறுவதும் எனக்கு விரு ப்பமில்லை. ஏனென்றால், தம்மீது திணிக் கப்படுகிற எந்த இலக்கியத்தையும் வெறு ப்பதே மாணவர்களது வழமையாக இரு க்கிறது.

- **உங்களுடைய வீடு எங்கேயுள்ளது?**

எனக்கு வீடில்லை. கணக்கற்ற தட வைகள் வீடுகள் மாறவும் இடம் பெயரவும் நேர்ந்தமையால் ஒரு ஆழமான அர்த்த த்தில் எனக்கு வீடு என இப்போது எதுவும் கிடையாது. எங்கே தூங்குகிறேனோ, எங்கே கவிதை எழுதுகிறேனோ, எங்கேயி ருந்து வாசிக்கிறேனோ, அந்த இடமே என க்கான வீடு. அது எங்கேயும் இருக்கலாம். இதுவரை இருபது வீடுகளில் வாழ்ந்திருக்கி றேன். எனது நூல்களையும், மருந்துகளை யும், ஆடைகளையும் விட்டு விட்டு பல முறை ஓட வேண்டி ஏற்பட்டது.

- **சிஹாம் தாவூத் ஆவணக் காப்பக த்தில் 1970இல் நீங்கள் விட்டுச் சென்ற உங்களுடைய கடிதங்கள், கவிதைகள், கையேடுகள் இருக்கி ன்றன அல்லவா?**

அந்த இடத்திற்கு என்னால் திரும்பி வரவே முடியாது என்பதை அப்போது நான் உணரவில்லை. புலப் பெயர்வையும் அலை ந்துழலவையும் (Diaspora) நானாக வரி த்துக் கொள்ளவில்லை. 10 ஆண்டுகளாக ஹை.்.பாவை விட்டு வெளியேற நான் அனு மதிக்கப்படவில்லை. மூன்றாண்டுகள் நான் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தேன். எந்த வீடு குறித்தும் எனக்கு இப்போது ஏக் கமில்லை. வீடு என்பது பொருளும் தளபா டங்களும் சார்ந்தது அல்ல. இடமும், வெளி யும், சிக்கலான உணர்வுகளும் சேர்ந்து பிணைந்த ஒரு தளம். இப்போது எனக்கு வீடில்லை. இன்னொரு புறத்தில் எல்லா இடமும் ஒரே மாதிரித்தான் தோற்றமளிக் கிறது. றமல்லா, அம்மான் நகரம் போல் இருக்கிறது. அம்மான் நகரமோ பரிஸைப் போல் இருக்கிறது. ஏக்கத்திலும் இழப்பிலும் வளர்ந்ததாலோ என்னவோ இப்போது என்னால் ஏங்க முடியாது இருக்கிறது. ஒரு

(17ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருகுவோம்...

(16ம் பக்கத் தொடர்ச்சி)

வேளை, என்னுடைய உணர்ச்சிகள் தான் மாறிவிட்டனவோ தெரியவில்லை. அறிவு, உணர்வையும் உணர்ச்சியையும் விஞ்சிவிட்டதோவென்று சந்தேகிக்கின்றேன். நிச்சயமாக முரண்நகை (irony) கூர்மை பெற்றிருக்கின்றது. நான் முன்பு இருந்த தர்வீஷ் அல்ல.

• அதனால்தானா நீங்கள் குடும்ப வாழ்க்கையைத் தவிர்த்தீர்கள்?

நான் இரண்டு தரம் திருமணம் புரிந்திருக்கின்றேன் என்பதை எனது நண்பர்கள் அடிக்கடி நினைவூட்டுவார்கள். என்றாலும், திருமணம் என்பது ஒரு ஆழமான நினைவாக என் மனதில் ஒருபோதுமே இருந்ததில்லை. எனக்குக் குழந்தைகள் இல்லையே என்பது பற்றி எனக்கு எந்த ஆதங்கமும் இல்லை. ஒரு வேளை, இருந்திருந்தால் அவர்கள் ஒழுங்காய் இருந்திருப்பார்களோ தெரியாது. ஏன் இத்தகைய சந்தேகமும் பயமும் எனக்கு இருக்கிறது என்று தெரியவில்லை. என்றாலும் எனக்குக் குழந்தைகள் இல்லையென்பது பற்றி எனக்கு எந்த மனக்குறையும் இல்லை.

• எதைப் பற்றிய மனக்குறை உங்களிடம் இருக்கிறது?

சிறு வயதிலேயே எனது கவிதைகளை வெளியிட்டு விட்டேன் என்ற மனக்குறை. உண்மையில் அவை மோசமான கவிதைகள். சொற்களால் சிலரைக் காயப்படுத்தி விட்டமை தொடர்பாக இப்போது கவலைப் படுகிறேன். கொஞ்சம் முரட்டுத் தனத்துடன் கூர்மையான வார்த்தைகளால் நண்பர்களைப் புண்படுத்திவிட்டேனென்ற மனக்குறை இருக்கிறது. சில நினைவுகளுக்கு நான் நேர்மையாகவும் நன்றியுள்ளவனாகவும் இருந்ததில்லை. எனினும், எத்தகைய குற்றச் செயலிலும் நான் ஈடுபடவில்லை.

• தனிமையை விரும்புகிறீர்களா?

நிறையவே, யாராவது இரவுச் சாப்பாட்டுக்கு என்னை அழைத்தால் தண்டனை பெறுவது போலவே உணர்கிறேன். அண்மைக் காலங்களாக தனிமையையே நான் பெரிதும் விரும்புகிறேன். சுற்றி வர மனிதர்க்ள தேவையென்று உணர்கிறபோது அவர்களைத் தேடிப் போகிறேன். இது சுயநலம்தான் இல்லையா? எனக்கு ஐந்து அல்லது ஆறு நண்பர்கள் உள்ளனர். இதுவே அதிகம் என்று தோன்றுகிறது. எனக்குத் தெரிந்தவர்கள் என்று ஆயிரக்கணக்கானோர் இருக்கிறனர். ஆனால், அவர்கள் எவ்வகையிலும் எனக்குத் துணை செய்வதில்லை.

• ஆரம்ப காலக் கவிதைகளுக்குத் திரும்பிச் செல்வது இப்போது கடினமாக இருக்கிறது என்று கூறுகிறீர்கள். அம்மாவின் கோப்பி என்ற கவிதையையும் இதற்குள் சேர்த்துக் கொள்கிறீர்களா?

1963, 64 காலகட்டத்தில் மாஸியாகு (Maasiyahu) சிறைச்சாலையில் அந்தக் கவிதையை எழுதினேன். ஜெருசலேமில் உள்ள ஹீப்ரு பல்கலைக்கழகத்தில் கவிதை நிகழ்த்த என்னை அழைத்திருந்தார்கள். அப்போது என்னுடைய வாழிடம் ஹை.ஃபா. இஸ்ரேலில் வாழ்ந்த பலஸ்தீனியர்கள் இராணுவச் சட்டத்தின் கீழ் வாழ்ந்த காலமது. ஜெருசலேம் செல்வதற்கான பயண அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பித்திருந்தேன். ஆனால், எனக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. என்றாலும் ரயில் ஏறிப் பயணப்பட்டேன். (அந்த ரயில் இப்போதும் ஓடுகிறதா?) அடுத்த நாள் நாஸரேத் காவல் நிலையத்திற்கு நான் அழைக்கப்பட்டேன். நான்கு மாதங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் இரண்டு மாதங்கள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டு மாஸியாகு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டேன். ஒரு சிகரெட் பெட்டியில் தான் அந்த கவிதையை எழுதினேன் அந்தப் பெட்டியில் ஒட்டகத்தின் படம் இருந்தது. மஞ்சள் நிறப் பெட்டி. அந்தக் கவிதையை லெபனான் இசையமைப்பளர் மார்செல் காலி.ஃப் (Marcal Kahalife) அற்புதமான பாடலாக மாற்றினார். என்னுடைய அழகான கவிதை அது. ஹை.ஃபாவில் அதனை நான் வாசிப்பேன்.

• நீங்கள் பிறந்த ஊரான பிர்வாவுக்குச் (Birwa) செல்வீர்களா?

இல்லை. இப்போது அது இஸ்ரேலியக் கிட்புட்ஸ் (Kibbutz) ஆக மாறிவிட்டது. அதன் பெயர் யாசுர் (Yasur). எனது ஊரின் நினைவுகளையே தக்க வைத்துக் கொள்ள விரும்புகிறேன். திறந்த வெளிகள், வயல்கள், ஒலிவ் மரங்கள் என எல்லாவற்றினதும் நினைவுகளை. எங்கள் வீட்டு மல்பெரி மரத்தில் அம்மா குதிரையைக் கட்டியிருந்தார். ஒரு வழியாக நான் அந்தக் குதிரையில் ஏறிவிடடேன். அடுத்த கணமே குதிரை என்னை வீசி எறிந்து விட்டது. அன்றைக்கு அம்மாவிடம் வாங்கிய அடியை இன்றும் மறக்க முடியவில்லை. அம்மாவிடம் நான் நிறைய அடி வாங்கியிருக்கிறேன். நானொரு காவாலிப் பயல் என்பது அவருடைய எண்ணமாக இருந்தது. ஆனால், காவாலியாகவும், குழப்படிக்காரனாகவும் இருந்ததாக எனக்கு நினைவில்லை. வண்ணத்துப் பூச்சிகளையும் எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது. ஊர் முழுவதும் திறந்த வெளி. ஒரு மலையுச்சில் இருந்தது ஊர். ஒருநாள் காலையில் எழுந்த போது எல்லோருமே ஊரைவிட்டு ஓடிவிட வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஒருவராவது யுத்தத்தைப் பற்றியோ, பசி பஞ்சம் என்புது பற்றியோ, பேசவில்லை. நானும் எனது மூன்று சகோதரர்களும் நடந்தே லெபனானுக்குச் சென்றோம். குழந்தையாக இருந்த எனது தம்பி வழிமுழுக்க அழுது கொண்டே வந்தான்.

• எழுதுவது தொடர்பாக ஏதாவது வழமைகள் உங்களுக்கு உள்ளதா?

நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் என்று எதுவும் இருந்ததில்லை. சில பழக்க வழக்கங்கள் என்னிடம் இருந்தன. காலை பத்துத் தொடக்கம் பன்னிரண்டு வரை எழுதுவது எனக்குப் பழக்கமாகி விட்டது. நான் கையால் தான் எழுதுவேன். கணனியில் அல்ல. வீட்டில் தான் எழுதமுடிகிறது. தனியே இருந்தாலும் கூட அறைக்கதவைப் பூட்டி விடுவேன். தொலைபேசியை அணைத்து விடுவதில்லை. ஒவ்வொரு நாளும் எழுதுவதில்லை என்றாலும், தினந்தோறும் மேசையில் அமர்வதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். எழுதுவதற்கு ஊட்டம் கிடைக்கலாம் கிடைக்காமல் போகலாம். ஊட்டம், தாக்கம், பாதிப்பு (inspiration) என்பதிலெல்லாம் எனக்கு அவ்வளவாக நம்பிக்கையில்லை.

• இறப்புக் குறித்து உங்களுடைய உணர்வுகள் இப்போது எப்படி உள்ளன?

இறப்புக்காக நான் தயாராக இருக்கின்றேன். ஆனால், அதற்காக நான் காத்திருக்கவில்லை. காத்திருப்பையும் அதன வலியையும் துயரத்தையும் பற்றிய என்னுடைய காதல் கவிதை ஒன்றுள்ளது.

எனது காதலி நீண்ட நேரமாக
வரவில்லை./
ஒருவேளை வெளிச்சம் அதிகமாக
உள்ள இடத்துக்குப்
போய்விட்டாளோ என்று
யோசித்தேன்/
கடைக்குப் போயிருக்கக் கூடும்./
அல்லது புறப்பட முன்
கண்ணாடியில் தன்னைப்
பார்த்திருப்பாள்./ தன்னிலேயே
காதல் கொண்டவளாய் அவள்
சொல்கிறாள்./ வேறுயாரும்
என்னைத் தொடுவது நியாயம்
அல்ல.
நான் என்னுடையவள்!./
ஒருவேளை விபத்தில் சிக்கி
விட்டாளோ?/
காலையில் என்னை
அழைத்திருப்பாள்/ நான் வீட்டில்
இருக்கவில்லை./ பூக்களும் மதுவும்
வாங்குவதற்காக வெளியே
போயிருந்தேன்./
ஒருவேளை அவள் இறந்து
போயிருக்கக் கூடும்./ இறப்பும்
என்னைப் போலவே தான்./
காத்திருப்பது அதற்குச்
சாத்தியமில்லை./
என்னாலும் காத்திருக்க முடியாது./
எழுத இன்னும் நிறைய உள்ளது./
எல்லா இடங்களிலும் போர்
தொடர்கிறது./
என்னுடைய கவிதைக்கும்
இறப்புக்கும் எந்த உறவும் இல்லை./
எனினும் வா/
சந்திப்போம்/ ஆனால், எனக்கு
முன்பாகவே சொல்லிவிடு/
நான் தயாராக வேண்டும்
/நல்லாடைகள் அணிய வேண்டும்./
கடற்கரையோரமாய் ஒரு
மதுச்சாலையில் சந்திப்போம்./
பருகுவோம் ஒரு கிண்ணம் மது/
பிறகு என்னைக் கொண்டு செல்....

• சமாதானத்தை ஏற்றுக் கொள்ள இரு தரப்பினரும் தயாராக இருக்கிறார்களா?

பலஸ்தீன மக்கள் தங்களை நேசிப்பதில்லை என்று இஸ்ரேலியர்கள் குறைப்படுகிறார்கள். இது நகைப்புக்கிடமானது. சமாதானம் என்பது இரு அரசுகளுக்கிடையே ஏற்பட வேண்டியது. அது, அன்பிலும் காதலிலும் தங்கியிருக்கவில்லை. சமாதான ஒப்பந்தம் என்பது திருமணக் கொண்டாட்டம் அல்ல. இஸ்ரேலியர்கள் மீதான பலஸ்தீனியர்களின் வெறுப்பை என்னால் புரிந்து கொளள் முடிகிறது. ஆக்கிரமிப்புக்குள் வாழ்வதை எவருமே வெறுப்பார்கள். முதலில் சமாதானம் ஏற்பட வேண்டும். அதன் பிற்பாடு நமக்கிடையே எத்தகைய உறவுகள், காதலா, அன்பா, நேசமா - இருக்க முடியும் என்பதைப் பற்றி யோசிக்கலாம். அன்பும் காதலும் நேசமும் அந்தரங்கமான தனிப்பட்ட விடயங்கள், எவர் மீதும் அதனை நாம் திணிக்க முடியாது.

• சாவின் பிடியிலிருந்து தப்பி வந்திருக்கிறீர்கள். முதுமையும் ஆசைகளுக்கு இணங்கா உடலும் உங்களுக்கு அச்சத்தை தருவதில்லையா?

இரண்டு முறை சாவிலிருந்து தப்பியிருக்கிறேன். 1998இல் நான் உயிரியல் ரீதியாகச் செத்துப் போயிருந்தேன். சாவீட்டிற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டார்கள். 1984இல் வியன்னாவில் இருக்கும் போது மாரடைப்பு ஏற்பட்டது. நல்ல தெளிவான ஒளியில் வெண்முகில்கள் மீது ஒரு நல்ல தூக்கம் போலவே அப்போது உணர்ந்தேன். இறப்பு என்ற நினைவே இல்லை. மிதந்து மிதந்து பறந்தேன். திடீரென வலியை உணர ஆரம்பித்தேன். அப்போது தான் உயிரோடு இருக்கிறேன் என்ற உணர்வு திரும்பி வந்திருக்க வேண்டும். இரண்டு நிமிடங்கள் நான் உயிரற்று இருந்ததாகப் பிறகு சொன்னார்கள். 1998இல் ஏற்பட்ட அனுபவம் தீவிரமானதும் வன்மம் கூடியதாகவும் இருந்தது அது. மகிழ்ச்சியான தூக்கமே அன்று.

நன்றி:: சரிநிகர்

ஒரு படைத் தலைவனுக்கும் கவிஞனுக்கும் உள்ள வேறுபாடு என்ன என்று தெரியுமா? படைத்தலைவன் போர்க்களத்தில் கொல்லப்பட்ட எதிரிகளின் உடல்களை எண்ணிக் கொண்டிருக்கிறான். ஆனால் கவிஞனோ எத்தனை மனிதர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை எண்ணிக் கொண்டிருக்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The year my parents went on vacation

ரதன்
rathan@vaikarai.com

1970 ம் ஆண்டு பிரேசிலைப் பொறுத்த வரை மிகவும் பிரசித்தமான ஆண்டு. பிரேசில் மூன்றாவது தடவையாக உலக உதைப்பந்தாட்ட கோப்பையைக் கைப்பற்றியது அந்த ஆண்டிலேயே. இத்தாலியை 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொ-ண்டது.

இதற்கு மறுபுறம் பிரேசிலின் மூன்றாவது இராணுவ அரசு ஆட்சி நடைபெற்றுக் கொண் டிருந்த காலம். முனனைய இராணுவ ஜனாதிபதி கொஸ்ரா இ சில்வா சுகவீனமுற்ற காரணத்தினால், அவரது இடத்துக்கு Emílio Garrastazu Médici ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். இவரது கால கட்டத்தில் Carlos Marighela, Carlos Lamarca. ஆகியோர் தலைமையினாலான கொரில்லா போராட்ட இயக்கம் அழிக்கப்பட்டது. அத்துடன் இவர்கள் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் இருவரும் தலைமை தாங்கிய கொரில்லா அணி நகரங்களை மையமாகக் கொண்டது. இடது சாரி கொ-ள்கைகளை உள் வாங்கிக் கொண்டாலும் இவர்கள சேகுவரா போன்றவர்களின் கிராம எழுச்சிக்குப் மாறாக நகர எழுச்சியைக் கொண்டிருந்தார்கள். இவ்வாறன பல கொ-ரில்லா இயக்கங்கள் உலகின் பல நாடுகளில் இயங்கின உ-ம்

(. FLQ in Québec, Canada, the Red Army Faction (RAF) in West Germany, the Red Brigades (BR) in Italy, the Provisional Irish Republican Army (IRA) in Northern Ireland, ETA in the Basque region of Spain, the Tup-amaros in Uruguay, the Movimento Revolucionario 8 de Outubro (MR-8) in Brazil, the

Movimiento de Izquierda Revolucionaria (MIR) in Chile and the Ejército Revolucionario del Pueblo (ERP) in Argentina)

இவைகள் இடதுசாரி, மார்க்கசிய கொ-ள்கைகளை கொண்டிருந்தன. இவர்கள் அ-ரச இயந்திரத்தை இயங்கச் செய்யாமல், அவர்களது நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக பொருளாதார, வர்த்தகஈ பாது காப்பு அழிப்பு நடவக்கைகளில் ஈடுபடுவார்கள். உ.ம்: கியுபெக் குடுஞன் நடவக்கைகள் சில Montreal Stock Exchange 1969 ல் குண்டு வைத்து தகர்க்க முயற்சி செய்தமை. ஜவர் இறப்பு. British Trade Commissioner James Cross 1970ல் கடத்தப்பட்டார். Quebec Labour Minister Pierre Laporteல் சுட்டுக் கொல்லப்பட்டார். இது போன்ற நடவக்கைகளுடன் வங்கிக் கொ-லைகள் போன்றனவற்றிலும் சில அமைப்புக்கள் ஈடுபட்டன. இலங்கை தமிழ் இயக்

(23ம் பக்கம் பார்க்கவும்)

Network Classifieds:

Advertise Across Ontario or Across the Country!

For more information contact
Your local newspaper

EDUCATIONAL OPPS.

BECOME A WEDDING COORDINATOR with IWPP TM online course. Includes full colour lesson booklets, DVDs, practical assignments, personal tutoring, and business training. FREE BROCHURE. 1-800-267-1829. www.qcweddingplanning.com.

EMPLOYMENT OPPS.

ARE YOU LAID OFF? Government Funding Available to obtain your AZ or Heavy Equipment Certification. Call Ontario Truck Driving School Today Toll-Free 1-800-799-JOBS (5627), www.otds.com.

CONNECT NOW and get 1st month free! Telephone reconnect with long distance and internet. Great rates and service. Call 1-877-336-2274; Phone Factory; www.phonefactory.ca sign up and save!

CONVENTIONAL MACHINE SHOP FOREMAN. Precision custom machining company requires company-oriented, highly motivated, well organized conventional machine shop foreman, team leader, team player, experience to lead and direct all conventional machine tool manufacturing and service operations. We offer: Clean safe working environment; Day Shift; Competitive wages; Benefit package, pension plan, other benefits. Qualified candidate should submit targeted resume to: R.P. Hawboldt Machining Limited, P.O. Box 248, Trenton N.S. B0K 1X0, Fax: 902-928-1519, E-mail: rphawboldt@eastlink.ca.

NORTHERN CANADA RETAIL OPPORTUNITIES - The North West Company, over 140 stores, leading provider of food, everyday products in Northern Canada. Almost cost free living, fully furnished subsidized housing, food, relocation assistance, and paid vacation travel, are Seeking individuals/couples for: Store Managers, Meat, Grocery, Produce, Fast Food Service, Entry Level and Regular Full-Time. Applicants must be able to relocate to Northern Canada. Send resume to: retailinthenorth@northwest.ca or Fax: 204-934-1696. TNWC equal opportunity employer. Additional information: www.northwest.ca or call 1-800-782-0391 press 1, and ext 8862.

The North West Company FULL-TIME RETAIL MEAT CUTTERS/MEAT TRAINEES. Leading provider of food, everyday products and financial services for Northern Canada seeking full-time retail meat-cutters. Should have experience with basic meat cutting/wrapping. Will consider applicants expressing interest in the meat business. Benefits: almost cost-free living, subsidized housing (fully furnished), subsidized food, relocation-assistance, paid vacation travel. Must relocate to remote northern Canada. Resume: retailinthenorth@northwest.ca or Fax: 204-934-1696. TNWC equal opportunity employer. Information: www.northwest.ca or 1-800-782-0391 press 1, and ext 8862.

FINANCIAL SERVICES

$$$ 1st & 2nd & Construction Mortgages, Lines of Credit... 95-100% Financing. BELOW BANK RATES! Poor credit & bankruptcies OK. No income verification plans. Call Jim Potter, Homeguard Funding Ltd. Toll-Free 1-866-403-6639, email: jim.potter@hughes.net, www.qualitymortgagequotes.ca.

500 LOAN SERVICE, by phone, no credit refused, quick and easy, payable over 6 or 12 installments. Toll-Free: 1-877-776-1660.

$$$MONEY$$$ ANY PURPOSE!!! 1st, 2nd, 3rd mortgage loans and credit lines, bad credit, debt consolidation, mortgage or tax arrears - NO PROBLEM! CALL TOLL-FREE 1-888-307-7799, Ontario-Wide Financial Corp.

FOR SALE

#1 HIGH SPEED INTERNET $18.95 / Month. Absolutely no ports are blocked. Unlimited Downloading. Up to 5Mps Download and 800Kbps Upload. ORDER TODAY AT www.acanac.ca or CALL TOLL-FREE: 1-866-281-3538.

A FREE TELEPHONE SERVICE - Get Your First Month Free. Bad Credit, Don't Sweat It. No Deposits. No Credit Checks. Call Freedom Phone Lines Today Toll-Free 1-866-884-7464.

ADD AND SAVE on home phone reconnection. Bad credit - no problem! Up to $30. off for new customers, plus lower monthly rates! Call Tembo 1-877-266-6398 or sign up online www.tembo.ca.

SAWMILLS from only $3,495.00 - Convert your LOGS TO VALUABLE LUMBER with your own Norwood portable band sawmill. Log skidders also available. www.norwoodsawmills.ca/400t - FREE Information: 1-800-566-6899 Ext:400OT

HELP WANTED

JOIN CANADA'S MOST UNIQUE HOME PARTY COMPANY and earn great money, part-time or full-time. No money collection or deliveries. No experience needed. Visit our website at realstylemadeeasy.com or call 1-866-378-4331.

$$$ PAID WEEKLY! Company needs part-time/full-time help to process unclaimed bank accounts. Call 1-800-731-0126.

INSURANCE

CLEAN DRIVING RECORD? Grey Power could save you up to $400 on your car insurance. Call 1-866-239-2615 for no-obligation quote. Open weekends.

ONLINE AUTO - HOME INSURANCE QUOTE. Visit www.myinsurancequote.ca for your instant insurance quote. Auto, Home, Life, Travel, Business & more. Professional insurance broker service with online convenience. 1-800-419-3723.

MORTGAGES

MORTGAGES - FREE INFORMATION - INSTANT PRE-APPROVALS BY PHONE FOR ALL PROPERTY TYPES. Bank turndowns OK, Bankruptcies OK, No/Low Income OK. 1st, 2nd, 3rd Mortgages, Construction/Renovations, Debt Consolidations, Purchases, Refinancing. Easy Low Monthly Payments. Good/Bad Credit. If you have sufficient "Equity" ... YOU'RE APPROVED!! Servicing Ontario for over 20 years. CALL Toll-Free: 1-866-996-8226 - Seven Days a Week "Anytime". New Haven Mortgage Corporation.

0$ ARE YOU SINKING IN DEBT? 1st, 2nd & 3rd Mortgages - Bruised Credit - Bank Turndowns - Debt Consolidation - Refinancing - Power of Sale - Past Bankrupt - Home Renovations. We can lend a Hand. www.canadalend.com Toll-free 1 (866) i CAN LEND (1-866-422-6536) CALL NOW!

1st, 2nd & 3rd MORTGAGES - BELOW BANK RATES. PURCHASE 0% DOWN. Refinance to 100%. We Specialize in: Bad Credit, Self-Employment, Power of Sale Stopped!! CALL NOW TOLL-FREE: 1-877-568-9255 OR 416-578-0897, www.butlermortgage.ca.

$$$ 1st, 2nd, 3rd MORTGAGES - Tax Arrears, Renovations, Debt Consolidation, no CMHC fees. $50K pay $283.17/month. No income, bad credit, power of sale stopped!! MORTGAGE CENTRE, 416-633-7447, Toll-Free 1-800-282-1169, www.mtgcentre.com.

A BELOW BANK RATE, 1st and 2nd Mortgages, 95% to 100% Financing, Debt Consolidation, Self-employed Specialists, All Credit Types considered, X-Bankrupts. CALL TODAY 1-800-225-1777, www.homeguardfunding.com, EST. 1983.

AS SEEN ON TV - 1st, 2nd, 3rd mortgages. We don't just say "APPROVED" we mean it! Receive a free $250 GAS CARD when we close your mortgage. Call Toll-Free 1-877-REFI-424 (1-877-733-4424) or www.refitoday.ca

FREE CONSULTATION — Best Options! "100% Financing Still Available!" — Let 30 years of experience work for you — www.joewalsh.ca — Mortgage Professionals Inc. 1-866-838-9924.

A-Z DRIVERS WANTED

AZ DRIVERS REQUIRED for U.S. Shorthaul. Require minimum 2 years exp. + clean abstracts = $0.39 per mile, dedicated equipment, benefits, Quality Home time, guaranteed work. Call Steve 1-800-265-8789 or 905-457-8789 ext.228.

REAL ESTATE

USA - TEXAS LAND SALE! 20-acre ranches, near booming El Paso. Good road access. Surveyed. Only $15,900. $200./down, $159/mth. Money back guarantee. No credit checks. 1-800-843-7537. www.sunsetranches.com.

AUTOMOTIVE

MOTOR VEHICLE dealers in Ontario MUST be registered with OMVIC. To verify dealer registration or seek help with a complaint, visit www.omvic.on.ca or 1-800-943-6002. If you're buying a vehicle privately, don't become a curbsider's victim. Curbsiders are impostors who pose as private individuals, but are actually in the business of selling stolen or damaged vehicles.

BUSINESS OPPS.

EXCITING FRANCHISE OPPORTUNITY! FORMAFENCE - Vinyl Fencing, Decking, Railings. Operate and own your own business. A proven & successful concept. Exclusive materials and information. Visit www.formafence.com, Toll-Free 1-800-379-2125.

MEGA WRAPS NOW FRANCHISING. 30 fast food restaurants in Ontario and growing. Turn key locations and bank financing available. Don't miss this opportunity! Call 1-800-387-1984. www.megawraps.com

CAREER TRAINING

CALL TODAY, GET STARTED! Train at Everest College of Business, Technology and Health Care. What are you waiting for? CALL NOW! 1-866-777-7844 or online www.EverestCanada.ca.

MARITIME DRILLING SCHOOLS entry-level training for land and offshore oilrigs. Excellent wages, benefits and opportunities to travel the world. September 15-October 04/08, October 13-November 01/08. Contact: 1-866-807-3960, www.mdslimited.ca.

PERSONALS

ARE YOU LOSING a loved one to substance abuse? Our program has the highest success rate. Help is only one phone call away! 1-877-782-7409; www.narconon.ca.

CRIMINAL RECORD? Seal it with a PARDON! Need to enter the U.S.? Get a 5 year WAIVER! Call for a free brochure. Toll-free 1-888-9-PARDON or 905-459-9669.

DATING SERVICE. Long-Term/Short-Term Relationships, FREE CALLS! 1-866-512-8367. Exchange voice messages, voice mailboxes 1-866-573-0914. Live adult casual conversations - 1on1 1-866-522-7131, Meet on chat-lines. Local Single Ladies 1-866-512-9083. 18+

TIRED OF WASTING YOUR TIME with people who are afraid to commit, aren't who they say they are, haven't dealt with their "baggage"? Misty River Introductions has quality single people interested in meeting partners for life. CALL (416) 777-6302, (705) 734-1292, www.mistyriverintros.com.

SERVICES

A CRIMINAL RECORD? We'll clear it! Don't be misled by others, we'll get you what you really need. Lowest price, guaranteed Pardons/Waivers Toll-Free 1-800-507-8043, www.pardongranted.ca

SALES HELP WANTED

OPPORTUNITY - Work From Home. Windshield wiper. Manufacturer looking for sales people to work from home. Unique product, unique opportunity. Email: sales@heatflexx.com. Ph# 705-949-0067 or 989-414-2714. www.heatflexx.com.

SEEKING SALES-AGENT to manage community relations programs in Central Ontario. Requires self-starter with willingness to travel, sales experience an asset. Contact: 1-866-258-7730 or programs@csscanada.com

SKILLED HELP WANTED

GUARANTEED ALBERTA OILFIELD JOBS: HIGH PAYING! DRILLING, SERVICE RIG JOBS: Must have a valid G, G2 AZ or DZ Drivers License. Ideal candidates for these physically challenging positions would be between the ages of 18 to 35. Please forward resumes to oilfieldjobs@bellnet.ca. Apply online at www.oilfieldjobconnections.com.

STEEL BUILDINGS

ALL STEEL BUILDINGS erected on your site. Canadian made since 1980. All standard sizes on sale. Floating foundation, doors, insulation, complete packages. CALL NOW! Pioneer 1-800-504-7749. www.pioneerbuildings.com.

FUTURE STEEL BUILDINGS Durable, Dependable, Pre-engineered, All-Steel Structures. Custom-made to suit your needs and requirements. Factory-Direct affordable prices. Call 1-800-668-8653 ext. 170 for free brochure.

VACATION/TRAVEL

ALL INCLUSIVE PACKAGES - Book Online at www.canadatravels.com and save more on your vacations. Use code NCA74327 for discount or call us toll-free at 1-800-563-5722.

BeautifulBeach.com. VACATION RENTALS along the Beaches of South Walton in NW Florida. Luxurious beachfront homes, seaside condos & cottages. Dune Allen Realty, 1-888-267-2121 or www.BeautifulBeach.com

DESTIN. Edgewater Beach Condos, beachfront 1-3BRs w/private balconies. Snowbird Seasonal Rates December-March! Heated pool, activities include golf/lunch groups, bingo, see web for other activities. www.edgewaterbeach.com. 1-800-822-4929.

ST. AUGUSTINE. Heart of the Beach - America's Oldest City. 2BR/2BA condos, heated pool, Jacuzzis, tennis, free activities. Monthly rates available. Call for details. 1-800-448-0066. www.oceanandracquet.com.

TIMESHARE FORECLOSURES — Save 60-80% off Retail! Best Resorts & Seasons! Call for FREE catalogue today! 1-800-496-5964. Browse hundreds of worldwide properties online — www.holidaygroup.com/ocn.

• It's Affordable • It's Fast • It's Easy • It's Effective • One Bill Does It All • *All Ontario $429* • National Packages Available! www.networkclassified.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாசான் எஸ்.எம். கமால்தீன் வாழ்வும் பணியும்

கடந்த 15.08.2008 அன்று வெள்ளிக்கிழமை இரவு தமிழ் அறிஞர் எஸ். எம். கமால்தீன் அவர்கள் தாயகத்தில் மறைந்த செய்தி எம்மை வந்தடைந்திருக்கிறது. ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிலும், நூலக உலகிலும் கல்வித் துறையிலும் அதிகம் பேசப்பட்டவர் சிலாபம் புனித மரியாள் கல்லூரியில் தன் ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய எஸ். எம். கமால்தீன் கொழும்பு சாஹிரா கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றில் தன் மேற்கல்வியைத் தொடர்ந்து, இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப்பட்டமும், நூலகவியலில் டிப்ளோமா பட்டமும் பெற்றவர். பின்னர் கனடா ரொரன்டோ பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் கலைமானிப்பட்டமும் பெற்றுக்கொண்டவர்.

என்.செல்வராஜா (லண்டன்)

தான் மாணவராயிருந்த காலத்தில் பண்டிதர் மு.நல்லதம்பி, சுவாமி விபுலாநந்தர், கலாநிதி க. கணபதிப்பிள்ளை, கலாநிதி சு.வித்தியானந்தன் போன்ற தமிழ் அறிஞர்களிடம் கல்வி கற்றமையை தன் வாழ்நாளில் பெருமையுடன் நினைவுகூர்ந்துவந்த தமிழறிஞர் எஸ்.எம்.கமால்தீன் அவர்கள் தான் கற்ற தமிழ் அறிவை கல்வித்துறையில் மிக்க விருப்புடன் பிரயோகித்து வந்து சிறந்த பல மாணாக்கர்களை சாஹிராக்கல்லூரியில் உருவாக்கியிருந்தார். 1948ம் ஆண்டு முதல் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் ஆசிரியப் பணியோடு எழுத்துத் துறையிலும் தன்னை இனம்காட்டிவந்தார். 1981முதல் 1985 வரையிலுமான காலகட்டத்தில் நைஜீரியா நாட்டில் கல்வி அதிகாரியாகவும் இவர் சிறிதுகாலம் பணியாற்றியிருக்கிறார்.

தமிழின்பால் கொண்ட அதீத பற்றுதலால் அறிஞர் கமால்தீன் அவர்கள் இலங்கையில் தமிழில் நூலகத்துறை செழித்து வளரும் வகையில் கடினமாக உழைத்து வந்துள்ளார். முழுநேர ஆசிரியத் தொழிலிருந்து நீங்கி, 1952ம் ஆண்டு கொழும்பு பொது நூலகத்தில் உதவி நூலகராகச் சேர்ந்து, 1954ம் ஆண்டில் பதில் பிரதம நூலகராகப் பதவியுயர்வு பெற்றார். 1961 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை நூலகவியல் சங்கத்தின் ஆரம்பகால நிர்வாக உறுப்பினராகச் சேர்ந்து நீண்டகாலம் அதன் பல்வேறு பதவிகளில் இயங்கிச் செயற்பட்டதுடன் 1972முதல் 1981வரை இலங்கை நூலகச் சங்கத்தின் உதவிப் பணிப்பாளர் பொறுப்பையும் சிறிதுகாலம் ஏற்றுச் செயற்பட்டவர். இவர் 1975இல் தமிழ்மொழிமூலமாக நூலகவியல்கல்வியை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள வழிசெய்தார். தமிழ் நூலகர்கள் உருவாகவேண்டும் என்பதில் அதீத அக்கறையுடன் செயற்பட்டு தானே விரிவுரையாளராகவும் இருந்து செயற்பட்டார். இன்றுவரை பல சிறந்த நூலகவியலாளர்களை இவர் தமிழில் உருவாக்கியும் தந்துள்ளார். அவரது உருவாக்கத்தில் மலர்ந்த நூலகவியலாளர்களுள் நானும் ஒருவன் என்பதை பெருமையுடன் இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இலங்கைத் தேசிய நூலகம் உருவாகுவதற்கு முன்னோடியாக அமைந்திருந்த இலங்கைத்தேசிய நூலகசேவைகள் சபையில் 1972இல் உதவிப்பணிப்பாளராகவும் இவர் இருந்திருக்கிறார். அதன் நிர்வாகசபையிலும் தொடர்ந்து நீண்டகாலம் பணியாற்றியுள்ள தமிழறிஞர் எஸ்.எம்.கமால்தீன் பற்றிய மற்றுமொரு முக்கிய விடயம், ஈழத்துத் தமிழரின் மனங்களில் இருந்து எளிதில் மறைந்துவிடாது.

1981ஜுன் மாதம் முதல்தேதியில் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டபோது, அந்த அவலச்செய்தியை வெளியுலகிற்கு எடுத்துச்

சொல்ல அன்று யாழ்மண்ணில் இருந்து இயங்கிய ஒரே பத்திரிகையான ஈழநாடு பத்திரிகையால் முடியாது போய்விட்டது. யாழ் நூலகத்தை எரித்த அரசபடைகள், ஈழநாடு காரியாலயத்தையும் திட்டமிட்டு எரித்துவிட்டதே அதன் காரணம். இந்நிலையில் யாழ் நூலகம் எரிந்த செய்தியை தனிப்பட்ட நண்பர்கள் வாயிலாகக் கேள்விப்பட்டு, எரிந்த தணல் அணையும் முன்னரே தென்னிலங்கையிலிருந்து ஓடோடிவந்து யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரைச் சந்தித்து, அவரின் உதவியுடன் யாழ்ப்பாண நூலகத்தின் அழிவை மதிப்பீடுசெய்யத் தாமாக முன்வந்திருந்தார்.

யாழ்ப்பாண நூலகம் எரிந்தபோது, அதனுடன்சேர்ந்து அங்கு பாதுகாக்கப்பட்டிருந்த பட்டியல்பேழைகள், மற்றும் முக்கியமான பதிவு ஆவணமான நூல்விபரப்பதிவேடு (Accession Register) என்பனவும் எரிந்து சாம்பலாகிவிட்டிருந்தன. இந்நிலையில் என்ன இருந்தது என்ன அழிந்தது என்று எதுவுமே தெரியாத இருண்ட வெளியில் யாழ்ப்பாண நூலகரும் அவரது உதவியாளர்களும் நிலைகுலைந்து நின்றிருந்த வேளையில், அவர்களுக்கு ஆதரவளித்து. யாழ்ப்பாண நூலகத்துடன் நேரடிச் சம்பந்தம் கொண்டிருந்த அறிஞர்கள் பலரை அணுகி உரையாடி, நூலகத்தின் அழியுண்ட நூல்களின் மற்றும் சொத்துக்களின் விபரங்களை உத்தேசமாகவேனும் மீளக் கணக்கிட்டு சுதந்திரமான அறிக்கையொன்றினை இலங்கைத்தேசிய நூலகத்துக்கும், இலங்கை அரசுக்கும் உடனடியாக அனுப்பி வைத்திருந்தார். இந்த ஆவணம் பின்னாளில் வீரகேசரி உள்ளிட்ட தேசியப் பத்திரிகையிலும் வெளிவந்திருந்தது. இதன்மூலம், அரசாங்கம் மூடிமறைக்க முயற்சிசெய்திருந்த ஒரு வரலாற்று அழிப்பை எரிந்த சூடு தணிவதற்குள் துணிச்சலுடன் அறிவார்ந்த முறையில் வெளிக்கொண்டுவந்திருந்தார்.

அறிஞர் கமால்தீனின் இந்தக் காலத்தே உணர்ந்து செய்த நடவடிக்கையால் உருவான அறிக்கைதான் இன்று இந்த நூலகத்தின் இருப்புகளின் அழிவு பற்றியதான முதலாவது அறிவுசார் ஆவணமாக உள்ளது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். தென்னிலங்கை புத்திஜீவிகளின் கண்ணைத் திறக்கவும் இது உதவியிருந்ததெனலாம்.

ஜனாப் எஸ்.எம். கமால்தீன் அவர்கள் ஏராளமான கட்டுரைகளை இலக்கியத்துறையிலும், நூலகவியல்துறையிலும் எழுதிப் பத்திரிகைகள் வாயிலாகப் பிரசுரித்திருக்கின்றார். பாடசாலை நூலகர் கைநூல் என்ற அவரது நூல் தமிழ் பாடசாலைகளில் நூலகங்களை இயக்குபவர்களின் அத்தியாவசிய கைநூலாக இன்றும் இருந்து வருகின்றது. சர்வதேச நூலகச் சங்கத்தின் IFLA வெளியீடான பொதுநூலக நியமங்களை தமிழாக்கம் செய்தும் இவர் வெளியிட்டுள்ளார்.

தாய்லாந்தின் தலைநகரிலே என்ற பிரயாணக்கட்டுரை நூல், பார்பரின் என்ற பெயரில் இலங்கை முஸ்லிம்களின் மரபுகள் பற்றிய ஆய்வுக்கட்டுரைத் தொகுதி, அறிஞர் சித்தி லெப்பை, கலாநிதி ரி.பி.ஜாயா, கலாநிதி ஏ.எம்.ஏ.அஸீஸ் ஆகிய பெரியார்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், கடல் கட்டி ஆகியன அவரது ஆக்கங்களில் சிலவாகும்.

1975-77 காலகட்டத்தில் கல்பனா என்ற இருவார சஞ்சிகையின் ஆசிரியராகவும், 1978-79 காலகட்டத்தில் Young Muslim என்ற ஆங்கில மாசிகையின் ஆசிரியராகவும் இவர் கடமையாற்றி யிருக்கின்றார்.

1987இல் யாழ்ப்பாணத்தில் நான் பதிப்பாசிரியராக இருந்து வெளியிட்ட நூலகவியல் காலாண்டு சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்ததுடன், அதன் வாயிலாக நாம் தமிழ்ப்பிரதேசங்கள் தோறும் முன்னெடுத்த பொதுநூலகவியல் கருத்தரங்குகள், பயிற்சிமுகாம்கள் போன்றனவற்றிலும் தனது சொந்தச் செலவிலேயே எமது அழைப்பையேற்று வந்து கலந்து கொண்டு எங்களை நம்பிக்கையுடன் எமது முயற்சிகளை மேலும் முன்னெடுக்கச் செய்தவர்.

இலங்கையின் இஸ்லாமிய தமிழ் இலக்கிய உலகில் அமரர் முகம்மது காசிம் சித்திலெவ்வை அவர்களுக்குத் தனியிடமுள்ளது. அவரது படைப்புக்களுள் அஸ்ராருல் ஆலம் என்ற நூல் பிரசித்தமானது. அந்தக் காலத்தில் இந்த நூல் பெரும் வாதப்பிரதிவாதங்களுக்கு இலக்காகியிருந்தது. அவர் 1885இல் எழுதிய மற்றொரு நூலான அஸன்பே சரித்திரம் இலங்கையில் தோன்றிய முதலாவது நாவல் என்பதைத் தக்க ஆதாரங்களுடன் நிறுவியவர் ஜனாப் கமால்தீனாவார். அத்துடன் வழக்கிழந்திருந்த அந்த நாவலை முஸ்லிம் சமய கலாச்சார அமைச்சினால் மறுபதிப்புச் செய்ய வலிகோலியவரும் இவரேயாவார்.

அசன்பேயுடைய கதை, கொழும்பு முஸ்லிம் நேசன் அச்சகத்தில் முதற்பதிப்பு 1885இல் அச்சிடப்பட்டது. இரண்டாவது பதிப்பு திருச்சிராப்பள்ளி இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகத்தால் 1974இல் 129 பக்கங்களுடன் வெளியிடப்பட்டது.

எகிப்து தேச இராஜவம்சத்தவனான அசன் என்னும் இளைஞனின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் மர்மமும் திருப்பமும் நிறைந்த ஒரு அற்புதக் கதை தான் அசன் பேயின் கதையாகும். பெற்றொரிடமிருந்து கடத்தப்படும் அசன், இந்தியாவில் வளர்ந்து பலரின் கொடுமைகளிலிருந்தும் தப்பி பாசினா என்ற ஆங்கிலப் பெண்ணின் காதலனாவதுடன் தன்நாட்டுக்கு மீண்டு தன் பெற்றோருடன் சேர்கிறான். வீரசாகசமும் நல்லொழுக்க போதனையும் மிக்க இந்நாவல், தராதர ஈழத்துத் தமிழ்வழக்கில் எழுதப்பட்டது.

ஜனாப் கமால்தீன் அவர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கு மீளக்கண்டெடுத்து வழங்கிய இலக்கியங்கள் பல உள்ளன. வழக்கற்றுப் போய்விடும் ஆபத்தை எதிர் நோக்கிய அரிய இலக்கியங்களைத் தேடிப் பிடித்து மீளக்கண்டறியும் போக்கு அவருள் பிரிக்க முடியாதபடி ஊறியுள்ளதென்றே கருதுகின்றேன். அவர் வெளியிட்ட கடல்கட்டி என்ற நாவலும் அவ்வாறமைந்ததொன்றே. கவனிப்பாரற்றுக்கிடந்த முத்துக்குளிக்கும் தொழில்பற்றியும் அது சார்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள் பண்பாடுகள் பற்றியுமான அவரது தேடுதலாக இந்த கடல்கட்டி நாவல் மலர்ந்திருக்கின்றது.

இஸ்லாமிய இலக்கியஉலகம் அறிந்த மூதறிஞர் கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிறந்த முஸ்லிம் தமிழ்க்கவிஞராவார். மட்டக்களப்புக்கண்மையில் காத்தான்குடியில் 1913இல் பிறந்த இவர் இயற்றிய காவியமான செய்நம்பு நாச்சியார் காவியம், அக்காலத்தில் விதந்து போற்றப்பட்டது. இந்நூலையும் கல்ஹின்னை தமிழ்மன்றத்தின் வாயிலாக இவர் நூலுருவில் கொண்டுவந்திருக்கின்றார். இந்நூலில் செய்நம்பு நாச்சியார் காவியத்தை மீள்பிரசுரம் செய்ததுடன் மட்டும் நின்றுவிடாது அக்காவியத்தின் ஆசிரியரான கவிஞர்திலகம் அப்துல் காதர் லெப்பை அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் தேடித்தொகுத்து இணைத்துத் தந்திருக்கின்றார். கவிஞர் திலகம் என்ற பெயரில் ஜனாப் எஸ்.எம். கமால்தீன் அவர்களின் ஆக்கமாக, கண்டி கல்ஹின்னை தமிழ்ச்சங்கத்தின் வாயிலாக 2001இல் இந்நூல் பிரசுரமாகியுள்ளது.

அமரர் எஸ்.எம். கமால்தீன் கல்வித்துறையிலும், பதிப்புத்துறையிலும், இலக்கியத்துறையிலும், நூலகவியல் துறையிலும் என்று பன்முகப்பட்ட துறைகளில் ஆற்றிய பங்களிப்பு ஈழத்தமிழ் உலகில் என்றென்றும் பேசப்படும். அவர் தன் வாழ்நாளில் தன்னலமற்று உருவாக்கிவிட்டுள்ள அவரது நன்மாணாக்கர்கள் அவரது நாமத்தை என்றென்றும் தமது செயல்களின்வாயிலாக நிலைநிறுத்தி வைப்பார்கள். அவரது நல்லாத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்காபுரம்

படலம் 41

தேவகாந்தன்
bdevakanthan@vaikarai.com

காலத்தின் நகர்ச்சி அவரவர்க்கும் ஏற்ற புரிதலின்படி விரைவாகவோ மெதுவாகவோ நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது எப்போதும். அதுதான் வாழ்தல் என்பதின் உயிர்த் தலம். காலம் இல்லையேல் வாழ்தல் இல்லை. நாட்கள், வாரங்கள், திங்கள்கள், ஆண்டுகள் என அது தன்னைப் புதுப்பித்துக்கொண்டிருக்கிறது, மாந்தர்கள் உணர்ந்துமோ உணராதவாறுமோ. இதைத்தான் பின்னாளில் வந்த வள்ளுவ மாமுனி நாள் என்று தன்னைக் காட்டிக்கொண்டு வருவது உண்மையில் உயிரை வகிர்ந்தெடுக்கும் வாள்போன்றது என்று நயம்பட உரைத்திருக்கிறான்.

காலக் கரைவில் உயிர் வகிர்ந்தெடுக்கப்பட்டு பாதி தேய்ந்த உடலோடு அடையாளம் அழிந்துபோனாள் வியாழி. நரையும் திரையும் அவளை மொய்த்துவிட்டிருந்தன. கட்டிறுக்க மார்புகள் வற்றி வயிற்றில் வழிந்திருந்தன. ஆனாலும் இன்னும் சிலராலேனும் அவளை வியாழியென அடையாளங் காண முடிந்திருந்தது.

ஆண்டுகள் பலவற்றின் முன் ராம ராவண யுத்த முடிவைக் கேட்டு நெட்டை மரம் அடியிழந்ததுபோல் நிலமதிர வீழ்ந்த நாகன் பின்னர் எழுந்திருக்கவேயில்லை. அதைக் கண்முன்னால் அதிர்ந்துணர்ந்த வியாழி, அக்கணமே உயிரை உருவி எறிந்துவிடலாம் போல்தான் தவித்தாள். பின்னால் அவளது வாழ்வின் போக்குகள் வேறுவிதமாக எண்ணவைத்து, வேறுவிதமாகத்தான் நடக்கவைத்தன.

அவள் இப்போது தனிமரம். களிவெறி மிகுப்பில் தன் நாவைத் தானே கடித்து உண்டுவிட்டு ஊமையாய்ப்போன மகன் இல்லை. போருக்கென்று போனவன் பின்னர் எக்காலமும் திரும்பவில்லை. சின்ன வயதினனாய் மலையின அறிந்த மக்களோடு விட்டுவைத்த சின்ன மகனும் இல்லாதுபோனான். ஆசை வலயத்துள் அரவணைத்து வைத்திருந்த நாகனும் மாண்டுபோனான். தனிமரமாய் நின்று உயிர்த் தரிப்பைத் தொடங்கியிருந்தாள் வியாழி.

ராவண காலத்தினதுபோன்றதாய் லங்காபுரம் அப்போது இல்லையென்பது அவளுக்கு அறிய வந்திருந்தது. மகனை, கணவனை, தந்தையை இழந்தவர்களாய் அந்த யுத்தம் பலரையும்தான் இழப்பின் வலியை உணர வைத்திருந்தது. வெஞ்சினம் கொண்டு போரெனின் ஆர்த்தெழும் மக்களினம் அது. அது மட்டுமே அவ்வினம் கண்ட போரல்ல. இனக் குழுமங்களுக்கிடையே, அண்டைய நாடான நாகநாட்டுடனென்று, தம்மமக்கு இடையிலேயென்று அது பல்வேறு யுத்தங்களையும், சண்டைகளையும் கண்டதுதான். ஆனால் தம் தலைவனும் தலைவியும் இல்லாத நாட்டில், அவர்களின் அழிவுக்கு முதற் காரணமாயிருந்த வீடாணனின் தலைமைத்துவம், அவர்களின் உயிர்வலி. அரசனாய் ராவண முடி தரித்து, ராவணன் வீற்றிருந்து அரசும் இசையும் செய்த தவிசில், எது பொருத்தமும் இல்லாத வீடாணன் அமர்ந்திருந்து மக்களை நிர்வாகம் செய்து கொண்டிருந்தான். அந்த வெறுப்பு அவன் பெயரே தம் செவி எட்டாத தொலைவிற்கு மக்களைக் கூட்டம் கூட்டமாய் மெல்லமாய்ச் சென்று சேரச் செய்துவிட்டிருந்தது.

படைஞுரையும் புடை சூழ்ந்தவரையும் தவிர்த்து லங்காபுரத்தில் குடிமக்களே இருக்க வில்லைப்போல பிரமை தெரிந்தது. நாடு சுடுகாடாகிப் போன விந்தை நிகழ்ந்திருந்தது.

திசையளாவி மக்கள் அள்ளுண்டு ஓடிவிட்டிருந்தனர். களனிகள் காய்ந்து பிளவைகள் கண்டு கிடந்தன. தோட்டங்கள் கள்ளியும் தாழையும் நெருஞ்சியும் சம்பும் புதரும் அடர்ந்து பெரும் அழிச்சாட்டியத்தில். கானப் பறவைகள்கூட நாடுவிட்டோடிவிட்டிருந்தாற் போல் அவற்றின் குரல்கள் அழிந்து காலை மாலைக் காற்றுகள் இழைந்தன.

எப்பேர்ப்பட்ட தேசம் அது. தூர தூர இடங்களிலிருந்தெல்லாம் வாணிகரும், தோணிக் காரரும், நாவாய்க்காரரும், கட்டுமரக்காரராய் வந்து மொய்த்தபடியிருந்த ஒரு காலம் இருந்தது. பொன் அள்ளிக்கொடுத்து பிறநாட்டு அதிசயமும் அபூர்வமுமான பொருள்களை வாங்கிக்கொண்டிருந்தான் ராவணன். இப்போதோ அவன் வம்சமே அழிந்து பேர் சொல்லக்கூட ஒருவர் இல்லாது தொலைந்துபோயிருந்தது.

தன்னை ஒருமுறை காணாதவருக்கும் ராவணன் ஆதர்ஷமான தலைவனாயிருந்தவன். அவன் புணர்ச்சியின்பத்துக்குக்கூட மந்தாகினி தவிர வேறு பெண் நாடியிராதபோதும், அவனாகம் தழுவ இயக்கவினத்தில், நாகவினத்திலுமே, பெண்களுக்கு மோகம் அலையடித்துக்கொண்டிருந்தது. இன்று அந்த நெடுவுடல் கனவாகிக் கலைந்துபோனது. ஆனாலும் குடிமக்களைப் பொறுத்தவரை அது அகலாத கனவாகவிருந்தது.

வியாழியும் அவனை மறந்துவிடவில்லை. நாகனை எண்ணும்போது மட்டுமில்லை, பலவாண்டுகளின் முன் ஒருபோது அவன் சென்ற விசைத் தேரின் கிண்கிணிப் பொன் குண்டொன்று கழன்று விழுந்துவிட, அதை எடுத்து வியாழி தன் காதில் ஆரமாய்க் குத்தித் தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள் நெடுங்காலமாய். இன்று அந்தக் குன்றி மணியன்ன பொன் குண்டு எங்கோ போய்த் தொலைந்துதான் விட்டது. ஆனால் நினைவு தொடர்ந்து வாழ்வுபூரா தொடரச் செய்து கொண்டிருந்தது அவளுக்கு.

காடும் மலையும் தவிர்த்தால் வியாழிக் கென்று வேறுபோக்கிடம் இல்லை. நாடு நகர்கள் கண்டதில்லை அவள். நாகனோடான உறவில் நகர மாந்தர் சிலர் தெரியவந்திருந்தனர். நகர் வாழ் கணிகையரின் உல்லாசங்களையும், உணர்வுகளையும் அவள் அறிந்திருந்தாள். பரத்தையர் சேரி குறித்தும், கோயிலின் ஆடற் கணிகையர் பற்றியும்கூட அவள் கதைகளாய்க் கேட்டிருந்தாள்.

ஆனால் கடல் தெரியாதிருந்தது போல் அவள் நகரும் தெரியாதிருந்தாள். அதிர எழும் அலைக் கரங்களும், மண்விழுங்கும் மகாவலியும் நீலநிறச் செறிவுமாய் எல்லை கடந்து தெரிவது கடலென அவள் கேள்வியில் அறிந்திருந்தாளே தவிர, அதை அவள் கண்கொள்ளக் கண்டதில்லை. பொன்னிறப் பெண்ணாளான ஒருத்தி பலபேர் வியக்க லங்காபுரத்தில் பாதுகாக்கப்பட்டிருந்த காலத்தில், அவளைப் பார்க்கும் ஆவல் தோன்றியிருந்தது வியாழிக்கு. அதற்காகவே குளிர்மலைப் பிரதேசத்துக்கு நாகனோடு அவள் சென்றிருக்கிறாள். அவள் சென்ற முதல் வேறு பிரதேசம் அதுதான். நாகநாடும் சென்றிருக்கிறாள்தான். நாகன் அவளை அழைத்துச் சென்ற இடம், ஏறக் குறைய குளிர்மலைப் பிரதேசமளவான ஒரு சிறுகிராமமாகவே இருந்தது. ஆனாலும் நகர், பெருநகர் எதுவும் அவள் காணப்பெற்றதில்லை.

தலைநகரை அவள் எப்போதுமே அறிந்திருக்கவில்லை. லங்காபுரத் தலைநகர் அவளுக்குத் தெரியாது. கடல்போல்தான் எல்லாம் அவளுக்கு. கேள்வியில் பட்டதுதான். மலைக்கோயிலைக் கூட உள்நுழைந்து அவள் கண்டதில்லை. அதன் வெண்நிறத்தைத் தூரவிருந்து பார்த்ததுமட்டுமே. இருந்தும்தான் அந்த அபகீர்த்திகொண்ட வீடாணனின் பெயர் கேட்கமுடியாத தொலைவுக்கு அவள் ஓடினாள்.

காமம் அவளளவில் மரித்துவிட்டிருந்தது. அவள் நாகன்மீது கொண்டிருந்த காதல்கூட பெரிதான கிளர்ச்சிக்குரியதாய் அப்போது இல்லை. இருந்தும் நினைவுகளுக்குள் ஒரு பொறியாக இருந்து நாகன் அடிக்கடி அவளிடம் வந்துகொண்டிருந்ததனால் அவளுக்கு ஒரு பித்துப்பிடித்த நிலைமையில்தான் வாழ்தல் சாத்தியமாயிருந்தது.

அவள் நாகநாடு சென்றாள். மலைவாழ்நர் குகைகளுக்குச் சென்றாள். பின் திரும்பவும் நாகநாடு. இவ்வாறு அவளது அலைச்சல் வயதின் தள்ளாமையையும் மேவி நடந்து கொண்டிருந்தது.

அப்போது அவள் நாகநாட்டில் ஒரு குடிசையில் தங்கியிருந்தாள். நாகனோடு முன்பு அங்கு சென்றிருந்த தருணங்களில் அவள் அந்த இடத்துக்குத் தக வாழும்வகை தெரிந்திருந்தாள்.

வழக்கம்போல் வானம் ஒளியிழக்கத் தொடங்க தாலம் ஓலையில் அவளே இழைத்த பாயை நிலத்தில் விரித்து விண்மீன்கள் பார்த்தபடி வெளியில் படுத்துக்கொண்டிருந்தாள். சிறிதுநேரத்தில் உறக்கமும் வந்தது இசைவாக. ஆனாலும் வழக்கமில்லாதபடி இரண்டாம் யாமத்திலேயே தூக்கம் திடீரெனக் கலைந்துபோனது.

அவள் எதையோ செவிப்பட்டாளா. பல் நெருமுவதுபோல், எலும்புகள் நொறுங்குவன போல் இருந்தது அச்சத்தம். அது எதுவாக இருப்பினும், எதையோ அவள் கேட்டாள் தான். ஆனால் எங்கிருந்து எழுந்தது என்பதைத் தான் அனுமானிக்க முடியாதிருந்தது.

அது அவளுக்குப் புதிர். சத்தம், அரவம் போன்ற விடயங்களில் அவளது அனுபவம் பெரிது. அவளது தீட்சண்யம் அப்போதும் பெருமளவு பிழைபடவில்லை என்பதே அவளது நம்பிக்கையாக இருந்தது.

ஆச்சரியத்தோடு எண்ணிக் கொண்டிருக்கையில், ஒலியெழுந்த வேளையில் நிலம் அதிர்ந்ததுபோலுமிருந்ததை அப்போது நினைவு கொண்டாள்.

அப்படியானால் மண்மடியுள்ளிருந்துதான் அவ்வொலி கிளர்ந்திருக்கிறது. அத் திண்ணத்தை, மண்மடியுள்ளிருந்து என்ன சத்தம் கிளரமுடியுமென்ற ஐயம் அடித்து விலக்கியது.

திடீரென, நாகன் ஒருமுறை தான் அவ்வாறான ஒலியொன்றைக் கேட்டதாகவும், அவளும் அதைக் கேட்டாளா என வினவியது ஞாபகமாயிற்று. பல காலம் கடந்து அவர்கள் இருவரும் சேர்ந்து வாழத் தொடங்கிய பின்னர், ஓர் இரவில், ஓர் உச்சபட்ச வெறியாட்டை முடித்த பின்னர், அந்தச் சம்பவத்தை ஞாபகமாக்கி நிலத்தினுள்ளே அவன் என்ன ஒலியைக் கேட்டிருக்க முடியுமென்றும், அவன் அவ்வாறு கேட்டிருந்தானேயாகில் அது பாதாள அறைகளில் கொட்டிக் கிடந்த ராவணனது மணிக் குவைகளின் ஒலியாகவே இருக்கமுடியுமெனத் தான் கூறிச் சிரித்ததும் பின்னர் ஞாபகமாயிற்று வியாழிக்கு. நாகன் அன்றும் தான் கேட்டதாகவே சாதித்திருந்தான்.

மெய்தான். மண்மடியுள் சத்தம் எழும்பமுடியும்.

(22ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவருடன் பேசும் மனிதர்கள்

-அ. முத்துலிங்கம்-

> "உலகத்தில் இன்று ஒரு மில்லியன் மக்கள் அராமிக் மொழியை பேசுகிறார்கள். ஆனால் துயரம் என்னவென்றால் அவர்கள் ஓர் இடத்தில் இல்லை. அவர்களுக்கு ஒரு நாடு இல்லை".

கனடாவிற்கு வந்து ஏற்பட்ட பிரச்சினைகளுள் ஒன்று தலைமுடி வெட்டுவது. நான் வசித்த வீட்டிலிருந்து தலைமுடி திருத்துமிடம் நாலே நிமிட தூரத்தில் இருந்தது. கடந்த ஏழு வருடங்களாக மாதம் ஒருமுறை அங்கே சென்றிருக்கி றேன். அதன் உரிமையாளர் ஓர் இத்தாலியர், பெயர் ரோனி. அவரும் இரண்டு மூன்று உதவியாளர்களும் அங்கே வேலை செய்தார்கள்.

ரோனி நட்பானவர். அவருடைய முடி அலங்கோலமாக சிதறுண்டு போயிருக்கும். நான் அவருக்கு சொல்வேன், "என்ன உங்களுடைய முடியே இப்படி தாறுமாறாக இருக்கிறது. உங்கள் வாடிக்கைக்காரர்கள் இதைப் பார்த்து வராமல் போய்விடுவார்கள்." அவர் சொல்வார், "என்ன செய்வது. என்னைப் போல ஒரு நல்ல முடிதிருத்துபவர் கிடைத்தால் உடனே தலையை கொடுத்துவிடுவேன். இங்கே எல்லோருமே மோசம். அதுதான் முடிவெட்டுவதை தள்ளிப் போட்டுக்."

நானும் ரோனியைப் போல அவருடைய உதவியாளர்களிடம் தலையை தரமாட்டேன். வரிசையில் உட்கார்ந்திருக்கும் வாடிக்கைக் காரர்களுடன் என் முறைக்காக காத்திருப்பேன். ரோனியிலே எனக்குப் பிடித்தது அவசரமின்மை. நிதானமாக தொழில் சுத்தமாக வேலையை முடிப்பார். எப்படி வெட்டவேண்டும் என்று கேட்கமாட்டார். என்ன சைஸ் கிளிப் என்று கேட்கமாட்டார். பிடரியில் நேர்வெட்டா அல்லது குறைவெட்டா என்றெல்லாம் கேட்கமாட்டார். ஒவ்வொரு வாடிக்கைக்காரருக்கும் அவரிடம் குறிப்பு உண்டு. தையல்காரரிடம் இருப்பதுபோல, மருத்துவரிடம் இருப்பதுபோல. அதைப் பார்த்து தன் வேலையை செம்மையாக முடித்துவைப்பார்.

அவரிடம் எனக்கு பிடிக்காத ஓர் அம்சமும் இருந்தது. ரோனி விளையாட்டு பிரியர். அவர் தலைமுடி வெட்டும் போது முதல் நாள் நடந்த ஐஸ் ஹொக்கி பற்றி அல்லது கூடைப்பந்து பற்றி அல்லது பேஸ் போல் பற்றி ஓயாது பேசுவார். விளையாட்டைப் பற்றி தெரியாது என்று சொன்னால் கனடாவில் ஒரு புழுவைப் பார்ப்பதுபோல பார்ப்பார்கள். ஆகவே முதல் நாள் நான் அதற்கு தயாரிக்கவேண்டும். தொலைக்காட்சியில் விளையாட்டுகளைப் பார்த்து முக்கியமான குறிப்புகளை எடுத்து வைத்துக் கொள்வேன். அடுத்த நாள் முடி திருத்தும் போது ஏதாவது ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை சொல்லி அவரை மகிழ்விப்பேன். அன்று முடிவெட்டு உத்தமமாக அமையும்.

ஆனால் எத்தனை வருடங்கள்தான் இந்த நாடகத்தை ஆடமுடியும். எனக்கும் அலுப்பு பிடித்தது. நான் வேறு இடத்தில் முடிவெட்ட ஆரம்பித்தேன். அது 20 நிமிட தூரத்தில் இருந்த பெரிய நிலையம். பெண்கள் பகுதி தனியாக இயங்கியது. ஆட்கள் வருவதும் போவதுமாக ஒரே கலகலப்பு. நான் வாயே திறக்காத ஒரு வேலைக்காரரிடம் போகலாம் என்ற முடிவில் இருந்தேன். என்னுடைய முறை வந்தபோது, புதன்கிழமை என்ற வாசகம் எழுதிய தடித்த உடையை வியாழக்கிழமை அணிந்திருந்த ஐம்பது வயதுக்காரர் ஒருவர் என் முடியை வெட்டத் தயாராயிருப்பதாகச் சொன்னார். ஒருநாள் பிந்திய ஆள் என்றாலும் அவர் தலையை சரித்து புன்னகைத்த விதம் எனக்கு பிடித்துக் கொண்டது.

அவர் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. கருமமே கண்ணாகி அவர் முடியை வெட்டி முடித்ததும் கண்ணாடியில் பார்த்தால் அது வெகு நேர்த்தியாக இருந்தது. ஒரு கலைஞனின் வேலை என்பதில் சந்தேகமே இல்லை. அவருடைய கைகள் வண்ணத்துப்பூச்சிபோல துரிதமாக இயங்கின. தலையிலே ஆடிக்கொண்டிருக்கும் ஆயிரம் முடிகளில் ஒரு மயிரை மட்டும் அவர் கத்தரிக்கோல் தேடி லாவகமாக வெட்டும். அவ்வளவு நுட்பமான கலைஞன்.

அடுத்த முறையும் அவர்தான் வெட்டினார். அதற்கு அடுத்தமுறை சென்றபோது அவருக்காக காத்திருந்து அவர் முடிவெட்ட ஆரம்பித்தபோது ஒரு சம்பவம் நடந்தது. அவரைப் பார்த்தால் மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்தவர் போல தோற்றமளித்தார். கண்கள் பழுப்பு நிறத்திலும் முடி கறுப்பா கவும் இருந்தது. அவருடைய நடை உடைபாவனைகள் எல்லாம் வித்தியாசமாகவே தோன்றின. வாடிக்கைகாரர்களிடம் பேசும் போது அவருடைய உச்சரிப்பு அரேபியர்களுடையதைப் போல இருந்ததையும் கவனித்தேன்.

அன்று பெண்கள் பகுதியில் இருந்து மிக நாகரிகமாக உடையணிந்திருந்த ஒரு பெண் இவரிடம் வந்தாள். கறுப்பு காலணியும் சிவப்பு கையுறையுமாக பார்த்தவுடனேயே அவள் அரேபியப் பெண் என்று சொல்லிவிடலாம். வயது முப்பதுக்குள் தான் இருக்கும். அதிகாரம் செய்தே பழக்கப்பட்ட வள்போல ஒருகையை இடுப்பில் வைத்து சாய்ந்து நின்றாள். ஏதோ அரபு போன்ற மொழியில் அவரிடம் வேகமாகப் பேச அந்த மனிதர் ஒரு வார்த்தையில் ஏதோ சொன்னார். அந்தப் பெண் மீண்டும் சங்கிலித் தொடர்போல நிற்காமல் பேசினாள். இவர் மறுபடியும் சுருக்கமாக பதில் கூறினார். அவள் தொடர்ந்து ஏதோ கேட்க "உனக்கு கேட்கவில்லையா. எனக்கு அரபு மொழி தெரியாது" என்று உரத்து ஆங்கிலத்தில் சொன்னார். ஒரு குதிரை பக்கவாட்டில் நகர்வதுபோல அவள் நகர்ந்து சற்று எரிச்சலாகவே அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

எல்லோரும் இவரையே பார்த்தார்கள். இவர் ஒருவித பதற்றமும் இன்றி முன்பு போல அமைதியாக என் முடியை வெட்டிக் கொண்டிருந்தார். நான் முதன்முதலாக இவரிடம் பேச்சுக் கொடுத்தேன். இவர் ஈராக்கில் இருந்து போருக்கு முன்னர் சதாம் காலத்தில் கனடாவுக்கு குடிபெயர்ந்தவர். அந்தப் பெண் தலைமுடியலங்காரம் செய்ய வந்திருக்கிறாள். அவளுக்கு ஆங்கிலம் தெரியாது. அவள் பேசும் அரபுவை மொழி-பெயர்த்து ஆங்கிலத்தில் கூறுமாறு கேட்டிருக்கிறாள். இவர் தனக்கு தெரியாது என்று சொல்லியிருக்கிறார். ஈராக்கில் இருந்து புலம் பெயர்ந்த ஒருவருக்கு அரபு மொழி தெரியாது என்பதை அவள் நம்பவில்லை. அதுதான் கோபமாகச் செல்கிறாள்.

எனக்கு ஆச்சரியம். நான் வாழ்நாளில் சந்திக்கும் முதல் ஈராக்கியர் இவர்தான். ஆதி காவியமான கில்காமேஷ் இலக்கியம் பிறந்த நாடு என்று எனக்கு ஈராக்கில் மதிப்பு உண்டு. நாலாயிரம் வருடங்களுக்கு முன்பு சுமேரிய எழுத்தில் எழுதிய அந்தக் காவியம் இன்றும் களிமண் தட்டைகளில் அங்கே பாதுகாக்கப் படுகின்றன.

நான் அவரிடம் கேட்டேன். "எப்படி உங்களுக்கு அரபு மொழி தெரியாமல் போனது?"

நான் ஈராக்கில் பிறந்தாலும் அநேகமாக வெளிநாடுகளில்தான் வளர்ந்தேன். என்னுடைய தந்தையார் ஈரான், சிரியா போன்ற நாடுகளில் வேலைசெய்தார். நான் பொறியியல் படிப்பு படித்தவன். ஈராக்கில் தொடர்ந்து வாழமுடியாமல் தஞ்சம் கேட்டு கனடாவுக்கு வந்தோம். என் மகன் இப்போது வெளிநாட்டில் வேலை செய்கிறான். நான் இங்கே தனியாகத்தான் வாழ்கிறேன்.

பொறியியல் படித்துவிட்டு எப்படி இந்த தொழிலுக்கு வந்தீர்கள்?

நான் மாத்திரமில்லை. என்னைப்போல பலபேர் இங்கே வந்து முற்றிலும் வேறு வேலை செய்கிறார்கள். ஆங்கிலத்தில் இன்னொருமுறை பொறியியல் படிக்க என்னால் முடியவில்லை. ஆனால் எனக்கு இந்த தொழிலில் ஒரு மோகம் என்று சொல்லலாம். மூன்று மாதப் பயிற்சியில் முடிவெட்டப் பழகிவிட்டேன். இதுவும் பொறியியல் போலத்தான். மிகப்பெரிய கலை. ஒவ்வொருநாளும் நான் வீட்டுக்கு போகமுன்னர் ஒரு புது விசயம் கற்றுக்கொண்டு போவேன்.

என்னால் நம்பமுடியவில்லை. இந்த மனிதரை அதிசயத்தோடு பார்த்தேன். இனிய புன்னகை மாறாமல் தொழிலில் கவனமாக இருந்தார். "நீங்கள் இன்னும் ஆரம்பக் கேள்விக்கு பதில் சொல்லவில்லை. நீங்கள் என்ன மொழி பேசுவீர்கள்?" என்றேன்.

"நான் படித்தது பாரசீக மொழி. அது தொழிலுக்காக. வீட்டு மொழி அராமிக்."

"அராமிக்கா? கேள்விப்பட்டதில்லையே."

"அப்படி ஒரு மொழி இருக்கிறது. என் மகனுக்கும் கொஞ்சம் தெரியும். என் மனைவியும் நானும் வீட்டிலே அதுதான் பேசுவோம். போனவருடம் என் மனைவி இறந்துவிட்டார். எனக்கு இங்கே என் மொழி பேசுவதற்கு ஒருவருமே இல்லை. கனடாவில் இந்த மொழி பேசுபவர்கள் சிலர் இருப்பதாகக் கேள்வி. ஆனால் அவர்களுடன் என்னால் தொடர்பு கொள்ளமுடியவில்லை."

"அராமிக் மொழி பேசும் நாடு என்று ஏதாவது உண்டா?"

"அப்படி இருந்தால் அது பெரிய வரம் அல்லவா? நான் Syrian Othodox Church ஐ சேர்ந்த கிறிஸ்தவன். சதாம் ஆட்சியில் நாங்கள் பட்ட கொடுமைகளை சொல்லி ஆற்ற இயலாது. உலகத்தில் இன்று ஒரு மில்லியன் மக்கள் அராமிக் மொழியை பேசுகிறார்கள். ஆனால் துயரம் என்னவென்றால் அவர்கள் ஓர் இடத்தில் இல்லை. அவர்களுக்கு ஒரு நாடு இல்லை. சிதறிப் போய் ஈரான், ஈராக், இஸ்ரேல், லெபனான், சிரியா போன்ற பல நாடுகளில் சிறு சிறு குழுக்களாக வாழ்கிறார்கள். அவர்கள் எங்கே வாழ்ந்தாலும் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்கள்தான். உலகத்துக்கு முதன் முதலாக சட்டத்தொகுப்பை வழங்கியவன் 3700 ஆண் டுகளுக்கு முன்னர் வாழ்ந்த எங்கள் மன்னன் ஹமுராபி. ஒடுக்கப்பட்டவர்களை காப்பதற்குத்தான் அவன் சட்டம் இயற்றினான். இன்று நாங்கள் ஒடுக்கப்பட்டு, துரத்தப்பட்டு நாடு நாடாக அலைந்துகொண்டிருக்கிறோம்."

"கனடா நீங்கள் தேர்ந்தெடுத்த நாடு தானே. இங்கே உங்களுக்கு முழுச் சுதந்திரம் உண்டல்லவா?"

"நண்பரே, இது சொர்க்கம். இதில் என்ன சந்தேகம். இங்கே வந்தபின் நான் நினைத்தேன் ஒடுக்கப்பட நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஒவ்வொருவரும் ஒரேயொரு நாள் என்றாலும் கனடாவில் வாழ்ந்து பார்க்கவேண்டும் என்று. அப்பொழுதுதான் அவர்களுக்கு சுதந்திரக் காற்று என்பது என்னவென்று தெரியவரும். நான் சொன்னது எங்கள் மொழியை. இன்று அது அழிந்துகொண்டு வருகிறது. எங்கே எங்கேயெல்லாம் எம் மக்கள் வாழ்கிறார்களோ அங்கேயெல்லாம்

(22ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவருடன்...

21ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் மொழி விழுங்கப்படுகிறது. "ஆபத்தில் இருக்கும் மொழி" என்று எங்கள் மொழியை அறிவித்துவிட்டார்கள். இன்னும் சில வருடங்களில் அது அழிந்து போகக் கூடும்."

"அப்படி நிச்சயமாகச் சொல்லமுடியுமா?"

"அப்படித்தான் அறிவித்திருக்கிறார்கள். நீங்கள் இரவு நேரத்தில் என் வீட்டுக்கு வந்தால் நான் அராமிக் புத்தகங்களைப் படித்துக்கொண்டிருப்பதை பார்ப்பீர்கள். சுவர்களுடன் அராமிக்கில் பேசுவேன். பழக்கம் விட்டுப்போய்விடுமே என்ற பயம். நான் பேசும் ஒவ்வொரு நிமிடமும் என் மொழி வாழ்ந்துகொண்டிருக்கிறது."

இப்பொழுது அவர் முடிவெட்டுவதை நிறுத்திவிட்டார். சற்று எட்ட நின்று தலையை இரண்டு பக்கமும் சரித்து என் முடியை உன்னிப்பாக கவனித்தார். பின்னர் முகத்தை பார்த்தார். திடீரென்று "ஷாம்பூ

"ஒரு மொழியின் எதிர்காலத்தை அதைப் பேசும் மக்களின் எண்ணிக்கை தீர்மானிப்பதில்லை. அதுபோல அதன் வளர்ச்சிக்கும் எண்ணிக்கைக்கும் சம்பந்தமில்லை".

போடவா?" என்றார். நான் சம்பாஷணை தொடரவேண்டும் என்பதில் ஆவலாயிருந்தேன். சரி என்று தலையாட்டினேன்.

"நான் நிறையப் பேசிவிட்டேன். நீங்கள் எந்த நாடு, என்ன மொழி பேசுவீர்கள் என்று சொல்லவில்லையே?".

நான் சொன்னேன். நானும் உங்களைப் போலத்தான். நான் பேசுவது தமிழ்மொழி. இலங்கைக்காரன். அங்கே எங்கள் மொழியை சிங்களம் விழுங்கிக்கொண்டிருக்கிறது.

உங்கள் மொழியைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். அது பழைய மொழி அல்லவா?

அது உண்மை. இரண்டாயிரம் ஆண்டுகள் தொன்மையான இலக்கியங்கள் எங்களிடம் இருக்கின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு 300 ஆண்டுகள் முன்னராகவே செதுக்கிய தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் குகைகளில் கிடைக்கின்றன. இன்று உலகத்தில் பல நாடுகளில் 80 மில்லியன் மக்கள் தமிழ் பேசுகிறார்கள்.

எண்பது மில்லியனா? நம்பவே முடியவில்லை. எங்கள் மொழியிலும் பார்க்க 80 மடங்கு அதிகமான எண்ணிக்கை. அதிர்ஷ்டம் செய்த மொழி. ஆனால் உங்களுக்கென்று ஒரு நாடு உண்டா?

இல்லை.

உங்கள் மொழியில் தேசிய கீதம் உண்டா?

இல்லை.

அப்படியானால் உங்கள் மொழிக்கும், என் மொழிக்கும் பெரிய வித்தியாசமே இல்லை.

எப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடியும்?

நீங்கள் வரலாற்றை படித்தால் தெரிந்துவிடும். கிறிஸ்து பிறப்பதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன்னரே ஹீப்ரு மொழியும், அராமிக் மொழியும் செழித்து வளர்ந்தன. இரண்டுக்குமே சமவயது. இரண்டிலுமே எழுதப்பட்ட செல்வங்கள் இன்றுவரை பாதுக்காக்கப்பட்டு வருகின்றன. நாளடைவில் இரண்டு மொழிகளுமே நலிந்தன. 100 வருடங்களுக்கு முன் ஹீப்ரு மொழி எழுத்தில் மட்டுமே வாழ்ந்தது. பேசுவதற்கு ஓர் ஆன்மா இல்லை. இன்று ஐந்து மில்லியன் மக்கள் ஹீப்ரு பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். பழைய இலக்கியங்களும் புதிய இலக்கியங்களும் படிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நாடு உண்டு. அதன் பெயர் இஸ்ரேல். அவர்களுடைய மொழி இனிமேல் அழியவே அழியாது.

நாடு இல்லாமல் ஒரு மொழி வாழ முடியாது என்று சொல்கிறீர்களா?

நான் ஒரு தலைமுடி திருத்துபவன். மொழியியல் அறிஞன் அல்ல. எனக்கு என்ன தெரியும்? நாடு இல்லாமல்தானே என் மொழி சிதைந்தது. நாடு இருந்த படியால்தானே இறந்து போன ஹீப்ரு மொழி மறுபடியும் உயிர்பெற்று நிலைத்து நிற்கிறது. உங்கள் மொழி -தமிழ்- நாடு இல்லாமல் வாழும் என்று நினைக்கிறீர்களா?

"ஆனால் இந்தியாவில் ஒரு தமிழ் மாநிலம் இருக்கிறதே."

மாநிலம் வேறு. நாடு வேறு. இன்று உலகத்திலுள்ள ஒரு சின்னஞ்சிறிய நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள் -மால்ட்டா. அங்கே 400,000 மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய மொழி மால்ட்டிஷ். அந்த மொழி அழியுமா? அழியாது. ஒரு மைல்கல் எப்போதும் உண்மை பேசுவதுபோல நான் பேசுகிறேன். அவர்களுடைய மொழி அழிய வேண்டும் என்றால் முதலில் அந்த நாடு அழியவேண்டும். உங்கள் நாட்டுக்கு சமீபத்தில் இருக்கும் மாலைதீவு, அதை எடுத்துக் கொள்ளுங்கள். அதனுடைய சனத்தொகை 350,000. அவர்களுடைய மொழி திவேஹி. அது அழியுமா? எப்படி அழியும்? 300,000 மக்கள் வாழும் நாடு ஐஸ்லாண்ட். அவர்களுடைய மொழி ஐஸ்லாண்டிக். அது அழியுமா? இல்லை. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

நம்புவதற்கு கஷ்டமாக இருக்கிறது. பத்து மில்லியன் மக்கள் ஒரு மொழியை பேசினாலும் அவர்களுக்கு ஒரு நாடு இல்லாவிட்டால் அந்த மொழி அழிந்துவிடும் என்று சொல்கிறீர்கள்?

ஷாம்பூ போட்டு முடிந்ததும் அவர் முடி உலர்த்தியால் தலைமுடியை சீவி உலர்த்திக்கொண்டிருந்தார். அவர் வாய் மட்டுமே பேசியது, ஆனால் கைகள் வேறு யாருடையவோ கைகள்போல துரிதமாக வேலை செய்தன.

அப்படித்தான் என் சிற்றறிவுக்கு படுகிறது. ஒரு மொழிக்கு பாதுகாப்பு வேண்டும். ஒரு நாடுதான் அதைக் கொடுக்கமுடியும். உலகத்தில் 7000 மொழிகள் இருக்கின்றன என்று படித்திருக்கிறேன். அவற்றிலே 2000 மொழிகள் அழிவில் இருக்கின்றன. மீதியில், ஒரு நாடு பாதுகாப்புக் கொடுக்கமுடியாத மொழிகள் எல்லாம் ஒவ்வொன்றாக அழிவை நோக்கி நகர்கின்றன. அனைத்து மொழிகளையும் காப்பாற்ற முடியாவிட்டாலும் அவற்றை சேமிக்கவேண்டும். ஆவணப்படமாகவும், ஒலி வடிவமாகவும் கணிமைத் தொழில்நுட்பத்தில் பாதுகாக்கலாம். ஒரு மொழி அழிவது என்பது ஓர் இனம் அழிவதற்கு, ஒரு கலாச்சாரம் அழிவதற்கு சமம். கீழே விழுந்த முடியை திரும்பவும் ஒட்டமுடியாது. மொழியும் அப்படித்தான். பூமியிலிருந்து ஒரேயடியாக மறைந்துவிடும்.

நான் பேசமுடியாமல் அவரையே பார்த்தேன்.

"ஒரு மொழியின் எதிர்காலத்தை அதைப் பேசும் மக்களின் எண்ணிக்கை தீர்மானிப்பதில்லை. அதுபோல அதன் வளர்ச்சிக்கும் எண்ணிக்கைக்கும் சம்பந்தமில்லை. ஒரு சின்னப் பரிசோதனை. உங்கள் நாட்டு சிங்கள மொழியின் கடந்த 50 வருட கால வளர்ச்சியுடன் தமிழ் மொழியின் ஐம்பது வருட வளர்ச்சியை ஒப்பிட்டு பாருங்கள். நான் சொல்வது உங்களுக்கே புரியும்."

புதிய முடி அலங்காரத்தை நான் கண்ணாடியில் பார்த்தேன். திருப்தியாகவிருந்தது. காசாளரிடம் பணத்தைக் கட்டினேன். ஈராக்கிய நண்பரின் பெயரைக்கூட நான் அதுவரை தெரிந்திருக்கவில்லை. அது முக்கியமாகவும் படவில்லை.

எனக்கு கவியின் வரிகள் ஞாபகத்துக்கு வந்தன.

நான் சாக்கடையில்

விழுந்து கிடக்கிறேன்.

என் கண்கள்

நட்சத்திரங்களில்.

நான் என் மொழி மீது வைத்த நம்பிக்கையை துறக்கத் தயாராகவில்லை.

அவர் என்னை மூடியிருந்த போர்வையை கையிலே விரித்துப் பிடித்தபடி ஒரு மாட்டுச் சண்டைக்காரர் போல நின்றார். தத்தம் மொழிகளை இழந்துகொண்டுவரும் இருவரையும் ஒரு போர்வை பிரித்தாலும் அவர் வேதனையும் இழப்பும் துயரமும் என்னுடையது போலவே இருந்தது. எப்படி இவ ரிடம் விடைபெறுவது என்பது எனக்கு தெரியவில்லை. ஒருவர் அந்தச் சமயத்தில் எதைச் சொல்லக்கூடாதோ அதைச் சொன்னேன்.

"நண்பரே, அழிவை நோக்கி பயணிக்கும் ஒரு மொழியை நிறுத்த தனிமனிதர் ஒன்றுமே செய்யமுடியாது. இன்றிரவு சுவருடன் உங்கள் உரையாடல் இனிமையாக அமையட்டும்."

"என்ன, அப்படிச் சொல்லிவிட்டீர்கள். ஒரு மொழியை அழிய விட்டுவிடுவோமா? அது யேசு பேசிய மொழி அல்லவா?"

நான் திடுக்கிட்டேன். கடந்துபோன பிறகும் முடிவெட்டு நிலையக் கதவுகள் நெடுநேரம் ஆடின.

✦ ✦ ✦

லங்காபுரம்...

20ம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குமேல் அவளுக்கு நாகனின் நினைவுகளாகிவிட்டது.

இவ்வாறு காலம் கழிந்துகொண்டிருந்தது விரைவாகவோ, மெதுவாகவோ. அவளது ஜீவனும் வதையுடன் வாழ்வைக் கரைத்துக்கொண்டிருந்தது காலத்தில்.

ஒருநாள் வியாழி ஓர் இருள் கவியும் பொழுதில் இறந்துபோனாள். தன் கடைசி மூச்சைவிட்ட அந்த இறுதிக் கணத்தில்கூட அவளுக்கு வியப்பளிப்பதாய் லங்காபுரத்து அளப்பரிய மணிக்குவியல்களுக்கு என்ன ஆகியிருக்கக்கூடும் என்ற வினா எழுந்து நின்றுகொண்டிருந்தது. வாழ்விலிருந்து சாவை எய்தத் தேவைப்படும் அந்தச் சொற்ப பொழுதில்கூட தான் மண்மடியுள் முன்பு கேட்டதுபோன்ற சத்தத்தைக் கேட்டதாய் உணர்கையாகியது வியாழிக்கு. ஆனால் அதிர்ச்சியடையவோ, அதிசயமடையவோ, அச்சமடையவோதானும் செய்ய காலம் சிலநொடிகளின் அவகாசத்தைக்கூட அவளுக்குக் கருணை காட்டவில்லை.

பூமி இருண்டு வந்தது.

(தொடர்வுறும்)

திரு. எஸ். சந்திரபோஸ் அவர்களது

'எண்ணக் கோலங்கள்'

'எம். சி. ஒரு சமூக விடுதலைப் போராளி'

ஆகிய நூல்கள் வெளியீடு

இடம்: தமிழ் கூட்டுறவு இல்லம்
20 வேட் அவெனியூ
(Bloor & Lansdowne Intersection)

காலம்: 2008 செப்ரெம்பர் 6, சனிக்கிழமை
மாலை 6:30 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளமிங்டன் தமிழ்க்கல்வி நிலையம் வைகறை ஆதரவுடன் நடாத்தும் திருக்குறள் மனனப் போட்டி 2008க்கான அறிவித்தல்

ஸ்காபுரோ சிவிக்ஸ் சென்ரர் மண்டபத்தில் எதிர்வரும் புரட்டாதி மாதம் 6ம் திகதி சனிக்கிழமை காலை 8:30மணிக்கு பதிவுகள் ஆரம்பமாகி சரியாக 9மணிக்கு எழுத்து தேர்வும் தொடர்ந்து திருக்குறள் மனனப் போட்டியும் ஆரம்பமாகும். குறித்த நேரத்தில் பரீட்சை ஆரம்பிக்கப்படும். பரீட்சார்த்திகள் அனைவரும் உரிய நேரத்துக்கு பரீட்சைக்குத் தோற்றமளிக்க வேண்டும். பதிவுகள் யாவும் மண்டப வாயிலிலேயே நடைபெற உள்ளது. போட்டிக்கான கட்டணம் 15டொலர்கள் மாத்திரமே. எழுத்துத் தேர்வுக்கு விரும்பியவர்கள் பங்குபற்றலாம்.

உங்கள் தமிழ்த்திறன் தகுதிக்கேற்ப விரும்பிய பிரிவினை எழுத்து தேர்வில் நீங்கள் தெரிவுசெய்ய சந்தர்ப்பம் அளிக்கப்படும்.
சகல பிரிவினர்க்கும் திருச்குறள் போட்டியுடன் வாய்மொழித்தேர்வு, எழுத்து தேர்வு என இரண்டு பிரிவாக, தமிழ்த்திறன் தேர்வு போட்டியும் நடாத்தப்பட உள்ளது. குழந்தைகளுக்கு இயன்றளவில் முழுமையான ஒரு தமிழ் அறிவை கொடுக்கும் முகமாக பாடவிதானம் அமைக்கப்பட்டுள்ளது. விரும்பியவர்கள் யாவரும் பங்குபற்றலாம். போட்டிகளில் முதல் மூன்று இடங்களும் வயதெல்லைக்கு உட்பட்டோரே தெரிவு செய்யப்படுவார்கள். மற்றயவர்களுக்கு பரீட்சைக்கான புள்ளிகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

புரட்டாதி மாதம் 6ம் திகதி சனிக்கிழமை காலை 8:30மணிக்கு

மேலதிக தொடர்புகளுக்கு 416-318-3770.



The year..

18ம் பக்கத் தொடர்ச்சி)

கங்களும் இந்தத் தன்மையைக் கொண்டிருந்தன. எனவே இவர்களும் "நகரமயமாக்கப்பட்ட போராளிகள்" குழு என்று கூறுவதே பொருத்தம். ஜம் பெரும் இயக்கங்களில் ஒன்றின் மூலம் லண்டன் நகரில் தோன்றியமை குறிப்பிடத்தக்கது.

1985 வரை இராணுவ ஆட்சியேலேயே இயங்கியது பிரேசில். இதன் இன்றைய நிலைக்கு சில உதாரணங்கள்

15-24 வயதிற்குட்பட்டவர்களின் இறப்பிற்கு கொலையே காரணமாகியுள்ளது.

ரியோ, சாபோலோ ஆகிய நகரங்களுள் வாசிகளில் 42 வீதமானோர் குறைந்தது ஒரு கொலையை பார்த்துள்ளார்கள்.

1985 ல் இருந்து 2005 ஆண்டு 20 வருட காலத்தில் கொலைகளின் வீதவளர்ச்சி 237 வீதம். உலக சராசரியை விட நான்கு மடங்கு அதிகமான துப்பாக்கிகள் பாவிக்கப்பட்டு கொலைகள் செய்யப்பட்டுள்ளன.

75 வீதமான பிரேசில் நகரங்கள்-கிராமங்களில் எந்த வித கலாச்சார வெளிப்பாட்டு வசதிகள் இல்லை. 96 வீதமான நகரங்களில்-கிராமங்களில் சினிமா இல்லை. 25 வீதமான நகரங்கள்-கிராமங்களில் நூலகம் இல்லை. 15 மில்லியன் பிரேசில் வாசிகளுக்கு எழுத படிக்த் தெரியாது.

ஊலக வங்கியின் அறிக்கைப்படி, மிக அதிக கொலைகள் நடைபெறும் நாடு பிரேசில். ரியோ நகரத்தில் மாத்திரம் குறைந்தது ஆறாயிரம் சிறுவர்களிடம் துப்பாக்கிகள் உள்ளன. இக் குறிப்புக்களுடன் படத்துக்கு நகருவோம்.

பத்து வயது சிறுவன் Mauro (Michel Joelsas) ஓர் உதைபந்தாட்ட விரும்பி. உலக கோப்பையை ஆவலுடன் எதிர்பார்க்கின்றான். இவனது பெற்றோர் Daniel (Eduardo Moreira), Miriam (Simone Spoladore)ம் சிறுவனை, சிறுவனின் தந்தையின், தந்தையிடம் விட்டு விட்டு, விடுமுறைக்கு செல்ல விரும்புவதாக சிறுவனிடம் தெரிவிக்கின்றனர். சிறுவனின் விருப்பத்திற்கு எந்த இடமுமில்லை. Sao Pauloல் வசிக்கும் இந்தத் தாத்தா மிகவும் வயதானவர். நகரில் முடி வெட்டும் கடை வைத்துள்ளார். தாத்தாவுக்கும், மகனுக்குமான உறவு நெருக்கமானதல்ல. தொலைபேசி மூலம் தாத்தாவிடம்ஈ பேரனின் வருகை பற்றி தெரிவிக்கப்படுகின்றது. தாத்தா தங்கியிருக்கும்

தொடர் மாடிக் கட்டித்தின் வாயிலில் இந்த பத்து வயது சிறுவனை இறக்கி விட்டு உலக கோப்பை போட்டிகளின் முன்னர் திரும்பி விடுவதாக வாக்குறிதி கொடுத்து விட்டு பெற்றோர் சென்று விடுகின்றனர். சிறுவனைப் போல் பார்வையாளர்களும் அனாதாவராக உள்ளனர். ஒரு கையில் பை, மறு கையில் பந்து, இவற்றுடன் உள்ளே செல்லும் சிறுவன், தாத்தாவின் அறை மணியை அழுத்துகின்றான். கதவில் பலமாக தட்டுகின்றான். விடை இல்லை எதிரொலிகள் தான் கேட்கின்றன. சிறுவன் தனது விளையாட்டுப் பொருட்களை நிலத்தில் பரப்பி விட்டு விளையாடத் தொடங்குகின்றான். தாத்தா மோட்டலின் பக்கத்து அறைக்காரர் மற்றொரு வயதான Shlomo (Germano Haiut) வருகின்றார். அவர் சிறுவனை ஆச்சரியத்துடன் பார்க்கின்றார். சிறுவனிடம் விசாரித்து விட்டு தாத்தா இருதய நோயால் இறந்து விட்டதை தெரியப்படுத்துகின்றார். இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு விட்டு வரும் சிறுவன் புதிய தாத்தாவுடன் தங்குகின்றான். பெற்றோர் எங்கு என்பது தெரியாது. என்ன செய்வது எனத் தெரியாமல் வாழத் தொடங்குகின்றான் சிறுவன். இவன் இருப்பது யூத-இத்தாலிய குடியிருப்பு. இவர்கள் அனைவரும் யூடிஸ் மொழி பேசுபவர்கள். தமது கலாச்சாரத்தில் மிகவும் இறுக்கமானவர்கள். சிறுவன் இவை புதியவை. குழப்பமடைகின்றான். பெற்றோரை எதிர்பார்த்து தனது தாத்தாவின் அறையிலேயே தங்குகின்றான். படிப்படியாக அந்தக் குடியிருப்பில் தங்கியிருக்கும் சிறுவர்களுடன் நட்பு ஏற்பட்டு அவர்களில் ஒருவனாகி விடுகின்றான்.

உலக கோப்பை நெருங்குகின்றது. சிறுவின் தந்தையின் நணபனின் பரிச்சயம் கிடைக்கின்றது. தநதையின் நண்பன், இராணுவ ஆடசிக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டமைக்காக பொலிசாரின் தேடலில் காயமடைகின்றான். உலக கோப்பையில் பிரேசில் வெற்றி பெற்றுவிடுகின்றது. காயப்பட்ட தந்தையின் நண்பனுக்கு தாத்தாவின் வீடடில் அடைக்கலம் கொடுக்கின்றான். சிறுவனுக்கு இப்பொழுது உலகம் புரியத் தொடங்குகின்றது. உதைப்பந்தாட்டத்துக்கு அபபால் உள்ள உலகம் புரியத் தொடங்குகின்றது. பக்கத்து வீட்டு தாத்தா இவனை வேறோர் அறைக்கு அழைத்துச் செல்கின்றார். அங்கே தாயார் உள்ளார். தங்தை தாத்தா கூறியது போல் "எப்பொழுதும் போல் பிந்தி வருவார்" எனத் தாய் தெரிவிக்கின்றாள். சிறுவனும் தாயும் திரும்புகின்றனர்.

இயக்குனர் வித்தியாசமான சூழலில் தளத்தில் இயங்குகின்றார். சிறுவனின் அநாதரவு, பிரேசிலின் தேசிய அணி உலகக் கோப்பையை வெற்றி பெற்றது. இது பிரேசிலிற்கு சர்வதேச அரங்கில் நல்ல பெயர் வங்கியாக செயற்படும். மூன்றாவதாக பிரேசிலின் அரசியல் சூழல். உண்மையில் இப்படம் உதைப்பந்தாட்டத்துக்கும், அரசியல் சூழலுக்குமான இடை வெட்டாகவே இருக்க வேண்டும், இயக்குனர் சிறுவனின் தளத்தில் இயங்கிக் கொண்டு இவ்விரண்டையும் புறச் சூலலில் இயங்கச் செய்துள்ளார். இது ஓர் மிகவும் இயல்பான யதார்த்தமான படத்தை கொடுத்துள்ளது. படத்தை பார்க்கும் பொழுது பார்வையாளர்கள் அங்கு நிலவும் அரசியல் கொடூர சூழலையும், உதைப்பந்தாட்ட இரசிக வெறித்தன்மையையும் உணரக் கூடியதாகவுள்ளது. இதனை ஓர் சிறுவர் சினிமாக கூறுவதை விட, அரசியல் சினிமாகவே கூறலாம்.

சிறுவனின் உணர்வுகளுக்கு இயக்குனர் முக்கியத்துவம் அளித்துள்ளார். சிறுவன் தனது வீட்டிற்கு தொலைபேசியல் அழைக்கும் பொழுது, தொடாந்து மணிஓசை கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அறையின் வெறுமையை கமாரா படமாக்கியுள்ளது. பக்கத்து வீட்டு தாத்தாவுடனான உறவு மேடு பள்ளம் போல் அலை மோதினாலும், இவர்களிடையே நெருக்கத்தை கொடுக்கின்றது. பக்கத்து வீட்டு தாத்தாவும் ஒருவருமற்றவர். இருவரது வெறுமையும் ஒன்று என்பதை இருவரும் தனித்தனியாக தங்களது அறைகளில் இருந்து சாப்பிடுவதை காட்டுவதன் மூலம் காட்டுகின்றார். இயக்குனர் சின்னச் சின்ன உணாவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தள்ளார்.

I wanted to be black and fly பிரேசிலின் பெலேயின் தீரத்தை பார்த்து விட்டு சிறுவன் கூறுவது இது. சிறுவனின் உலகில் அனைவரும் ஒன்றே. மற்றவர்கள் பிழை விடலாம் கோல் காப்பாளர் பிழை விடக் கூடாது போன்ற கூர்மையான வசனங்கள் படத்துக்கு மேலும் வலூவூட்டுகின்றன. கடந்ந வருட ஒஸ்காருக்கு இறுதிச் சுற்றிற்கு தெரிவான இப்படம் மிகவும் குறிப்பிடத்தக்க படம்.

இயக்குனர் Cao Hamburger சிறப்பாக இயக்கியுள்ளார்.

இப்படத்தை மார்கம் வீடியோ உட்பட்ட அனைத்து ஆங்கில வீடியோ கடைகளிலும பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாங்கவும், விற்கவும்...

Brampton

$413,000
4 Bedrooms, 3 Washrooms
New 2348 Sqft. Detached
Upgraded & Modified Beautiful House
In a Very Quite Neighbourhood

Yonge/Henderson

$149,000
Well Established Business, It Has Been There For Years, A Good Family Business With High Income Return. Average Sales $17,000/Week

Steeles/9th Line

$499,900
4 Bedrooms, 4 Washrooms
Starlane Home In Markham, 9' Ceiling,Seperate Side Entrance, Excellent Neighbourhood

Weston/Rutherford

$349,800
3 Bedrooms, 3 Washrooms
Spacious And Bright, Convenient Location, School, Hwy 400, Vaughan Mills Mall

Hwy 427/Rexdale


$199,900
2 Bedrooms, 1 Washrooms
Tridel/Hullmark Luxury Condo Backing Onto The Conservation Land, Over Looks Ravine From Balcony.

Markham/Bur Oak

$349,900
3 Bedrooms, 3 Washrooms
Luxury Freehold W/Lots Of Upgrades, Convenience With Go Station And Bus Routes, Junior & High Schools.

Ellesmere/Morningside


$114,900
2+1 Bedrooms, 2 Washrooms
Beautiful Townhome On Ground Level Close To Hospital, U Of T, 401 & T.T.C.

Birchmount/Finch

$169,900
3 Bedrooms, 2 Washrooms
Newly Renovated, End Unit, 24 Hrs Se-curity, Ens. Locker & Laundry, Air Con. & Cable Incl. In Maint.

16th Ave/9th Line

$539,900
5 Bedrooms, 4 Washrooms
Gorgeous & Immaculate Exeutive 5 Brs Hm Loaded W/Upgds, Approx.3000 Sqft, Over $80K Upgrades

Midland/Eglinton


$579,900
This Is An Investment Property Allow-ing Mulpiple Uses Currently Used As Medical Walk-In Clinic With Finished Basement(800 Sq Ft.)

Middlefield / Finch

$179,900
2 Bedrooms, 1 Washrooms
Clean, Bright, Beautiful (0-5) Years Low Rise Condo, Close To Woodside Square Mall, Gta Square, Temple, Wor-ship Places. 24 hrs TTC

Jane/Major Mac


$249,900
Restaurant for Sale
Call for More Info

NO
- Pressure
- Commitment
- Cost

On Approximate 1.4 Acres Of Land, 20,000 Sq ft Banquet Hall Elegant, Exquisite And Posh From The Moment You Walked In Is Breathtaking.

Ganesh Thangarajah
Real Estate Broker
Cell: 416-994-9046

RAJ Ariyanayagam Pathmarajah
Real Estate Broker
Cell: 416-930-4663

4+1 Bedrooms, 3 Washrooms
Freehold Townhouse On Child Safe Court, Spacious And Bright Conve-nient Location Close To School And Hwy 401

3 Bedrooms, 2 Washrooms
Tastefully Decorated & Maintained. Bright & Spacious Rooms. Money Spent In Renovation

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife Today Realty Inc., Brokerage*
Independently Owned And Operated

31 Progress Avenue, Suite 210
Toronto, ON M1P 4S6
Office: 416-298-3200



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org